விலை : 20:00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 23 செவ்வாய்க்கிழமை (08.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 232


### யாழ்., கொழும்பில் ரி.ஐ.டி தேடுதல்

## ஆவா குழு முக்கியஸ்தர் உட்பட அறுவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ் கொக்குவில் நந்தாவில் பகுதியில் பொலிஸார் மீது வாள் வெட்டு தாக்குதல் மேற்கொண்ட சந்தேகத்தின் பேரில் பொலிஸா ரால் தேடப்பட்டு வந்த ஆவா குழு முக்கியஸ்தர் உட்பட 6 பேர் பயங் கரவாத தடுப்பு பிரிவினரால் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றையதினம் கைது செய்யப் பட்டுள்ளனர்.

நந்தாவில்பகுதியில்கடந்த யூலை மாதம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 10 க்கும் மேற்பட்ட 24

## மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைப்பு; தேர்தல்கள் ஆணையாளர் ஆட்சேபம்



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்காக இரண்டு சட்டமூலங்களைத் திருத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களிடம் கூறு கையில், நாடாளுமன்றம் எடுக்கும் தீர்மானத்துக்குக் கட் டுப்படவேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணை யகத்துக் குள்ளது. எனினும், ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு விரோத மாக தேர்தல்களை ஒத்திவைப்பதற்காக ஓரிரு 24

- வாக்குறுதியை மீறினார் சம்பந்தர்
- வ.மா சபையை தொடர்ந்து குழப்பவும் ஏற்பாடு

# முதலமைச்சருக்கு எதிராக மீண்டும் சதித்திட்டம்

## முறியடிக்காவிட்டால் தமிழர்கதி அந்தோ!

### தமிழ் புத்திஜீவிகள், அரசியல் விமர்சகர்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதி ராக மீண்டும் சதித்திட்டம் தீட்டுவதில் தமிழரசுக்கட்சி புது வியூகம் அமைத்து வருவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (23ஆம் பக்கம் பார்க்க)

## திருடர்கள் சொல்லும் திருடர்!

(சிலாபம்)

வெளியுறவுத் துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க மீது குற்றம் சுமத்தும் கூட்டு எதிர்க் கட்சியின் தலைவர்களே மிகப் பெரிய 24



க.பொ.த (உ/த) பரீட்சை
இன்று ஆரம்பம்
சிறந்த பெறுபேறுகளுடன்
சித்திபெற மாணவர்களை
வாழ்த்துகின்றோம்.
- வலம்புரி
கல்விப்பிரிவு

## போதை பொருளுடன் அமை.செயலாளர் நேற்று கைது

(கொழும்பு)

பொலிஸ், விசேட அதிரடிப் படையினரால் பிரபல அமைச்சர் ஒருவரின் பிரத்தியேக செயலாளர் ஒருதொகை போதைப் 23

## முறைகேடுகள் இடம்பெற்றால் அறிவிக்கவும்!

(கொழும்பு)

நாடு முழுவதும் க.பொ.த. உயர் தரப் பரீட் சைகள் இன்று ஆரம்ப மாகவுள்ள நிலையில் அது 24

## நீதிமன்றத்தை நாட முடிவு

(கொழும்பு)

மாகாண சபை தேர்தல்கள் பிற் போடப்படுவதற்கு எதிராக நீதிமன் றத்தை நாடவுள்ளதாக 23

## இந்த ஆண்டின் இறுதிக்குள் மகிந்த தலைமையில் அரசு

### குமார வெல்கம எம்.பி. ஆரூடம்

(கொழும்பு)

2017 ஆம் ஆண்டின் இறுதிக் குள் மகிந்த ராஜபக்ஷ தலைமை யிலான புதிய அரசாங்கம் உரு வாக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரி வித்துள்ளார்.

பதுளை பசறையில் நேற்று நடை பெற்ற பொதுக் கூட்டம் 24



## சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் இராஜினாமா

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபையில் அமைச் சரவையில் எழுந்துள்ள ஊழல் மோசடி விசாரணைக் குற்றச்சாட்டு சர்ச்சையை அடுத்து சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தனது பதவியை இராஜினாமா செய்துள் ளார்.

வவுனியாவில் உள்ள தனது இல் லத்தில் நேற்று மாலை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் 24



## அதிக அதிகாரங்களுடன் கூடிய விசேட பிரிவுகளின் ஊடாக

# யாழில் கைதுகள் தொடரும்



### பொலிஸ்மா அதிபர் பூஜித உறுதி

(கண்டி)

யாழ் மாவட்டத்தில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படுகின்ற கைது நடவடிக்கைகள் அதிக அதி காரங்களுடன்கூடிய விசேட பிரிவுகளின் ஊடாக தொடர்ந் தும் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர திட்டவட்டமாக அறிவித்துள்ளார். 24

### வடக்கில் இன்று

## கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகளை நிபந்த னைகள் எதுவுமின்றி உடனடி யாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி அரசியல்கைதி களை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டில் இன்றைய தினம் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெறவுள்ளது. 24


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல் நிலத்தில் தீ பரவல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆவரங்கால் சிவன்கோவிலுக்கு எதிராக உள்ள மேய்ச்சல் நிலம் திடீரென தீப்பற்றியதில் 10 பரப்பு மேய்ச்சல் நிலம் தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்றைய தினம் பிற்பகல் ஒரு மணியளவில் குறித்த மேய்ச்சல் நிலத்தில் திடீரென தீப்பற்றியுள்ளது. தீ வேகமாக பரவியதால் உடனடியாக தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. தீயணைப்பு பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் உடனடியாக அந்த இடத்துக்கு வந்த தீயணைப்பு படையினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர். (செ-9)


## Best of Lucks My dear Students

இம்முறை Economicszone, Economics Hall இல் கல்வி கற்று 2017 உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் எனது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற பாராட்டி வாழ்த்துகின்றேன்.

2015 ➔ 13 மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதி (மாவட்ட நிலை 01, 02 உள்ளடங்கலாக)

2016 ➔ 17 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி

2017 ➔ ???

கடந்த வருடங்களை போன்று இம்முறையும் மாவட்ட நிலையில் முன்னணி பெறுபேறுகள் உள்ளடங்கலாக 30இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் அனுமதி பெற எதிர்பார்க்கப்படுகிறது.

0774316814

என்றும் உங்களுடன்

R.Tharshan BBA (Spl in FM)

கணக்கீட்டு மற்றும் பொருளியல் ஆசிரியர்

Success to be Contented...... (055)



வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532


# துருக்கி முன்னாள் பிரதமர் அமைச்சர் ரவியுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் துருக்கி நாட்டின் முன்னாள் பிரதமர் கலாநிதி அஹமட் டவ்டொக்லு, வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பு நேற்றைய தினம் மாலை வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் நீண்டகால நட்புறவு தொடர்பான இந்த சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரையும் கலாநிதி அஹமட் டவ்டொக்லு சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மத்திய வங்கியின் பிணை், முறிகள் விற்பனை மோசடி விவகாரத்தில் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டிருக்கும் முன்னாள் நிதியமைச்சரும், தற்போதைய வெளிவிவகார அமைச்சருமான ரவி கருணாநாயக்கவை பதவிவிலகுமாறு கோரி வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் அமைச்சர் ரவிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றையும் சபாநாயகரிடம் கையளித்திருக்கின்றனர்.

அந்த வகையில் குறித்த பிரேரணை தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காகவும், இம்மாத நாடாளுமன்ற அமர்வுகள் குறித்து முடிவுகளை எடுக்கவும் நாடாளுமன்ற அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் நடைபெறவுள்ளது. இதுதவிர இன்றைய தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் மாலை 6.30 அளவில் கூடவுள்ள அமைச்சரவை கூட்டத்திலும் இந்த விடயம் தொடர்பாக ஆராயப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (செ-11)

# ஹன்ரர் வாகனம் மூன்று பொலிஸாரால் நேற்று மீட்பு

(கரணவாய்)

பொலிஸாருக்கு தெரியாது பிற பகுதிகளில் மறைந்துவைக்கப்பட்டிருந்த மூன்று ஹன்ரர் வாகனங்கள் நேற்று மதியம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துன்னாலைப் பகுதியில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைப்பு தேடுதலை நடத்தியபோது சட்டவிரோத மணல் அகழ்விற்குப் பயன்படுத்தப்பட்ட ஹன்டர் வாகனங்கள் வேறு சில பகுதியில் மறைத்து வைக்கப்பட்டமை புலனாய்வுத் தவல்கள் மூலம் கண்டறியப்பட்டது.

இதனடிப்படையில் வரணிப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஹன்டர் வாகனம் ஒன்று, மோட்டார் சைக்கிள் ஒன்று, துவிச்சரக்கர வண்டி ஒன்று என்பவற்றை பருத்தித்துறை பொலிஸார் மீட்டனர்.

நெல்லியடிப் பொலிஸார் வரணி பகுதியில் ஒரு ஹன்டரும், கரணவாய் பகுதியில் ஒரு ஹன்டருமாக இரண்டு ஹன்டர் வாகனங்களைக் கைப்பற்றியிருந்த நிலையில் ஹன்டர் வாகன உரிமையாளர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (செ-60)


வாடகைக்கு

நல்லூர் செம்மணி வீதியில் A/C, Non A/C அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

0774446963 (061)


# மரண அறிவித்தல்



## அமரர் செல்லையா வாமதேவா

**(ஓய்வுபெற்ற Market Department அரசாங்க ஊழியர்)**

**பிறப்பு:-1926.03.21**

**இறப்பு:-2017.08.06**

யாழ்.அச்சுவேலி பத்தமேனியை பிறப்பிடமாகவும், கரணவாய் சோளங்கனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா வாமதேவா அவர்கள் 2017.08.06 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-முத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தவனம்-சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான அழகம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெகதீஸ்வரி (சோளங்கன்), ஜெயராணி (சுவிஸ்), நாகேந்திரராஜா (கொழும்பு), தவயோகநாதன் (லண்டன்), நேசமலர் (அளவெட்டி), விஜயராணி (கனடா), பாஸ்கரலிங்கம் (லண்டன்), பகீரதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குருகுலசிங்கம் (சோளங்கன்), சிவானந்தராஜா (சுவிஸ்), டிலானி (கொழும்பு), கிரிஜா (லண்டன்), சிவசுப்பிரமணியம் (அளவெட்டி), ரவீந்திரன் (கனடா), தயாவதனி (லண்டன்), ரவிச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், [லோகதர்சினி, ஜெயராசா, குபதர்சன் (பின்லாந்து), மிதுர்சினி] [வானுசன், தனுசன், நிருஷன் (சுவிஸ்)] [சாணி, அசித்த (இத்தாலி), சாணிக்க, அணில் (கொழும்பு)] [தேசிகா, ராகவி, யதுர்சன் (லண்டன்)] [விதுரசன் (கனடா), சிந்துஜன், யதுசனா, துவிசன் (அளவெட்டி)] [துர்சினி, வைஸ்ணவி, ரம்யா (கனடா)] [சாருசன், சாருஷா, சாயுரன் (லண்டன்)] [டிலக்சன், மனோசன், சபீனா (கனடா)] ஆகியோரின் பாசமிகு பேரனும், [றஜன், மத்தியுஸ் (இத்தாலி)] [அணிஷா, ஷஹேலி (கொழும்பு)] [தருண், அபிஷா (பின்லாந்து)] ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 2017.08.08 செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூவரசந்திட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:-குடும்பத்தினர்**

**ச.குருகுலசிங்கம் -0770799450**

**தவயோகநாதன் (UK)-00447837101769**

**பாஸ்கரலிங்கம் (UK)-00447846811640**

**ஜெயராணி (Swiss)-0041413610703**

**பகிரதி(Canada)-0014164592609**

**விஜயராணி (Canada)-0014166332616**

**நேசமலர் (SriLanka)-0778233081**

**சோளங்கன்**
**கரணவாய்**
**தெற்கு,**
**அளவெட்டி.**

(அ-9272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்; 3 கடற்படையினருக்கு வலைவீச்சு

(கொழும்பு)

கடந்த 2008, 2009 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் கொழும்பில் வைத்து 5 மாணவர்கள் உட்பட 11 தமிழர்கள் கடத்தப்பட்டமை குறித்து மேலும் மூன்று கடற்படையினர் கைது செய்யப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தக் கடத்தல் விவகாரம் தொடர்பில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி.தசநாயக்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் மூன்று கடற்படையினர் கைது செய்யப்படவுள்ளதாக தெரியவருகிறது. (இ-7)



## நீதிமன்ற சுயாதீனத்தில் தலையிட ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை

### அஜித் பெரேராவுக்கு விஜயதாஸ பதிலடி



(கொழும்பு)

நீதிமன்றத்தின் சுயாதீனத்தில் தலையிட ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட யாருக்கும் எதுவித அதிகாரமும் இல்லை என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகள் குறித்து நீதியமைச்சரிடம் ஊடகவியலாளர்களால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

'நீதியின்சுயாதீனத்தையோ அல்லது நீதிமன்றத்தின் செயற்பாடுகளையோ விமர்சிப்பதற்கு யாருக்கும் அதிகாரமில்லை. அண்மையில்அமைச்சர் அஜித்பெரேரா இது குறித்த மிகவும் மோசமான கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்.

நீதிமன்றின் நகர்வுகள் குறித்த செயற்பாடுகளின் பொறுப்பை என் மீது சுமத்த அவர் முயற்சிக்கின்றார். ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகளில் சட்டம் ஒழுங்காக செயற்படும். நாம் எச்சந்தர்ப்பத்திலும் சட்டத்தைக் கையில் எடுக்கவோ விமர்சிக்கவோ கூடாது என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

## ரவி மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

### ஐ.தே.கட்சி-சு.கட்சி விசேட ஆலோசனை

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆலோசனை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரத்தில் அமைச்சர் ரவி கருணாநாயக்க மீதான குற்றச்சாட்டுக்கள் அரசாங்கத்துக்கு பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளதால், அது குறித்து அரசின் இரு பிரதான கட்சிகளும் கவனம் செலுத்துவதாக அறியமுடிகின்றது.

இந்த நிலையில், குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து இன்று கட்சித் தலைவர்களின் விசேட கூட்டம் இடம்பெறவுள்ளதாக சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 37 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயினுடன் பாக்.பிரஜை கைது

தாய்லாந்திலிருந்து கடத்தி வரப்பட்ட 37 இலட்சம் ரூபாய்பெறுமதியான ஹெரோயினுடன் பாகிஸ்தான் பிரஜையொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து பெருந்தொகையான ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்தார்.

பயணப் பொதிக்குள் சூட்சுமமான முறையில் ஹெரோயின் கடத்தி வரப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவதனை தேர்தல் ஆணைக்குழு விரும்பவில்லை

### மகிந்த தேசப்பிரிய விளக்கம்



(கொழும்பு)

தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படுவதனை தேர்தல் ஆணைக்குழு விரும்பவில்லை என ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பில் அரசாங்கம் இரண்டு சட்டங்களை அறிமுகம் செய்ய உத்தேசித்துள்ளதாகவும் இவ்வாறு சட்டங்களை அறிமுகம் செய்தால் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படுவதற்கான சாத்தியங்கள் குறைவு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் கொண்டு வரப்படும் சட்டங்களின் அடிப்படையிலேயே செயற்பட வேண்டியது தேர்தல் ஆணைக் குழுவின் பொறுப்பாகும் என சுட்டிக் காட்டியுள்ள அவர் தேர்தல் தொடர்ச்சியாக ஒத்தி வைக்கப்படுவதனை 'தேர்தல் ஆணைக்குழு விரும்பவில்லை எனவும் தெரிவித்தார். (இ-7)

## 7 மாதங்களில் 350 பேர் டெங்கால் உயிரிழப்பு!

### ஒரு இலட்சத்து 30,000 பேர் பாதிப்பு

இவ்வருடத்தின் கடந்த ஏழு மாதமும் 6 நாட்களில் நாட்டில் டெங்கினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 350 வரை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

ஒரு இலட்சத்து 30 ஆயிரம் நோயாளர்கள் நாடு முழுவதிலுமிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளதரகவும் அப்பிரிவு தெரிவித்துள்ளது.

அடிக்கடி பெய்து வரும் மழை காரணமாக டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருகும் அபாயம் உள்ளதாகவும் இதனால், சூழலை சுத்தமாக வைத்திருக்க சகலரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-7)

## காருக்குள் சிக்கி மூச்சுத்திணறி சிறுவன் மரணம்

(கொழும்பு)

அம்பாறை, ஒலுவில் பிரதேசத்தில் ஐந்தரை வயதுச் சிறுவன், காருக்குள் அடைபட்டு மூச்சுத்திணறி, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் உயிரிழந்துள்ளாரென, அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒலுவில் 6ஆம் பிரிவைச் சேர்ந்த முஹம்மது லாபீர் முஹம்மது இன்ஸாப் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

சிறுவன், தனது வீட்டுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரைத் திறந்து உள்ளே சென்று, காரின் கதவுகளை பூட்டிக் கொண்டுள்ளான்.

எனினும், சிறுவனால் காரின் கதவுகளைத் திறக்க முடியாததால், மூச்சுத் திணறல் ஏற்பட்டு, காருக்குள்ளேயே, சிறுவன் உயிரிழந்துள்ளான். பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## மக்களின் நம்பிக்கை சிதறடிக்கப்பட்டுள்ளது

### சுசில் பிரேமஜயந்த கவலை



(கொழும்பு)

மக்களின் நம்பிக்கை சிதறடிக்கச் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தனது நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்புவதற்கு சிரமப்படக்கூடுமென சுசில் தெரிவித்தார்.

பிணைமுறி மோசடிகள் தொடர்பில் ரவி கருணாநாயக்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் சர்வதேச அரங்கில் ரவி கருணாநாயக்கவின் நம்பகத் தன்மை தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் காரணமாக வெளிவிவகார அமைச்சரின் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளமை [illegible] என அவர் தெரிவித்தார். (இ-7)

## ஊழல் மோசடிக்கு இடமளிக்கப்படாது

### சம்பிக்க கூறுகிறார்



(கொழும்பு)

ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்படாது என மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்துடன் தொடர்புடையவர்கள் பற்றிய ஊழல் மோசடிகள் குறித்தும் விசாரணை நடத்தப்படுவதாகவும் இதன் ஊடாக அரசாங்கம் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோரை காப்பாற்றவில்லை என்பது புலனாகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி கிரேட் காளியைச் சந்தித்த ஹோலி

இந்தியாவைச் சேர்ந்த மல்யுத்த வீரர் தி கிரேட் காளியும் நட்சத்திர கிரிக்கெட் வீரர் விராட் ஹோலியும் இலங்கையில் நண்பர்கள் தினத்தையொட்டி சந்தித்துள்ளனர்.

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர் தலீப் சிங் ராணா. 2.16 மீற்றர் உயரமும் 157 கிலோ எடையுடன் மாமிச மலையாக வலம் வந்த இவர், அமெரிக்காவில் நடைபெற்றுவரும் WWE எனும் மல்யுத்த போட்டியில் பங்கேற்று உலக கவனத்தை ஈர்த்துள்ளார்.

இந்நிலையில், தி கிரேட் காளி என்று அழைக்கப்படும் தலீப் சிங் ராணாவும் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து வரும் இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலியும் அங்குள்ள சொகுசு ஹோட்டலில் சந்தித்து பேசியுள்ளனர்.

நண்பர்கள் தினத்தை முன்னிட்டு இருவரும் சந்தித்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாக சுற்றி வருகின்றது.

இந்த புகைப்படத்தை தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள விராட் ஹோலி, "தி கிரேட காளியுடன் சிறப்பான சந்திப்பு. என்ன மாதிரியான மனிதர் அவர்" என்று குறிப்பிட்டுள்ளார்.



# ஸ்ரீசாந்த் மீதான வாழ்நாள் தடை நீக்கம்

## கேரள உயர்நீதிமன்றம் உத்தரவு



ஸ்ரீசாந்த் மீதான வாழ்நாள் தடையை இந்திய கிரிக்கெட் சபை நீக்க வேண்டும் என்று கேரள உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளராக திகழ்ந்தவர் கேரளாவைச் சேர்ந்த ஸ்ரீசாந்த். இவர் ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக விளையாடினார். 2013ஆம் ஆண்டு நடைபெற்ற சீசனில் ஸ்பொட் பிக்சிங்கில் ஈடுபட்டதாக ஸ்ரீசாந்த் உட்பட மூன்று வீரர்கள் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

இதனால் ஸ்ரீசாந்த் டெல்லி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இதனால் பிசிசிஐ அவருக்கு தடைவிதித்தது. இதற்கிடையில் டெல்லி கோர்ட்டில் ஸ்ரீசாந்த் வழக்கு நடைபெற்றது. விசாரணை முடிவில், டெல்லி கோர்ட் ஸ்ரீசாந்தை விடுவித்தது.

ஆனால், பிசிசிஐ இவர் மீதான தடையை நீக்கவில்லை. சமீபத்தில் ஸ்கொட்லாந்து சென்று ரி20 லீக் தொடரில் விளையாட ஸ்ரீசாந்த் தடையில்லா சான்றிதழுக்கு விண்ணப்பித்திருந்தார். பிசிசிஐ சான்றிதழ் கொடுக்க மறுத்துவிட்டது.

இதனால் கடும் அதிருப்தி அடைந்த ஸ்ரீசாந்த், 'டெல்லி கோர்ட் என்னை 2015ஆம ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் திகதி குற்றமற்றவர் என்று வழக்கில் இருந்து விடுவித்த பின்னரும், பிசிசிஐ எனக்கு ஆயுட்கால தடைவிதித்துள்ளது.

இந்த தடையை ரத்து செய்ய வேண்டும்' என்று கோரி கேரள மாநில உயர்நீதிமன்றில வழக்கு தொடர்ந்திருந்தார். அந்த மனுவில் பிசிசிஐயின் தடை அரசியலமைப்பு உரிமையை மீறும் செயலாகும் என்று கூறியிருந்தார்.

இந்த் வழக்கின் வாதங்கள் நிறைவடைந்த நிலையில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்போது ஸ்ரீசாந்த் மீதான தடையை நீக்க வேண்டும் என்று பிசிசிஐக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ஜஸ்ரின் காட்லின் தலைவணங்க போல்ட் தகுதியானவர்தான் - ஹோலி



காடலின் தலைவணாங்க உசைன் போல்ட் தகுதியானவர். அவரை விட சிறந்த வீரர் யாரும் இல்லை என விராட் ஹோலி புகழாரம் சூட்டியுள்ளார்.

100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் முடிசூடா மன்னனாக விளங்கியவர் உசைன் போல்ட். சர்வதேச போட்டிக்கு அடியெடுத்து வைத்ததில் இருந்து ஒருமுறை கூட தோற்றது கிடையாது என்ற சாதனையுடன் லண்டனில் நடைபெற்ற உலக தடகள சம்பியன்ஷிப்ஸ் தொடரில் கலந்து கொண்டார்.

இந்தத் தொடர்தான் அவருடைய கடைசி தொடர் என்று ஏற்கெனவே அறிவித்திருந்தார். இந்தத் தொடரிலும் வெற்றி பெற்று தோற்கடிக்க முடியாத வீரராக வலம் வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அமெரிக்காவின் 35 வயதான ஜஸ்டின் காட்லின் அதிர்ச்சிகரமாக உசைன் போல்டை தோற்கடித்தார். உசைன் போல்ட் தோல்வியை ரசிகர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலி, உசைன் போல்டின் தீவிர ரசிகர். அவர் ஓட்டத்தை தவறாமல் பார்த்து ரசிப்பார். இந்திய அணி கடந்த ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் விளையாடிக் கொண்டிருக்கும் போது ரியோ ஒலிம்பிக் நடைபெற்றது. உசைன் போல்ட் ஓட்டத்தை பார்க்க ஆவலாக இருப்பதாக கூறியிருந்தார்.


உலக சம்பியன்ஷிப் போட்டியில் காட்லின் வெற்றி பெற்றாலும், தலைவணங்கி உசைன் போல்டுக்கு பிரியாவிடை கொடுத்தார். இந்த மரியாதைக்கு உசைன் போல்ட் தகுதியானவர். அவரை விட சிறந்த வீரர் தடகளத்தில் யாரும் கிடையாது என்று ஹோலி கூறியுள்ளார்.

மேலும் உசைன் போல்ட் குறித்து கூறுகையில், "வீரர்கள் சிறப்பாக விளையாடி சாதனை படைக்கும்போது, அதற்காக எவ்வளவு கடின பயிற்சி எடுத்திருப்பார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களை கண்டிப்பாக பாராட்ட வேண்டும். இது மிகவும் தேவையானது. நீங்கள் வெற்றி பெறும்போது மற்றவர்கள் உங்களை பாராட்டுவார்கள்.

காடலின் தலைவணாங்க உசைன் போல்ட தகுதியானவர். ஏனென்றால், அவரை விட தடகளத்தில் சிறந்தவர் எவரும் இல்லை. இது அவருடைய கடைசி ஓட்ட பந்தயம். நான் மீண்டும் அவருக்கு வாழ்த்து தெரிவிக்கிறேன். நாங்கள் இருவரும் புமா தடகள வீரர்கள். அவரது சாதனைகள் எளிதில் முறியடிக்கப்படும் என்று என்னால் நினைக்க முடியவில்லை" என்றார்.

# இலங்கையின் தோல்விக்கு மத்யூஸும் ஒரு காரணம்

## மனம் திறந்தார் சண்டிமல்



இந்தியாவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை தோல்விக்கு மத்யூஸும் ஒரு காரணம் என இலங்கை அணித் தலைவர் தினேஷ் சண்டிமல் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கு பின்னர் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய இலங்கை அணித் தலைவர் சண்டிமல் கூறியதாவது.

இலங்கை அணியில் இடம்பெற்ற ஒரே ஒரு வேகப்பந்து வீச்சாளரான நுவன் பிரதீப் காயமடைந்து வெளியேறியது அணியில் சிக்கலை ஏற்படுத்தியது.

இலங்கை அணிக்கு வேகப்பந்து வீச்சாளர் ஒருவர் இல்லாத நிலையை ஏற்படுத்தியது. அதனை சரிசெய்ய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் திமுத் கருணாரத்ன ஒரு சில ஓவர்கள் மிதவேகப்பந்து வீசவேண்டி ஏற்பட்டது.

இந்நிலையில், மத்யூஸ் பந்துவீசாதது இலங்கை அணிக்கு மிகப் பெரிய இழப்பு என்று இலங்கை அணித் தலைவர் தினேஷ் சண்டிமல் குறிப்பிட்டுள்ளார்.

தனது காயத்தில் இருந்து இன்னும் முழுமையாக சுகம் பெறாத மத்யூஸ் பந்து வீசுவதற்கு இன்னும் தயாராகவில்லை. அவர் பந்துவீசக்கூடாது என்று இலங்கை அணி உடற்பயிற்சியாளர் ஆலோசனை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




பெண்களுக்கான யூரோ கிண்ண கால்பந்து தொடரில் நெதர்லாந்து அணி சம்பியனாகியது. டென்மார்க் அணியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற பரபரப்பான இறுதிப் போட்டியில் 4:2 என்ற கோல் கணக்கில் வென்று முதல் தடவையாக சம்பியனாகி மகுடம் சூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1,21,891 சுற்றுலாப் பயணிகள் மேமாதத்தில் இலங்கை வருகை

(கொழும்பு)

2017 ஆம் ஆண்டு மே மாதத்தில் இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 891 ஆக பதிவு செய்யப் பட்டு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2.5 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2017 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2016 ஆம் ஆண் டின் இக் காலப்பகுதி யுடன் ஒப்பிடுகையில் 4.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து நாடுகளாக இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகள் விளங்குகின்றன. இக்காலப் பகுதியின் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 51.4 சதவீதத்திற்கு பங்களிப்பு செய்தன.

2017 ஆம் ஆண்டு மே மாத காலப் பகுதியில் சுற்றுலா சார்ந்த வருமானங்கள் 209.1 மில்லியன் டொலருக்கு அதிகரித்தது. (இ-7)


## SATS-TECH ENGINEERS

மாதாந்தம் வெறும் நூற்று ஐம்பது மட்டும் செலுத்தி உங்கள் அபிமான தமிழ் சானல்களை கண்டுகளிக்க முடியும்.




No.298, K.K.S. Road, Jaffna (C-9276) :021 222 8812, 071 098 6224



## TECHINCIAN/டிஷ் ஆண்டெனா பொருத்துநர்கள் உதவியாளர்கள் தேவை/STORE KEEPER

கொழும்பில் இயங்கி வரும் எமது டிஷ் ஆண்டெனா மற்றும் கேபிள் டிவி உபகரணங்கள் விற்பனை நிலையத்திற்கு கொழும்பில் தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய STORE KEEPER / TECH NICIAN மற்றும் டிஷ் ஆண்டெனா மற்றும் இலத்திரனியல் பொருட்கள் விற்பனையாளர்கள் மற்றும் ரிப்பேர்/டிஷ் ஆண்டெனா பொருத்துநர்கள் மற்றும் உதவியாளர்கள் உடன் தேவை. தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும். உணவு, தங்குமிடம் இலவசம்.

உடன் தொடர்பு கொள்ளவும்

Contact:
077 771 0785
SATS-TECH ENGINEERS(PVT) LID
No.51/102 Woulfendhal street,
Colombo 13.

(சி/9276)


# சட்டவிரோத மணல் அகழ்வு அரியாலையில் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

அரியாலை மணியந்தோட்டம் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ந்து இடம்பெறுவதாக பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நள்ளிரவு 12 மணிமுதல் காலை 5 மணி வரை நாள் ஒன்றுக்கு 30 இற்கு மேற்பட்ட உழவியந்திரங்கள் மூலம் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல முறை தகவலளிக்கப்பட்ட போதும் இது வரை சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாதது வருத்தம் அளிப்பதாகவும் இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ந்து இடம் பெறுமிடத்து கடல் நீர் கிராமங்களுக்குள் புகும் அபாயம் இருப்பதா கவும் பிரதேச மக்கள் தெரிவித்துள் ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை யெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(இ-10-51-107)


## வேலையாள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு அடிப்படைக் கணக்கியல் மற்றும் கணனி அறிவுள்ள அதே இடத்தைச் சேர்ந்த ஆண்/பெண் உத்தியோத்தர் உடன் தேவை. அடிப்படைச் சம்பளம் 15000/- வழங்கப்படும் (சி/9277)

தொடர்பு: 071 867 6424


## 2017/2018 ஆண்டு கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை 01.09.2017 தொடக்கம் 31.08.2018 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்களை 08.08.2017ம் திகதி முதல் 15.08.2017 வரை வைத்தியசாலையிலுள்ள நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை பின்வரும் கொடுப்பனவினை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

| சேவை விபரம் | மீளளிப்புச் செய்யப்படாத தொகை | மீளளிப்புத் தொகை |
|---|---|---|
| வாகனப் பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 10,000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை 22.08.2017 திகதி மு.ப 10.00 மணிக்கு முன் நேரடியாக மீளளிப்புத் தொகையினைச் செலுத்தி ஒப்படைக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் யாவும் "கி.சின்னராசா, தலைவர், நோயாளர் நலன்புரிச் சங்கம், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி" முகவரியிடப்பட்ட கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு (Sealed) அதன் இடது பக்க மேல் மூலையில் "2017/2018 ஆண்டுக்கான வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி" என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

சகல கேள்விப்பத்திரங்களும் 22.08.2017ம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும்.

சி.ஜீவநாயகம்
செயலாளர்.

(சி/9278)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். திரு.

## மாணிக்கம் சண்முகராஜா

(வில்லூத்தகடு இராஜன். இராஜன் மினிபஸ் உரிமையாளர்)



தோற்றம் 24.05.1955 — மறைவு 08.08.2015

திதி : 08.08.2017

உலக வாழ்வு நிலையில்லாதது
என்பதை யாமறிவோம்.
ஆயினும் எமையெல்லாம் தவிக்கவிட்டு இத்தனை
விரைவாகப் பிரிந்துவிட்டாலும் ஈராண்டு
நிறைவில் ஆறாத மனக்கவலை உங்கள்
ஆத்மா சாந்தி பெற இறைவனை
இறைஞ்சுகின்றோம்.

82/17, 3ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (9866)

குடும்பத்தினர்.

# இராசி பலன்

08.08.2017
(ஆடி 23, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பிரதமை பின்னிரவு 12.51 மணிவரை
அவிட்டம் பின்னிரவு 5.59 மணிவரை
சுபநேரம் 10.34-12.04 மணிவரை
இராகுகாலம் 3.04-4.34 மணிவரை
நான்காம் ஆடிச் செவ்வாய்

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் பூசம் மாலை 5.28 இற்கு கும்-சந் | | செவ்,புத சூரி.ராகு |
| சந் கேது | | | |
| | சனி | | குரு |

**மேடம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய் தொழிலில் அதிக பிரயாச காட்டி வெற்றிபெற முயற்சிப்பீர்கள்.

**இடபம்:** சுபகாரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, தொழில் வளர்ச்சிகளில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம்.

**கடகம்:** புதிய பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், முன்னேற்றம் கருதிய பயணமொன்று இடம் பெறலாம்.

**சிம்மம்:** நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும், நன்மைகள் நாடி வரும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழில் மேன்மையுண்டு.

**கன்னி:** தொட்ட காரியத்தில் வெற்றி பெறுவீர்கள், புண்ணிய காரியத்தில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**துலாம்:** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கலாம், தொழில் நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு, வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** வியாபார நலன் கருதி புதிய மனிதர்களைச் சந்திக்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, ஆழந்த சிந்தனையுண்டு, திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள், குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மீனம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தன்னம்பிக்கை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் மஞ்சத் திரு விழா நேற்று முன் தினம் இடம்பெற்றபோது...
(படங்கள்:-சாளின்,சதீஸ்)









வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோவிலின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்ற போது...

## வருடாந்தக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வி.சிற்சக்திவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## கலைஞர்களுக்கு உதவி வழங்க விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டிக்குட்பட்ட கலைஞர்களுக்கான உதவி வழங்கும் செயற்றிட்டத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச கலாசார அதிகாரசபையின் அங்கத்தவராக இருப்பவர்கள், மாத வருமானம் 7500 ரூபாவுக்கும் குறைந்தவர்கள், 55 வயது தொடக்கம் 77 வயதிற்கு இடைப்பட்டவர்கள் மற்றும் 15 வருடத்திற்கு மேலாக கலைச்சேவை ஆற்றிய கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க விரும்பும் கலைஞர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிமைக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேச கலாசார அதிகார சபையின் ஒருங்கிணைப்பாளரிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10-102)

## வீட்டில் வைத்து மாடு வெட்டிய இருவர் துன்னாலையில் கைது!

துன்னாலைப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் வைத்து சட்ட விரோதமான முறையில் மாடு வெட்டிய இருவரைத் தாம் கைது செய்துள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.


நேற்று முன்தினம் அதிகாலையில் துன்னாலைப் பகுதியை பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து சுற்றிவளைப்பு தேடுதலில் ஈடுபட்டிருந்த போது அப்பகுதியில் சட்ட விரோதமான முறையில் மாடு வெட்டிக்கொண்டிருந்த இருவரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

## சைவப்புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகாவித் தியாலயத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப் புலவர் மு.திருஞான சம்பந்த பிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ளது.

இச் செயற்குழுக்கூட்டத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழா நடத்துதல் மற்றும் சைவப் புலவர் இளஞ்சைவப்புலவர் தேர்வு பற்றிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளமையினால் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப் புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார். (இ-7)











இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் கந்தபுராண எழுச்சி விழாவின் பத்தாம் நாள் நிகழ்வுகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லை ஆதீனத்தில் நடைபெற்றன. இவ் விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண போக்குவரத்து, வர்த்தக வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?




யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளும் நிகழ்வுக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படாமை பலருக்கும் அதிர்ச்சியை கொடுத்திருந்தது. எனினும் இதனைப் பொருட்படுத்தாத கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட நிகழ்வில் பங்கேற்றனர்.




பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்கள் பிரதமரின் நிகழ்ச்சியைப் புறந்தள்ளினார். முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுக்கப் படாத நிகழ்வில் தாம் கலந்து கொள்ள முடியாது என இறுக்கமாகக் கூறியதுடன் நிகழ்ச்சிகளையும் புறந்தள்ளினார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் இச் செயல் த்மிழ் மக்களிடம் மிகுந்த ஆதரவைப் பெற்றிருந்தது.

எதுவாயினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை எதிர்ப்பதற்கு மூலகாரணம் கூட்டமைப்பின் ஒரு சில உறுப்பினர்கள் பிரதமர் ரணிலுக்குப் போட்டுக் கொடுத்ததன் காரணமாகவே அவர் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் முரண்பட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று எனலாம்.

எனினும் இந்த நாட்டின் பிரதமர் என்ற உயர் பதவியில் இருக்கக்கூடிய ஒருவர் வடக்கு மக்களின் நம்பிக்கைக்குரியவராக விளங்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களுடன் முரண்பட்டுக்கொள்வதென்பது அடிப்படை நியாயமற்றது என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொடர்ந்தும் அந்தப் பதவியில் இருந்தால் அவர் சமஷ்டி, அதிகாரப் பரவலாக்கம் இந்த விடயங்களிலெல்லாம் மிகவும் இறுக்கமாக இருப்பார். எனவே அவரை அந்தப் பதவியில் இருந்து விலத்துவதற்கு தனது முரண்பாடும் உதவும் என்ற அடிப்படையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கின் முதலமைச்சருடன் முரண்பட்டார் என்பது மட்டும் நிறுதிட்டமான உண்மை.

முதலமைச்சருடனான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பகை, அதன் பின்னர் முதலமைச்சருக்கு எதிராக தமிழரசுக் கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பன பற்றி யெல்லாம் இப்போது நாம் ஒரு முடிவுக்கு வரமுடியும். இருந்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முரண்பாட்டிற்கு முதலமைச்சர் இம்மியும் அஞ்சவில்லை என்பதை நினைத்து நாம் நெஞ்சை நிமிர்த்திப் பெருமைப்பட முடியும்.

பிரதமர் ரணிலுக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் இடையில் நிலவும் பனிப்போர் முடிவுக்கு வரவேண்டும் என மனோ கணேசன் கோரிக்கை விட்டார். தமிழ் அரசியல்வாதிகளில் அவர் மட்டுமே அப்படியொரு கோரிக்கையை விட்டிருந்தார். இந்தக் கோரிக்கை வெளிவந்த நிலையில் வடமாகாணத்தில் இருந்து படையினரை வெளியேற்றுவேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதிமொழி தந்தால் அவருடன் கைகோர்க்க நான் தயார் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறினார். இதை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை விடுதி மற்றும் இரத்தவங்கி திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது முதலமைச்சர் கூறினார். அவரின் இந்த உரை அவர் மீதிருந்த அன்பையும் மதிப்பையும் தமிழ் மக்களிடம் மேலும் ஒருபடி உயர்த்தியது எனலாம்.

முல்லைத்தீவில் முதலமைச்சர் ஆற்றியிருந்த உரைக்கு மறுத்தான் கொடுப்பது போல இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் வைத்து வடக் கில் இருந்து இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டாது எனக் கூறினார். எனினும் வடமாகாணத்தில் இருந்து இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் முன்வைக்கவில்லை எனலாம்.

சுருங்கக்கூறின் இலங்கை அரசு எந்த விடயங்களையெல்லாம் கூட்டமைப்பு பேசக்கூடாது என நினைக்கின்றதோ அந்த விடயங்கள் பற்றிப் பேசுவதற்கு கூட்டமைப்பினர் ஒருபோதும் தயாரில்லை என்பதே உண்மை.

## முதலமைச்சர் மீதான ரணிலின் கோபம் எதற்கானது?

ஆக, தமிழ் மக்களின் உரிமை, வடக்கு மாகாணத்தில் இருந்து படையினரை வெளியேற்றுதல் என்ற விடயங்களில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் மிகவும் நிதானமாகவும் உறுதியாகவும் செயற்பட்டார்.

இச்சந்தர்ப்பங்களில் முதலமைச்சரைச் சந்திக்க வரும் வெளி நாட்டுப் பிரதிநிதிகளிடமும் அவர் தனது நிலைப்பாட்டை வலியுறுத்தத் தவறவில்லை.

06.04.2015 அன்று அவுஸ்திரேலிய நாட்டின் உயர்ஸ்தானிகர் றொபின் மூடி அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது தமிழ்மக்களின் எதிர்பார்ப்புகள் எதுவும் ஆட்சி மாற்றத்தால் ஏற்பட்டு விடவில்லை என முதலமைச்சர் கூறியிருந்தார்.

இது நல்லாட்சி. தமிழ் மக்களுக்குச் செய்தது என்ன? என்பதை தெளிவாகக் கூறுவதாக இருந்தது.

இதேபோன்று வெளிநாட்டுப் பிரதிநிதிகள் யார் வருகை தந்தாலும் அவர்களிடம் தமிழ் மக்களின் விவகாரத்தை முதலமைச்சர் விக்னேஸ்வரன் அக்குவேறு ஆணி வேறாக எடுத்துரைத்தார்.

இஃது அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் மிகப்பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தவே செய்தது.

நாங்கள் பேசாமல் இருக்க எல்லாவற்றையும் முதலமைச்சர் தெரியப்படுத்தி விடுகின்றார் என்ற கோபம் கூட்டம்மைப்பிடம் ஏற்படவே செய்தது.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளால் உருவாக்கப்பட்ட காட்டை அழிக்கத் துடிக்கும் அமைச்சர் றிசாத்

## பகிரங்க விவாதத்திற்கு அழைக்கும் சாள்ஸ் எம்.பி

முல்லைத்தீவு மாவட்டத்தில் உண்மையான சேவைக்காக எந்த அரசியல்வாதிகள் இப்பிரதேச மக்களுக்கு சேவை மேற்கொண்டனர் என அந்த மாவட்டத்தில் பகிரங்க விவாதம் மேற்கொள்ள அமைச்சர் றிசாத் பதியுதீன் தயாராக உள்ளாரா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் சவால் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு, முள்ளியவளை நீராவிப்பிட்டியில் மீள்குடியேற்ற விசேட செயலணி ஊடாக வீடமைப்புக்கான நிதி உதவிகள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் றிசாத் பதியுதீன் கலந்து கொண்டு ஆற்றிய உரை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து யுத்தத்தினால் வெளியேறிய சகோதர மக்களை மீள் குடியேற்றச் செய்வதற்கு இன்றுவரை எந்த தமிழ் அரசியல்வாதியும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. மாறாக மீள்குடியேற்றம் என்னும் பெயரில் இனத்திற்கு மட்டும் நிலமும் சலுகையும் வழங்குவதனையே கேள்விக்கு உட்படுத்துகின்றனர். இந்தப் பிரதேசத்தில் உடைந்து போய்க்கிடந்த, அழிந்து போயிருந்த அத்தனை கட்டங்களையும் மீளக் கட்டியெழுப்பி தமிழ் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி நிம்மதியாக வாழ வேண்டுமென்பதில் முழுமூச்சுடன் உழைத்ததாக அமைச்சர் வாய்ச் சவடால் விட்டுள்ளார்.

இந்த மாவட்டத்தின் தொழிற்சாலையாக இருந்த பேராறு தும்புத் தொழிற்சாலையாகட்டும் கூழாமுறிப்பு ஓட்டுத் தொழிற்சாலையாகட்டும் கரிப்பட்டமுறிப்பு நெற்களஞ்சியம் ஆகட்டும் இதே போன்று எந்த தொழில் மையமும் இன்றுவரை இந்த மாவட்டத்தில் மீளமைக்கப்படவில்லை.

மீள்குடியேற்ற அமைச்சராகவிருந்த காலத்தில் எமது கேப்பாப்பிலவு மக்களையும் மீள்குடியேற்றம் செய்கின்றோம் என்ற போர்வையில் நடுக்காட்டில் இறக்கி விட்டது தான் மீள்குடியேற்றமா? அதேபோன்று அன்றைய காலத்தில் வடக்கின் 5 மாவட்டத்திலும் மீள்குடியேறிய மக்களிற்கு அரசின் 25 ஆயிரம் ரூபா பணம் வழங்கியதாக அரசும் அமைச்சரும் கூறுகின்றனர். ஆனால் வடக்கில் மட்டும் இன்னமும் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களிற்கு இப் பணம் இன்று வரையில் வழங்கப்படவே இல்லை.

இவ்வாறு பணம் வழங்கப்படாதமைக்கு மாவட்ட அரச அதிபர்களே சாட்சியாக உள்ளபோது எவர் பொய் கூறுகின்றார் என்பதே மக்களின் கேள்வியாகவுள்ளது. இதேநேரம் ஒரு இனத்திற்கு மட்டும் பணிபுரிபவர் அல்ல அமைச்சர். முல்லைத்தீவில் வெறும் 78 தென்னிலங்கையர்களிற்கு மட்டுமே மீன்பிடி உள்ளதாக மத்திய அரசே கூறிய பின்பும் இன்று 500 பேருக்கும் அதிகமாக தொழில்புரியும் நிலையில் இந்த அமைச்சர் வாய்திறக்கவே இல்லை. மகாவலி அபிவிருத்தி என்னும் போர்வையில் தமிழ் மக்களின் 2 ஆயிரத்து 524 ஏக்கர் நிலம் முதல் கட்டமாகவும் தற்போது 850 ஏக்கரும் பறிபோவது தொடர்பில் மூச்சே விடவில்லை.

இதே மாவட்டத்தில் 2 ஆயிரம் தமிழ் மக்களிற்கு காணி இல்லாதமைக்கு அமைச்சரால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. மாறாக தனது இனம் சார்ந்து 925 குடும்பத்திற்காக புலிகளால் நாட்டப்பட்ட காட்டை அழிக்கத் துடிக்கின்றனர். அதே போல் இதே மாவட்டத்தில் தற்போது 15 ஆயிரத்திற்கும் அதிக வீட்டுத் தேவை உள்ள நிலையில் அதில் ஓர் இனத்திற்கு 2 ஆயிரம் வீட்டிற்கு மட்டும் அமைக்கப்பட்ட செயலணி மீது எவ்வாறு நம்பிக்கை கொள்ள முடியும்.

தமிழர்கள் ஒன்றும் அரசோடு மட்டும் ஒட்டிநின்று பிழைப்பு நடத்திவிட்டு வந்து இன்று அதியுச்ச அதிகாரம் வேண்டுமென கோரவோ அல்லது சமஷ்டிதான் தீர்வு என வலியுறுத்தி வடக்கும் கிழக்கும் இணைய வேண்டுமென விடாப்பிடியாக நிற்கவில்லை. அல்லது பத்திரமாக அனுப்பி இன்னுமோர் இடத்தில் காத்திருந்துவிட்டும் வந்து உரிமையை கோரி நிற்கவில்லை. அல்லது அடுத்தவன் உயிரை கொடுத்து போராடும்போது தப்பி நின்று தீர்வு எட்ட முயற்சிக்கும் சந்தர்ப்பத்தில் அதே பங்கினையும் கோரி நிற்கவில்லை.

தமிழ்மக்கள் இன்றைய நிலையில்கூட 50 ஆயிரம் போராளிகளதும் 2 இலட்சம் அப்பாவிகளினது உயிரையும் விலையாக கொடுத்து 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அங்கவீனர்களாகவும் 80 ஆயிரம் பேர் விதவைகளாக்கப்பட்டும் பல ஆயிரம் கோடி ரூபா சொத்துக்களிற்கு என்ன நடந்தது எனத் தெரியாத நிலையிலேயே இவற்றை கோரி நிற்கின்றனர் என்பதனை புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (7-8)




## கடற்புலிகளின் தளபதி சூசையின் வீட்டை பார்வையிட சிங்கள மக்களுக்கு அனுமதி




தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கடற்புலிப் படை தளபதி சூசையின் வீடு புதுக்குடியிருப்பு இரணைப்பாலையில் அமைந்துள்ளது.

இந்நிலையில் கடற்புலிப் படை தளபதி சூசையின் வீட்டைப் பார்ப்பதற்கு தென்னிலங்கையில் இருந்து செல்லும் மக்களை அவர்கள் அனுமதிப்பதாகவும், தமிழ் மக்களை புறக்கணிப்பதாகவும் அப்பகுதி பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் சூசையின் வீட்டை தற்போது குத்தைகைக்கு எடுத்திருக்கும் குறித்த நிறுவனத்தின் செயற்பாடு இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை சீர்குலைப்பதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (8)

## கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு



கிளிநொச்சி, மலையாளபுரம் தனியார் கிணற்றிலிருந்து பாவனைக்குதவாத வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த வெடிபொருட்கள் நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8)

# அரசியல் நோக்கங்களுக்காகவே எம்மைப் பயன்படுத்தினார்கள்

## நாவல்நகர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கடந்த 2010ஆம் ஆண்டிலிருந்து வாக்குகளுக்காகவும் ஆர்ப்பாட்டங்களுக்காகவும் எங்களை பயன்படுத்தினார்களே தவிர எமது கிராமத்தில் எந்த அபிவிருத்திகளையும் அப்போதைய ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் செய்யவில்லை

நாவல்நகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சுட்வேட் தெரிவித்துள்ளார்.

புனரமைக்கப்படாமல் காணப்படுகின்ற கிளிநொச்சி கல்மடுநகர், றங்கன் குடியிருப்பு மற்றும் நாவல் நகர்ப் பகுதிகளில் உள்ள வீதிகளை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து தொடர்ந்து கருத்துத் தெரிவித்த கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர், றங்கன் குடியிருப்பு மற்றும் நாவல்நகர் பகுதிகளில் 207இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் எந்த விதமான அபிவிருத்தி வேலைகளையும் முன்னெடுக்கவில்லை. கடந்த 2010ஆம் ஆண்டு மீள்குடியேறியதிலிருந்து தொடர்ச்சியாக எங்களுடைய பிரதேசத்தின் அபிவிருத்திகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கையை முன்வைத்து வருகின்றோம்.

ஆனால் எந்த அபிவிருத்தியும் இல்லை. கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரைக்கும் அப்போதைய ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரிடம் எங்களுடைய கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

ஆனால் செய்து தருவதாக வாக்குறுதிகள் வழங்கிவிட்டு அன்றாடம் கூலி வேலை செய்கின்ற எமது கிராம மக்களிடம் வாக்குகளைச் சுரண்டுவதற்கும் அவர்களுடைய அரசியல் நோக்கங்களுக்கான ஆர்ப்பாட்டங்களுக்கும் பயன்படுத்துகின்றார்களே தவிர, எந்த அபிவிருத்தியையும் அவர்கள் செய்யவில்லை.

தற்போது எமது கிராமத்திற்கு வருகை தந்து எமது தேவைகள் குறித்துக் கலந்துரையாடிய பிரதேச செயலாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் உடனடியாக இந்த வீதிகளில் முக்கியமான வீதிகளை புனரமைத்துத் தருவதற்கும் இங்குள்ள காணிப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கும் உறுதியளித்திருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் காட்டு யானைகளின் தொல்லை

## அல்லலுறும் வன்னிப் பகுதி மக்கள்







வன்னிப்பகுதியல் தீர்வு காணப்படாத ஒன்றாக காட்டு யானைகளின் தொல்லை தொடர்ந்தும் காணப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களின் எல்லைப்புறக் கிராமங்களில் வாழுகின்ற மக்கள் அன்றாட வாழ்வாதாரத்தையும் தொழில் வாய்ப்பையும் தினமும் தேடி அலைய வேண்டிய நிலையில் வாழ்ந்து வருகின்றதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் குறித்த பகுதி மக்கள் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

மக்கள் காட்டு யானைகள், குரங்கு போன்ற விலங்குகளிடமிருந்தும் தங்களுடைய வாழ்வாதாரப் பயிர்ச் செய்கைகளையும் வாழ்விடங்களையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தேவையுள்ளதுடன், உயிராபத்தைக்கூட எதிர்கொள்ளக் கூடிய ஒரு அபாயகரமான நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளின் கீழ் உள்ள கோட்டைகட்டிய குளம், தென்னியன்குளம், உயிலங்குளம், வேட்டையடைப்பு, புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி, ஐயங்கன்குளம், மூன்றுமுறிப்பு, பனங்காமம், சிறாட்டிகுளம், மேளிவனம், கறிப்பட்ட முறிப்பு, ஒலுமடு உள்ளிட்ட கிராமங்களில் தினமும் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

அத்துடன், கிராமங்களில் யானைகள் வராத நாட்களே இல்லை. கடந்த வாரம் கூட முறிகண்டிப் பகுதியில் ஊர்மனைக்குள் புகுந்த காட்டு யானைகள் பெருமளவான பயன் தரும் மரங்களை அழித்துள்ளன.

இந்த நிலையில், கடந்த மூன்று நாட்களாக கல்மடுப் பகுதியில் காட்டு யானை ஒன்று உட்புகுந்து வயல் நிலங்களையும் பெறுமதி வாய்ந்த தென்னை மரங்களையும் அழித்துள்ளன.

வவுனியா வடக்கு எல்லையோரக் கிராமங்களிலும் மன்னார் மாவட்ட எல்லையோரக் கிராமங்களிலும் காட்டு யானைகள் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளன.

முப்பது வருடங்களுக்கு மேலான வயதுகளையுடைய பயன்தரக்கூடிய பெருமளவான தென்னை மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் தென்னை மரங்களின் வருமானத்தை நம்பி வாழும் மக்கள் வாழ்வாதாரத்தை இழக்க வேண்டியுமுள்ளது.

முல்லைத்தீவு மேளிவனம் பகுதியில் வாழ்ந்து வரும் சுமார் ஐம்பது வரையான குடும்பங்கள் பகலில் அன்றாட உணவிற்குப் போராட வேண்டியதும், இரவில் காட்டு யானைகளிடமிருந்து உயிரைப் பாதுகாக்கப் போராட வேண்டியுமுள்ளது.

இப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் விவசாயத்தையும் கூலித் தொழிலையும் நம்பி வாழ்கின்ற சமூகத்திலுள்ளனர்.

காட்டு யானைகளின் தொல்லையால் விவசாயச் செய்கை எதனையும் மேற்கொள்ள முடியாதுள்ளது.

மீள்குடியேறிய காலத்திலிருந்து இன்று வரைக்கும் பல தடவைகள் தென்னை, மா, பலா போன்ற நீண்ட காலம் பயன்தரக்கூடிய பயிர்களை நடுகை செய்கின்ற போதும், அவற்றை யானைகளிடமிருந்து பாதுகாக்க முடியாதுள்ளது.

இப் பகுதிக்கு யானைக்கான வேலிகளை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்ற போதும், வாக்குறுதிகள் மட்டும் கிடைக்கின்றன. ஆனால் வேலிகள் அமைக்கப்படுவதில்லை.

யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கின்ற போதும், யானைகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கு தற்காலிகமாக யானை வெடிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வழங்கப்படுகின்ற யானை வெடிகளுக்கு யானைகள் பழக்கப்பட்டு விட்டன.

இவ்வாறு பின்தங்கிய எல்லையோரக் கிராமங்களில் வாழ்கின்ற மக்களின் பயிர்ச்செய்கைகளை பாதுகாப்பதற்கு மின்சார வேலிகளை அமைக்க வேண்டுமென பல்வேறு வலுவான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவை மீள்குடியேற்றப் பிரதேசங்களில் நடைமுறையில்லை. ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் யானைகளுக்கான மின்சார வேலிகளை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும், இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

யானைத் தாக்குதலிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவங்களும் உயிரிழந்த சம்பவங்களும் இருக்கின்றன.

ஒவ்வொரு குடும்பமும் தமக்குத் தேவையான மரக்கறிகள், இதர பயிர்செய்கைகள், வீட்டுத் தோட்டங்கள் என்பவற்றை முன்னெடுத்துள்ளனர்.

காட்டு யானைகளின் தொல்லையால் அதைக்கூட செய்யமுடியாமலும், விவசாயச் செய்கை மூலம் அறுவடை செய்கின்ற நெல், கச்சான், உழுந்து போன்ற தானியங்களையும், வீடுகளுக்குள் வைத்திருக்க முடியாதுள்ளது.

இவ்வாறு காட்டு யானைகளிலிருந்து உயிர்களையும் உடைமைகளையும் பயிரச் செய்கைகளையும் பாதுகாக்க வேண்டிய ஒரு நிலையில் மீள்குடியேறிய மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மேலும், சம்பந்தப்பட்ட திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பிட்டுள்ளனர். (8)




# வேப்பங்குளத்திற்குரிய காணியை அத்துமீறி தனியார் ஆக்கிரமிப்பு

வவுனியா, வேப்பங்குளத்திற்குரிய காணியை அத்து மீறி தனியார் ஒருவர் ஆக்கிரமித்துள்ளதுடன், குளத்தின் எல்லைக் கற்களையும் உடைத்துள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, வேப்பங்குளத்தின் எல்லைக்கருகில் காணப்பட்ட பத்து ஏக்கர் காணிக்கு உரித்துடைய நபர் தமதுகாணிக்குபின்உள்ள குளத்திற்குரிய காணியை தன் வசப்படுத்தியுள்ளார்.

கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் குளத்தின் எல்லை குறிக்கப்பட்டு நாட்டப்பட்ட எல்லைக் கல்லும் இதன்போது முற்றாக உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் நெளுக்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக கமநல அபிவிருத்தி ஆணையாளர் ஆர்விஜயகுமாரிடம் தொடர்பு கொண்ட போது,

சம்மந்தப்பட்ட காணி உரிமையாளரின் காணி தவிர்ந்து ஏனைய குளத்துக்குரிய காணி அடையாளப்படுத்தப்பட்டு எல்லைக் கல் நாட்டப்பட்டது.

தற்போது இக்கல் மேற்படி தனியாரால் உடைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அரச சொத்துக்கு சேதம் இழைத்த குற்றத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை, இக்குளத்தின் கீழ் 25 ஏக்கர் வயல் செய்கை பண்ணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-8-250)

# வீதியில் குப்பை வீசிய அரச உத்தியோகத்தருக்கு தண்டம்

வவுனியாவில், தோணிக்கல் மயானத்திற்குச் செல்லும் வீதியில் நீண்ட நாட்களாக குப்பை வீசிவந்த அரச உத்தியோகத்தர் ஒருவர் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தண்டம் அறிவிடப்பட்டுள்ளதுடன், கடுமையான எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, தோணிக்கல், மதகுவைத்தகுளம் பகுதிகளில் பொது மக்களின் ஒத்துழைப்போடு சிரமதானம் மேற்கொள்ளப் பட்டதுடன் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் ஊழியர்கள் இப்பகுதியில் துப்பரவுப்பணிகளை மேற்கொண்டு வந்துள்ளனர். எனினும் தோணிக்கல் மயானத்திற்குச் செல்லும் வீதியில் சிலர் தொடர்ச்சியாக குப்பைகளை வீசி வந்துள்ளனர். இது தொடர்பாக பொது மக்கள் பொது சுகாதாரப் பரிசோதகதர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

இதையடுத்து சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் போது குறித்த வீதியில் குப்பை வீசிய அரச உத்தியோகத்தர் ஒருவரை 31.07.2017 அன்று கையும் மெய்யுமாக பிடித்துள்ளனர். அவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 03.08.2017 அன்று நீதிமன்ற சட்ட நடவடிக்கையின்போது தண்டம் அறவிடப்பட்டதுடன் நீதவான் அரச உத்தியோகத்தரை கடுமையாக எச்சரித்து விடுவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த பகுதியில் குப்பைகளை வீசுகின்றவர்களில் அனேக மானவர்கள் அரச உத்தியோகத்தர்களாகவே காணப்படுகின்றனர். என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (7-8-250)

# திட்டமிடப்படாத சிறுபோகச் செய்கை

## விவசாயிகள், நன்னீர் மீன்பிடி குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சி - இரணைமடுக் குளத்தின் கீழ் திட்டமிடப்படாத சிறுபோகச் செய்கையால், விவசாயிகளும் நன்னீர் மீன்பிடியை நம்பி வாழும் மீனவக் குடும்பங்களும் பாதிப்பை எதிர் நோக்கியுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கையில்,

தற்போது நிலவும் வரட்சியான நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு குளத்தின் நீர் மட்டம் பத்து அடிக்கும் குறைவாக இருந்தமையால் 890 ஏக்கர் பயிர்ச் செய்கைகளுக்கு திட்டமிடப்பட்டு அதன் படி உயர் அதிகாரிகள் மட்டத்தில் கலந்துரையாடப்பட்டு சிறுபோகச் செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 300ற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் சட்டத்திற்கு முரணான மேலதிக விதைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

குறித்த மேலதிக விதைப்புக்களானது கமக்கார அமைப்புப் பிரதி நிதிகளாலும் மற்றும் சில அதிகாரி [illegible]மையினால் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மேலதிக விதைப்புப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டு 45 நாட்கள் தொடக்கம் 50 நாட்களுக்குப் பின்னரே அழிக்கப்பட்டன. இந்த அழிக்கப்பட்ட பயிர்களுக்கு ஏற்கனவே இரண்டு தடவைகள் நீர் விநியோகம் செய்யப்பட்டிருந்தன.

இது இவ்வாறிருக்க குளத்தில் எஞ்சியிருக்கும் நீரை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு உரிய பொறி முறையின்றி குறிப்பிட்ட சில அதிகாரிகளின் துணையுடன் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அவர்கள் சார்ந்தவர்களுக்கே விநியோகம் செய்யப்படுகின்றது.

குளத்தில் இருக்கின்ற நீரை உரிய முறையில் விநியோகிக்காது முறையற்ற விதத்தில் பாரபட்சம் காட்டப்பட்டு விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் சில விவசாயிகள் தங்களுடைய நெற்செய்கையை கைவிடும்நிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோன்று இரணைமடுக் குளத்தின் கீழ் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வரும் குடும்பங்கள் இந்த நீர் விநியோகத்தால் வாழ்வாதாரத் தொழிலை இழந்து பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சிறு போகச் செய்கைக்காக முன்னெடுக்கப்பட்ட சில அபிவிருத்திவேலைகளுக்காக பெருமளவான நிதி, ஒப்பந்தங்கள் செய்யப்படாது இரகசியமான முறையில் செலவிடப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசவ வலி நிவாரணம் (Labour pain relief)-ஓர் அறிமுகம்



இந்த உலகம் உயிர்ப்போடு சுழன்று கொண்டிருக்கிறது என்றால், உயிர்களின் சத்தம் பிரபஞ்சத்தில் இங்கு மட்டும் தான் கேட்கிறது என்றால் அதற்கு ஒரு மகத் தான காரணம் இருக்கிறது என்றால், அது தான் "தாய்மை" உலகிற்கு ஓர் புதிய உயிரை கொண்டுவரும் தாய்மையின் தியாகங்கள் எண்ணில் அடங்காதவை.

பிரசவம் என்பது எல்லாப் பெண்களுக்கும் இன்னொரு பிறப்பு. பிரசவம் பார்க்கின்ற வைத்தியர்களுக்கு அது உயிர் காக்கும் பொறுப்பு. எல்லாப் பெண்கள் மனதிலுமே பிரசவ நேரத்தில் அவர்கள் அனுபவிக்கப் போகும் பிரசவ வேதனை தொடர்பான பயம் உறைந்திருக்கும். அதைப் போக்குவதற்குள்ள முறைகளைப் பற்றி பகிர்ந்து கொள்வதற்காக இக்கட்டுரை பிரசுரமாகின்றது! எங்கள் யாழ்ப்பாணத்து கர்ப்பவதிகளும், இனி பயம் கொள்ளத் தேவையில்லாதவாறு இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படாத புதிய வலி நிவாரண முறையொன்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

இக்கட்டுரையானது பிரசவ வலி என்பது எப்படி இருக்கும் என்பதனைப் பற்றியும் அதிலிருந்து விடுபடுவதற்கான செயன்முறைகளைப் பற்றியும் மக்களுக்கு அறியத் தருவதாக இருக்கின்றது. இவற்றினைத் தெரிந்து கொள்வதன் மூலம் பிரசவம் உங்களுக்கும் ஓர் இனிமையான அனுபவமாக அமையும் என்று எதிர்பார்க்கின்றோம்.

**பிரசவ வலி எப்படி இருக்கும்....**

கர்ப்ப காலத்தின் கடைசி நாட்களில் கர்ப்பப் பை விட்டு விட்டு சுருங்குவது போல உணர்வீர்கள். பிரசவத்தின் ஆரம்ப கட்டத்தில் இந்த சுருக்க உணர்ச்சி பலம் குறைந்ததாகவும் அடிக்கடி வருவது போன்றும் இருக்குமாதலால் ஓரளவு தாங்கக் கூடியதாக இருக்கும். ஆனால் பிரசவம் என்ற தொடர்ச்சியான செயற்பாட்டின் வெளிப்பாடாக வலி மிகவும் கடுமையாகவும் நீண்ட நேரத்திற்கு நிலைப்பதாகவும் இருக்கும். இதனால் பெண்ணிற்கு ஏற்படும் மன உளைச்சலும், உடல் உளைச்சலும் பிரசவம் என்ற பெயரையே வெறுப்பேற்றி விடுகின்றது. இதனால் 95 வீதத்திற்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் முறையான பிரசவ வலி நிவாரணம் தேவைப்படுவதாக நினைக்கின்றார்கள். பெரும்பாலும் தலைப் பிரசவமானது அதிகநேரம் நீடிக்கக் கூடியதொன்றாகும் (10 - 12 Hours) இதனால் பிரசவ வலி நிவாரணமானது இவர்களிற்கு ஓர் வரப் பிரசாதமாகும்.

**-பிரசவ முன்னேற்பாடுகள் (Preparing for Labour)**

பிரசவத்திற்கு முன்னான கர்ப்பகால (Antenatal) வைத்திய ஆலோசனைகள் வைத்தியர்களாலும் சுகாதார வைத்திய உத்தியோகத்தர்களாலும் (Family health officers) நடத்தப்படுகின்றன. ஆலோசனைகள் பொதுவாக பிரசவ காலத்தில் ஏற்படும் தேவைகள், அதை எதிர் நோக்கும் வழிமுறைகள், குழந்தைப்பராமரிப்பு போன்றவற்றை உள்ளடக்கி நிற்கும். இவ்வாறான பிரசவ முன் ஆலோசனைகளை முறையாகப் பெற்றுப் பிரசவத்தினை எதிர்நோக்கும் பெண்கள் பிள்ளைப் பேற்றின் போதான கடினமான சவால்களை எளிதாக சமாளித்து விடுவார்கள். ஏனெனில் அவர்களின் முன்னறிவு உதவக்கூடியதாக இருக்கும். தொடர்ச்சியாக பிரசவ வலியினைக் குறைக்கும் முறைகளைப் பற்றியும் அவற்றின் போதான பக்க விளைவுகளைப் பற்றியுமான ஓர் விழிப்புணர்வு ஏற்படக் கூடியதாக இருக்கும்.

பிரசவ வலி நிவாரணம் என்பது அபிவிருத்தி அடைந்த நாடுகளில் எல்லோராலும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும் அபிவிருத்தி அடைந்துவரும் எம்மைப் போன்ற மூன்றாம் தர நாடுகளில் ஓர் எட்டாக் கனியாகவே உள்ளது.

பிரசவ வலி நிவாரணம் தொடர்பான கலந்துரையாடல்கள் பொதுவாக தற்போது அரசாங்க மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் இடம் பெறுகின்றன. உணர்வழியியல் வைத்தியர்களின் (Anaesthetists) பங்களிப்பும் கணிசமான அளவு உள்ளது. இது தொடர்பாக தேவையான தகவல்களை அவர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். உணர்வழியியல் மருத்துவரே தண்டுவடத்தின் அருகில் (Epidural) போடப்படும் ஊசியினை ஏற்றுவார். இந்த வகையான (Epidural) பிரசவ வலி நிவாரணமே உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மிகச் சிறந்த முறையாகும்.

**பிரசவ வலியினைக் குறைக்கும் வழிமுறைகள் (Labour pain relief methods)**

பலவகையான வழிமுறைகள் உள்ளன. அவற்றினைப் பொதுவாக இரண்டு (02) வகையாகப் பிரிக்கலாம்.

1. மருந்தினைப் பயன்படுத்தாத கலாசார முறைகள் (Non Pharmacological methods)
2. மருந்து பயன்படுத் தும் முறைகள் (Pharmacological Methods)

**மருந்தினைப் பயன்படுத்தாத கலாசார முறைகள் (Non Pharmacological Methods)**

1. சுய உதவி முறைகள் (Self help methods)

ஆறுதற்படுத்துவதற்காக ஒருவரை பிரசவ அறைக்குள் அனுமதிப்பதே வலியைக் குறைக்க மிகவும் உதவும்.

2. பிரசவ தண்ணீர்த் தொட்டி மற்றும் வெந்நீர் குளியல் (Using birthing pool during labour)
3. அரோமாதெரபி (Aromatherapy)
4. பயிற்சிமுறைகள் (Reflexology)
5. மனதை ஒருவழிப் படுத்துதல் (Hypnosis)
6. அக்குபஞ்சர் (Acupuncture)
7. மின்சாதன முறை (Tens)

**மருந்து பயன்படுத்தும் முறைகள் Pharmacological Methods**

1. வாயு சுவாசிக்கும் முறை (Entonox)
2. சக்தி வாய்ந்த மருந்தினைப் பாவிக்கும் வலி நிவாரண முறைகள் (Opioids like pethidine & Morphine)
3. தண்டு வடத்தின் அருகில் ஊசி போடப்பட்டு சிறிய குழாய் பொருத்துதல் (Epidural)

**தண்டு வட ஊசி (Epidural)**

பிரசவ வலி நிவாரண முறைகளில் தண்டுவடத்தின் அருகில் போடப்படும் ஊசி முறைதான் மிகவும் சிறந்தது. இவ்வகையான ஊசிகள் மயக்க மருந்து மருத்துவர்களால் மட்டுமே போடப்படமுடியும்.

உணர்வழியியல் மருத்துவர் (Anaesthetist) என்பவர் அறுவைச் சிகிச்சையின் போது உறங்க வைப்பதிலும், மேற்கூறப்பட்ட வலி நிவாரண முறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பார்கள். இந்த முறை தான் சக்தி வாய்ந்த நிவாரணம் அளிக்க வல்லது. சாதாரணமாக இதனால் உங்களுக்கு தூக்க உணர்வோ அல்லது வாந்தியோ ஏற்படாது இம்முறைமூலம் குழந்தை பிரசவிப்பதனால் குழந்தைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. வலியற்ற பிரசவத்தினை நீங்கள் அனுபவிக்கலாம்.

இம்முறை கடந்தமாதம் முதல் யாழ்.போதனா வைத்தியசாலையில் அறிமுகப்படுத்தப்பட்டு அமுல்படுத்தப் பட்டு வருகின்றது.

**யாருக்கு இந்த முறை உகந்தது? Who can & cannot have an epidural)**

சாதாரணமாக யாருக்கு வேண்டுமென்றாலும் இந்த முறையை உபயோகப்படுத்தலாம். கர்ப்பத்தால் ஏற்படும் சில பாதிப்புக்கள் மற்றும் இரத்தம் உறைதலில் உள்ள குறைபாடுகள் உள்ள கர்ப்பிணிகளுக்கு இந்த முறை ஏற்றது அல்ல.

**செயன்முறை (What dose an epidural involve)**

பிரசவத்தின் போது தண்டு வட ஊசியினை மருத்துவர் ஏற்றும் போது பிரசவத்திற்குரிய பெண் பக்கவாட்டில் படுத்துக் கொண்டோ அல்லது உட்கார்ந்து பின் முதுகை வளைவாக வைத்துக் கொண்டோ இருக்க வேண்டும். இந்த முறையை மேற்கொள்ளும் போது சில நிமிடங்கள் ஆகலாம்.

(10 தொடக்கம் 20 நிமிடங்கள்) நன்றாக அமரச் செய்த பின்னர் உங்கள் பின் முதுகை நன்றாகச் சுத்தம் செய்து ஊசி போடும் இடத்தில் விறைப்பு ஊசியினைச் செலுத்தி விறைப்பு மருந்தினை ஏற்றுவார்கள். பின்பு ஊசி ஏற்றும் போது அவரிற்கு ஊசியின் வலி தெரியாத பின்பு ஊசி வழியாக மெல்லிய குழாய் ஒன்று பொருத்தப்படும் இவ்வாறு செய்யப்படும் போது ஒவ்வொருவரினதும் பூரண ஒத்துழைப்பு தேவைப்படும்.

குழாய் பொருத்தப்பட்டதும் அவர்கள் தாங்கள் தங்களது வசதிக்கேற்றவாறு படுத்துக் கொள்ளலாம். பின்பு இந்தக் குழாய் வழியாக மருந்து ஏற்றப்படும். மருந்து தொடர்ச்சியாகவும் கொடுக்கப்படலாம், அல்லது நோவு ஏற்படும் ஒவ்வொரு தருணத்திலும் கொடுக்கப்படலாம். முழுமையான நிவாரணம் ஏற்பட 20 தொடக்கம் 30 நிமிடங்கள் வரை தேவைப்படலாம். வைத்தியர் தொடர்ச்சியாக அவதானித்துக் கொண்டிருப்பார். குருதி அமுக்கம், இதயத்துடிப்பு போன்றன தொடர்ந்து அவதானிக்கப்படும்.

இம்முறைமூலம் கர்ப்பப்பை சுருக்கத்தின் வலியை முழுமையாக நிவாரணப்படுத்தலாம். பிரசவப் பெண்ணிற்கு பல்வேறு காரணங்களால் அவசர சத்திரசிகிச்சை செய்து குழந்தையை வெளியேற்றவேண்டி ஏற்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் தண்டுவட ஊசி (Epidural) முறையைப் பயன்படுத்தியே சத்திரசிகிச்சை யினையும் செய்து கொள்ள முடியும்.

தண்டு வட ஊசியின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் ஏனைய முறைகளுடன் ஒப்பிடுகையில். இது

1. மிகச் சிறந்த பிரசவ வலி நிவாரணத்தை கொடுக்கக் கூடியது.
2. இந்த முறையில் தான் குழந்தையின் ஒட்சிசன் வழங்குதல் சரியாகப் பேணப்படும்.
3. குழந்தைக்கு எந்த விதமான பக்கவிளைவுகளும் ஏற்படாது.
4. இந்த முறையில் அறுவைச் சிகிச்சைக்கான தேவை அதிகம் இருக்காது.

**பிரதிகூலங்கள்**

1. குருதி அமுக்கம் மற்றும் இதயத்துடிப்பு குறைதல் போன்றன ஆரம்ப கட்டத்தில் ஏற்படலாம். ஆனால் அவற்றிற்கான மாற்று மருத்துவ முறைகள் உள்ளன.

Dr. திருமதி சுகர்திகா சிவதீபன்
வைத்திய அதிகாரி,
உணர்வழியியல் மருத்துவத்துறை,
Registrar in Anaesthesia .
யாழ். போதனா வைத்தியசாலை

# சீனக் கடற்படையின் மிதக்கும் வைத்தியசாலை கொழும்பு வந்தது





(கொழும்பு)

நான்கு நாட்கள் நல்லெண்ணப் பயணமாக, சீன கடற்படையின் வைத்தியசாலைக் கப்பலான, ஹெபிங் பாங்சோ நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

178 மீற்றர் நீளமும், 24 மீற்றர் அகலமும் கொண்ட இந்தக் கப்பலில், 381 மாலுமிகள் உள்ளனர்.

இந்தக் கப்பலில் ஒரு நவீன வைத்தியசாலையிலுள்ள அறுவைச் சிகிச்சைக் கூடங்கள், அவசர சிகிச்சைப் பிரிவுகள், ஆலோசனை வைத்திய சேவை, வதிவிட வைத்திய அலகுகள் மற்றும் கணனி மயப்படுத்தப்பட்ட சோதனைத் தொகுதிகள், 300 நோயாளிகளுக்கான படுக்கை வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் உள்ளன.

எந்த நேரத்திலும் நோயாளிகளை ஏற்றி வரவும், கொண்டு செல்லவும் உலங்குவானூர்தியை இறக்கும் வசதிகளும் இந்தக் கப்பலில் உள்ளன.

நான்கு நாட்கள் கொழும்பில் தரித்திருக்கும் போது, இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து சில நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ள சீனக் கடற்படையினர், இன்று 8ஆம் திகதி, இலவச மருத்துவ முகாம் ஒன்றையும் நடத்தவுள்ளனர்.

நாளை 9ஆம் திகதி இந்தக் கப்பல் கொழும்பில் இருந்து புறப்பட்டுச் செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலோபாய, பாதுகாப்புத் தேவைக்கு இலங்கையை பயன்படுத்தமாட்டோம்

## சீனத் தூதுவர் உறுதி

(கொழும்பு)

இந்தியப் பெருங்கடலில் இலங்கையின் கேந்திர அமைவிடத்தை சீனா தனது மூலோபாய மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்ளாது என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் யி ஷியான்லியாங் தெரிவித்துள்ளார்.





கொழும்பு துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்த சீன கடற்படையின் வைத்தியசாலைக் கப்பலான ஹெபிங்பாங்சோவை வரவேற்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

"ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே இலங்கை மூலோபாய அமைவிட வாய்ப்பை அனுபவித்து வருகிறது. அதற்குக் காரணம், பட்டுப் பாதையின் நடுவில் இலங்கைத் தீவு இருப்பதேயாகும்.

உங்களின் முக்கியத்துவத்தை நீங்கள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப் போகிறீர்கள்? உங்களிடம் உள்ள இந்த வாய்ப்பை எப்படி பயன்படுத்திக் கொள்ளப்போகிறீர்கள்? என்ற கேள்விகள் இருக்கின்றன.

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி முயற்சிகள் ஒவ்வொன்றுக்கும் சீனா ஆதரவாக இருக்கும்.

இது இலங்கை மக்களின் தேவை. இந்த வாய்ப்பை, எமது மூலோபாய மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளமாட்டோம்.

இலங்கையின் அபிவிருத்திக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம்.

கடந்த காலத்தில் இலங்கையில் சீனா என்ன செய்திருக்கிறது என்று நீங்களே, ஆய்வு செய்ய முடியும்.

நாங்கள் வைத்தியசாலைகளை, விமான நிலையம், துறைமுகம் போன்ற உட்கட்டமைப்புகளை உருவாக்கியுள்ளோம்.

சீனாவிடம் இருந்து மிகப் பெரிய கொடைகளையும் நிதி உதவிகளையும் பெற்ற முதல் நாடு இலங்கை தான்.

இலங்கையில் நாம் எந்தவொரு கடற்படை வீரர்களையோ, ஏனைய படையினரையோ நிறுத்தி வைத்திருக்கவில்லை.

இலங்கையில் நாம் புலனாய்வாளர்களையும் கொண்டிருக்கவில்லை. இங்குள்ள சீன இராஜதந்திரிகளைத் தவிர, வேறு அத்தகையவர்கள் யாரையும் நாம் கொண்டிருக்கவில்லை. சீனாவின் பிரதிநிதியாக நானே இருக்கிறேன்.

ஆனால், பல பிரதம நிறைவேற்று அதிகாரிகள், பொறியாளர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், பேராசிரியர்களை நாம் இங்கு வைத்திருக்கிறோம்.

அவர்கள் இங்கு என்ன செய்கிறார்கள்? இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துகிறார்கள்.

இந்த நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காகப் பணியாற்றுகின்றனர்.

நாங்கள் எதைக் கூறினோமோ அந்த வாக்குறுதிகளை நாம் காப்பாற்றுகிறோம். எனவே நாங்கள் இலங்கையின் உண்மையான நண்பர்கள் என்பதை நம்புங்கள்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## யுவதிகளுக்கு போதை மாத்திரை! பிரபல அமைச்சரின் சாரதி கைது

(கொழும்பு)

இளைஞர், யுவதிகளுக்கு போதை மாத்திரைகள் உட்பட போதைப்பொருள் விற்பனை செய்யும் குழுவொன்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளது.

கடற்கரையில் ஏற்பாடு செய்யப்படும் விருந்து நிகழ்வின் போது, இளைஞர், யுவதிகளுக்கு போதை மாத்திரைகள் உட்பட போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

போதைப்பொருள் விநியோகம் செய்யும் குழுவினர் ஜீப் வண்டியில் பயணிக்கும் போது கல்கிசை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரபல அமைச்சர் ஒருவரின் சாரதியினால் குறித்த ஜீப் வண்டி செலுத்தப்பட்டுள்ளது. ஜீப் வண்டியை நிறுத்தி சோதனையிட்ட போது கடற்கரை விருந்துகளுக்காக பொதுவாக பயன்படுத்தப்படும், 12 போதை மாத்திரைகள் (ஒரு மாத்திரை 7500 ரூபாய்), குஷ் எனப்படும் போதைப்பொருள் 10 கிராம் மற்றும் 3 கிராம் கொக்கெய்னும் மீட்கப்பட்டுள்ளன.

சட்டவிரோதமான 9 புகையிலை பக்கட்டுகளும் அங்கிருந்து பொலிஸாரின் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சாரதி அண்மையில் பதவி மாற்றம் செய்யப்பட்ட பிரபல அமைச்சரின் சாரதி என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## நல்லுள்ளங்களைப் பாராட்டுகின்றோம்




திரு.த.சித்தார்த்தன் திரு.அ.பரஞ்சோதி

(056)

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்திற்குத் தளபாட கொள்வனவிற்காக **கௌரவ திரு.த.சித்தார்த்தன் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள்** பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் முப்பத்தையாயிரம் ஒதுக்கித் தந்தமைக்கும் மற்றும் **கௌரவ திரு.அ.பரஞ்சோதி மாகாணசபை உறுப்பினர் அவர்கள்** பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையின் கீழ் ஐம்பதினாயிரம் ஒதுக்கித் தந்தமைக்கும் மனமுவந்து பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சங்கானை — நெறியாளர் குழு, வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/6853 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 54 செவ் 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/3992 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: செவ் 7 இல்<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6855 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 60 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பட்டதாரி கனடா<br>தொ.இ: G/3988 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/பாதுகாப்பு உத்தியோகத்தர்<br>தொ.இ: B/6856 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 30<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA, MA/அரச தொழில்<br>தொ.இ: G/3990 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 38 செவ் 12 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: கால்நடை வைத்தியர்<br>தொ.இ: B/6859 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 22 செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/3993 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரிய தேவாலயத்தில் பயங்கரவாதத் தாக்குதல்

## 11 பேர் உயிரிழப்பு



தென்கிழக்கு நைஜீரியாவிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலில் 11 பேர் உயிரிழந்துள்ளதோடு, 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஒழுபுலுவில் உள்ள குறித்த தேவாலயத்திற்குள், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நுழைந்த பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இந்த அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில், உள்ளூர் வாசியொருவரை குறிவைத்து பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலிலேயே ஏனையோர் கொல்லப்பட்டுள்ளதாக உள்ளூர் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், குறித்த உள்ளூர்வாசி தொடர்பான தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

காயமடைந்தவர்கள் ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது.

தாக்குதல் நடத்தியவர்கள் தப்பியோடியுள்ள நிலையில், பொலிஸார் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அத்தோடு, தேவாலய வளாகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இத் தாக்குதலுக்கு இதுவரை எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

கிறிஸ்தவர்களை பெரும்பான்மையாக கொண்டுள்ள தென் கிழக்கு நைஜீரியாவில், தேவாலயமொன்றில் தாக்குதல் நடத்தப்படுவது அரிதான சம்பவமாகும்.

எனினும், மத்திய மாநிலங்களில் தீவிரவாத அச்சுறுத்தல் அதிகரித்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (8)

# அ.தி.மு.க. அணிகள் விரைவில் இணையும்

## முதலமைச்சர் பழனிச்சாமி



அ.தி.மு.க. அணிகள் விரைவில் இணையும். ஒன்றுபட்ட அ.தி. மு.க.வை விரைவில் பார்க்கலாம் என முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்தார்.

முதலமைச்சர் பழனிச்சாமி முன்னிலையில் நேற்று தி.மு.க. வைச் சேர்ந்த 250 பேர் அ.தி.மு.க.வில் இணைந்தனர்.

பின்னர் நிருபர்களுக்கு எடப்பாடி பழனிச்சாமி பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது.

நீட் தேர்வில் இருந்து விலக்கு பெற அரசு முயற்சி செய்து வருகிறது.

அமைச்சர் விஜயபாஸ்கர் டில்லியில் இதுபற்றி பேசி வருகிறார்.

நீட் தேர்வு பிரச்சினையில் தமிழக மாணவர்கள் நலன் பாதுகாக்கப்படும்.

அ.தி.மு.க. அணிகள் விரைவில் இணையும். விரைவில் ஒன்றுபட்ட அ.தி. மு.க.வை பார்க்கலாம்.

சட்டசபையில் முக்கிய பிரச்சினைகளை பேசவில்லை என்று ஓ.பன்னீர்செல்வம் கூறி இருக்கிறார்.

அவர்சபைக்கு வந்து இருந்தால அவ்வாறு கூறி இருக்க மாட்டார் எனத் தெரிவித்தார். (8)

# வெட்டவேண்டாம் பாதுகாப்போம்

## மரங்களுக்கு ராக்கி கட்டிய பழங்குடி பெண்கள்

ஜார்கண்ட் மாநிலத்தில் மரங்களை பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தி பழங்குடி பெண்கள் மரங்களுக்கு ராக்கி அணிவித்து ரக்ஷா பந்தனை கொண்டாடினர்.



இந்தியாவின் வட மாநிலங்களில் ரக்ஷாபந்தன் பண்டிகை வெகு விமர்சையாக கொண்டாடப்படும்.

இந்த நாளில் தனது சகோதரன் நலமுடன் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தி அவருடன் பிறந்த சகோதரிகள் கையில் ராக்கி கட்டி விடுவார்கள். ராக்கி கட்டிய சகோதரிகளுக்கு, அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுத்து சகோதரர்கள் மகிழ்வார்கள்.

நேற்று ரக்ஷா பந்தனை முன்னிட்டு வடமாநிலங்களில் பெண்கள் தங்களது சகோதரர்களுக்கு ராக்கி அணிவித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பல்வேறு இடங்களில் பாதுகாப்பு படை வீரர்களுக்கு பெண்கள் ராக்கி அணிவித்தும் இனிப்புகள் வழங்கியும் பண்டிகையை உற்சாகமாக கொண்டாடினர்.


ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள ஜம்ஷெட்பூர் பகுதிகளில் உள்ள பழங்குடிகள் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் மரங்களை பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மரங்களுக்கு ராக்கி அணிவித்து ரக்ஷா பந்தனை வித்தியாசமாக கொண்டாடினர். (8)



டில்லியில் உடலில் இலை, தழைகளை கட்டியபடி தமிழக விவசாயிகள் 22 ஆவது நாளாக நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# நேற்றுடன் நிறைவடைந்தது அமர்நாத் யாத்திரை

## 2.60 லட்சம் பேர் தரிசனம்



காஷ்மீர் மாநிலம் அமர்நாத்தில் உள்ள பனிலிங்கத்தை தரிசிக்கச் செல்லும் யாத்திரை நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் சுமார் 2.60 இலட்சம் பேர் தரிசனம் செய்துள்ளனர்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலம் அமர்நாத் குகைக் கோயி லில் ஆண்டுதோறும் தோன் றும் பனிலிங்கத்தை தரிசிக்க ஜம்மு வழியாக யாத்திரிகர்கள் பயணம் செய்வார்கள். இந்த ஆண்டு தரிசனத்தை யொட்டி யாத்திரிகர்களின் முதல் குழுவினர் கடந்த ஜுன் மாதம் 28ஆம் திகதி பயணத்தை தொடங்கினர். முதல் நாளாக 2,280 யாத்திரிகர்கள் மலையடிவாரத்தில் இருந்து அமர்நாத் ஆலயத்துக்கு புறப்பட்டு சென்றனர். 40 நாட்கள் யாத்திரை நேற்று முடிவடைந்த நிலையில், இதுவரை சுமார் 2.60 லட்சம் யாத்திரிகர்கள் பனி லிங்கத்தை தரிசித் துள்ளனர். தீவிரவாதிகள் தாக்குதல், விபத்து மற்றும் உடல் நலக் குறைவு காரணமாக இதுவரை 40-க்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (8)

# சுதந்திரதினத்தை முன்னிட்டு அசாமில் பாதுகாப்பு தீவிரம்

## தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டம்

சுதந்திர தின விழாவின் போது அசாம் மாநிலத்தில் மிகப்பெரிய தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக உளவுத்துறையின் தகவலால், முக்கிய இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

காந்தியின் 70ஆவது சுதந்திரதினம் அடுத்த வாரம் செவ்வாய்க்கிழமை நாடெங்கும் கொண்டாடப்படவுள்ளது.

அந்த சமயத்தில் அசாம் மாநிலத்தில் மிகப் பெரிய தாக்குதல்கள் நடத்த உல்பா தீவிரவாதிகள் திட்டமிட்டு இருப்பதை உளவுத்துறை கண்டுபிடித்துள்ளது. மியன்மார் நாட்டில் மறைந்து வாழும் உல்பா தீவிரவாதிகளில் 7 பேர் சமீபத்தில் உதய் அசோம் என்ற தீவிரவாதி தலைமையில் இந்தியாவுக்குள் ஊடுருவினார்கள்.

தற்போது அவர்கள் அசாம், அருணாசல பிரதேச மாநிலங்களின் எல்லை பகுதியில் சுற்றியபடி உள்ளனர்.

சுதந்திர தினத்தன்று அவர்கள் நகர் பகுதிக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்துவார்கள் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. அந்த 7 தீவிரவாதிகளும் பயங்கர ஆயுதங்கள், வெடி பொருட்கள் வைத்து இருப்பது தெரியவந்துள்ளது.



தீவிரவாதிகளின் அச்சுறுத்தலைத் தொடர்ந்து அசாம், அருணாசல பிரதேசம் மாநிலங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. உல்பா தீவிரவாதிகள் தங்களது ஆதரவாளர்கள் மூலம் மக்கள் அதிகம் உள்ள பகுதிகளில் குண்டுகளை பதுக்கிவைத்து வெடிக்க செய்ய முயற்சி செய்யலாம் என்று உளவுத்துறை எச்சரித்துள்ளது.

எனவே முக்கிய இடங்களிலும், சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடக்கும் இடங்களிலும் இப்போதே பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்ஸிடமிருந்து ஹொம்ஸ் மாகாணம் கைப்பற்றப்பட்டது

சிரியாவின் ஹொம்ஸ் மாகாணம் ஐ.எஸ் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து வெற்றிகரமாக கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவின் கிழக்குப் பகுதியை நோக்கி முன்னேறிச் சென்ற சிரிய இராணுவத்தினர் கடந்த சனிக்கிழமை ஹொம்ஸ் மாகாணத்தை கைப்பற்றியதாக மனித உரிமைகள் தொடர்பில் கண்காணிக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் கைப்பற்றப்பட்ட பல்மைரா நகரிலிருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தொலைவிலேயே அல்சுக்னா எனும் நகர் அமைந்துள்ளது. இந்நிலையில், சிரிய இராணுவத்தினர் தங்களது அடுத்தகட்ட நடவடிக்கையாக அல் சுக்னா பகுதியை ஐ.எஸ் இடமிருந்து மீட்பது குறித்து அக்கறை செலுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.எஸ் இற்கு எதிரான போராட்டத்தில் சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்திற்கு ஆதரவாக ஹிஸ்புல்லா போராளிகள் போராடி வருகின்றனர்.

அத்துடன், அல் சுக்னா பகுதியை கைப்பற்றும் பொருட்டு சிரிய இராணுவத்தினர் மூன்று பக்கங்களில் இருந்து முன்னேறிச் செல்வதாகவும் அவர்களுடன் இணைந்து ஹிஸ்புல்லா போராளிகளும் தாக்குதல் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

# அமெரிக்கா மீது கடும் கோபத்தில் வடகொரியா



தொடர் ஏவுகணைச் சோதனை எதிரொலியாக பொருளாதார தடை விதித்துள்ள அமெரிக்காவுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது வடகொரியா.

வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த பொருளாதார தடையை ஐக்கிய நாடுகள் மன்றம் ஏற்றுக் கொண்டதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள அந்த நாடு, அமெரிக்காவை அழித்தொழிக்க வேண்டும்என எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறித்த எச்சரிக்கையை வடகொரியாவின் அதிகார பூர்வ செய்தி நிறுவனம் ஒளிபரப்பியுள்ளது.

ஆனால் குறித்த பொருளாதார தடைக்கு ஒப்புதல் அளித்தது ஐக்கிய நாடுகள் மன்றம் என்ற போதிலும், அதற்கு முயற்சி மேற்கொண்டது அமெரிக்கா என்பதால் அமெரிக்கா மீது வடகொரியா கடும் கோபத்தில் இருப்பதாக கூறப்படுகிறது.

குறித்த பொருளாதார தடை காரணமாக வடகொரியாவின் ஏற்றுமதி கடும் வீழ்ச்சியை சந்திப்பது மட்டு மன்றி வெள்நாடுகளில் இரு ந்து வரும் முதலீடுகள் மட்டுப்படும். இதனால் கடும் பொருளாதார நெருக்கடியை வடகொரியா சந்திக்க நேரிடும்.

ஐக்கிய நாடுகள் மன்றத்தின் குறித்த தடையானது இந்த தலைமுறையில் எடுக்கப்பட்ட கடும் நடவடிக்கை என, ஐக்கிய நாடுகள் மன்றத்திற்கான அமெரிக்காவின் தூதர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் வடகொரியா மேற்கொண்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனைக்கு பதிலடி தரும் வகையில் இந்த பொருளா தார தடையானது பார்க்கப்ப டுகிறது.

வடகொரியாவின் குறித்த ஏவுகணை சோதனையானது அமெரிக்கா வரை சென்று தாக்கும் வல்லமை கொண்டது என கூறப்படுகிறது.

ஆனால் ஐக்கிய நாடுகள் மன்றம் மேற்கொண்டுள்ள இந்த தடையானது அமெரிக்காவின் அறுதிக்கு வழி வகுக்கும் என வடகொரிய ஊடகம் காட்டமாக கருத்து வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா முன்மொழிந்துள்ள பொருளாதார தடைக்கு இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் வரவேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (8)

# பிரபாகரனின் இராஜதந்திரம்!



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு இராணுவக் கட்டமைப்பை மகத்தான கட்டமைப்பாக உருவாக்கியதாக தமிழ் நாட்டு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார். அத்துடன், அவரை மகத்தான போராளியாகவும், மாபெரும் சாதனையாளராகவும் மாற்றியது அவரது கொள்கை பிடிப்புதான் என தெரிவித்துள்ளார்.

கலைஞர் வீர சந்தானத்தின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (8)

# வெள்ளத்தில் சிக்கி 26 பேர் பலி

## கடுமையான பொருட்சேதம் ஏற்பட்டுள்ளதாக அரசு தகவல்

வியட்நாமில் கடந்த வாரம் முழுவதும் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 26 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 41 மில்லியன் டொலர்கள் அளவுக்கு பொருட்சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.



வியட்நாமில் கடந்த வாரம் முழுவதும் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 26 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 41 மில்லியன் டொலர்கள் அளவுக்கு பொருட்சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாமில் கடந்த வாரத்தின் தொடக்கத்திலிருந்து கடுமையாக மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக அந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வெள்ளப்பெருக்காக காணப்படுகிறது.

நான்கு மாகாணங்களில் சுமார் 200-க்கும் மேற்பட்ட வீடுகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மழை மற்றும் வெள்ளச் சேதம் தொடர்பாக அந்நாட்டின் பேரிடர் மையம் அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், வெள்ளத்தில் சிக்கி 26 பேர் உயிரிழந்துள்ளதாகவும், சுமார் 41 மில்லியன் டொலர் அளவுக்கு பொருட்சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் பாதித்த இடங்களில் மீட்புப்பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதாக தெரிவித்துள்ள பேரிடர் மையம், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளது. (8)

# ஏவுகணை சோதனைகள் மேற்கொள்வதை வடகொரியா தவிர்க்க வேண்டும் - சீனா

ஐ.நா.பாதுகாப்புச் சபையின் தீர்மானத்திற்கு இணங்கி அணுவாயுத மற்றும் ஏவுகணை சோதனைகள் மேற்கொள்வதை வடகொரியா தவிர்க்க வேண்டும் என சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அத்துடன், மேன்மேலும் ஏவுகணைச்சோதனைகளை மேற்கொள்ள வடகொரியாவைத் தூண்டாத வகையில் தென்கொரியா மற்றும் அமெரிக்கா தங்களது நடவடிக்கைகள் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த கூட்டத்தின் போது, வடகொரியாவின் வெளியுறவு அமைச்சர் யொங் ஹோவையும் வாங் யீ சந்தித் துள்ளார். வடகொரியா மீது புதிய தடைகளை விதிப்பது என ஐ.நா தீர்மானம் மேற்கொண்டதைத் தொடர்ந்தே குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# பன்னீர்செல்வத்தைக் தாக்க முயன்ற நபர் கைதானார்

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்தை, திருச்சி விமான நிலையத்தில்வைத்து, நபரொருவர் கத்தியால் குத்த முயன்ற சம்புவம், பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சோலராஜன் என்பவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அ.தி.மு.க இணைப்புமுயர்சிகள் கேள்விக்குறியான நிலையில், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, தினகரன் கோஷ்டியைச் சேர்ந்த அமைச்சர் விஜயபாஸ்கர், செந்தில் பாலாஜி ஆகியோருடன், முன்னாள் முதலமைச்சர் ஓ.பிஎஸ், ஒரே விமானத்தில் திருச்சி வந்தடைந்தார். திருச்சி விமான நிலையத்தில், ஊடகவியலாளர்களிடம், ஓ.பிஎஸ்பேசிக் கொண்டிருந்தார். இதன்போது, அ.தி.மு.க தொண்டர்களை விலக்கிக் கொண்டு, ஓ.பிஎஸ்ஸை நோக்கி, நபரொருவர் வேகமாக வருவதை அவதானித்த அ.தி.மு.க தொண்டர்கள், அங்கிருந்த தொழிலகப் பாதுகாப்பு படையினருக்கு, அது குறித்து அறிவித்துள்ளனர்.

உடனடியாக அந்த நபரை மடக்கிப் பிடித்து சோதனை செய்த போது, அந்த நபரிடமிருந்து கத்தியொன்று மீட்கப்பட்டுள்ளது. இதனால், ஆத்திரம் கொண்ட அ.தி.மு.க தொண்டர்கள், கைது செய்யப்பட்ட நபரைத் தாக்கியமையால் விமான நிலையத்தில் சிறிதுநேரம் பரபரப்பு நிலவியது.

தொண்டர்களிடமிருந்து சந்தேகநபரை மீட்ட தொழிலக பாதுகாப்பு படையினர், அவரை, திருச்சி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (8)

# பயங்கரவாதிகளின் கொலைப் பசிக்கு இரையான ஆப்கான் பொதுமக்கள்

பெண்கள், குழந்தைகள் என 50இற்கும் அதிகமான பொதுமக்கள் பயங்கரவாதிகளால் மிகவும் கொடூரமான மற்றும் ஈவிரக்கமற்ற முறையில் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் வடக்கு ஆப்கானிஸ்தானில் இடம் பெற்றுள்ளது.

சர-புல் மாகாணத்திலுள்ள மிர்சவாலாங் பகுதியில் பொலிஸ் சோதனை சாவடி மீது தாக்குதல் நடத்தி கிராமத்திற்குள் நுழைந்த பயங்கரவாதிகள், அங்கு பெண்கள், குழந்தைகள் என பாகுபாடின்றி மக்களை சுட்டு வீழ்த்தியுள்ளனர். சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் பெரும்பாலும் ஷியா முஸ்லிம்கள் என மாகாண ஆளுநரின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், குறித்த சம்பவத்தில் ஏழு பாதுகாப்பு படை உறுப்பினர்களும் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தலிபான் மற்றும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் இணைந்தே மேற்படி தாக்குதலை முன்னெடுத்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் பொதுமக்களை கொலை செய்ய வில்லை என தலிபான் அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை இத் தாக்குதலுக்கு கடும் கண்டனத்தை வெளியிட்ட ஆப்கான் ஜனாதிபதி அஷ்ரஃப் கனி, பயங்கரவாதிகளின் காட்டுமிராண்டித்தனமான இச் செயலானது நேரடியாக மனித உரிமைகளை மீறுவதாக அமைவதுடன், இது பாரிய போர்க்குற்றமாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத நடவடிக்கைகளில் போராளிகள் ஈடுபடமாட்டார்கள்

(கொழும்பு)

**மிகுந்த கட்டுக்கோப்புடன் நேர்த்தியாக வாழ்ந்த போராளிகள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டார்கள் என புனர்வாழ்வளிக்கப்பட்டு சமுதாய மயப்படுத்தப்பட்ட நபர்களின் ஒன்றியத்தின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்துள்ளார்.**

திருகோணமலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடபகுதியில் முன்னெடுக்கப்படும் பல சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு முன்னாள் போராளிகளே காரணம் என தவறாகப் பார்க்கப்படுகிறது.

முன்னாள் போராளிகள் மிகவும் கட்டுக்கோப்புடன் நேர்த்தியாக வாழ்ந்தவர்கள். அவர்கள் அவ்வாறான ஈனச் செயல்களை செய்யமாட்டார்கள்.

நாம் நெருக்கடிகளுக்கும் மன உளைச்சல்களுக்கும் மத்தியில் வாழ்ந்துவரும் நிலையில் இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டுகள் எமக்கு மிகுந்த வேதனை அளிக்கின்றது.

அத்துடன் அரசும் அரசியல்வாதிகளும் எமக்காக குரல்கொடுக்க மறுக்கின்றார்கள். நாம் பலவகைகளில் புறக்கணிக்கப்படுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



# ‘ஊழலை நிறுத்தியிருந்தால் குத்தகை தேவையில்லை’

## கோப் குழு தலைவர் குத்தல்



(கொழும்பு)

கடந்த ஒன்றரை வருட காலப்பகுதியில், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவால் (கோப்), 58 நிறுவனங்கள் சம்பந்தமாக வழங்கப்பட்ட அறிக்கைகளை சரியாக ஆராய்ந்திருந்தால், அம்பாந்தோட்டை துறைமுகத்தை, குத்தகைக்கு விட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது என்று, கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

“இந்தக் காலப்பகுதியில் நடைபெற்ற 98 கூட்டங்களில், இலங்கைப் பெற்றோலியக்கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், மகநெகும, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியம், துறைமுக அதிகாரசபை உள்ளிட்ட அரச நிறுவனங்களில் பணங்களை சரியாக கையாளாத விடயமும் மோசடியும், கோப் இனால் வெளிப்படுத்தப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

இவை சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு இவற்றைத் தடுப்பதற்கும் இந்த நிறுவனங்களால் ஏற்படும் இழப்புகளை மீளப் பெறவும், நடவடிக்கை எடுத்திருந்தால், அம்பாந்தோட்டை துறைமுகத்தை, குத்தகைக்கு விடுவதன்மூலம் பெறப்பட எதிர்பார்க்கும் பணத்தை, பெற்றிருக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயங்களை, சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தின் அதிகாரிகள் பங்குகொண்ட கூட்டத்தில் தான் வெளிப்படுத்தி இருந்ததாக, அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அமைச்சர் ரவிக்கு எதிரான

# ‘நம்பிக்கையில்லாத் தீர்மானம் தேவையில்லை’- சு.க. அமைச்சர்



மத்திய வங்கியின் திறைசேரி பிணைமுறி விவகார சர்ச்சையில் சிக்கியுள்ள வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரத் தேவையில்லை என்று நம்புவதாகத் தெரிவித்த மீன்பிடி மற்றும் நீர்வள மூல அமைச்சர் மகிந்த அமரவீர, செய்யப்பட வேண்டியவை, செய்யப்படவேண்டிய காலத்துக்கு முன்னரே செய்து முடிக்கப் படும் என்றும் கூறினார்.

எவ்வாறாயினும், அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய தீர்மானம் தொடர்பாக, ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடியுள்ளதாகத் தனக்குத் தெரியவந்துள்ளதாக வும் அவர் கூறினார்.

“திறைசேரி பிணைமுறி விவகாரம் தொடர்பாக, முதலாவதாக முறைப்பாடு செய்தவன் நானே. இது தொடர்பாக, இன்று பலரும் உரிமை கோருகின்றனர். ஆனால், என்னாலேயே முதலாவதாக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது என்பதை நான் கூறவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வருட இறுதிக்குள், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தி முடிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்ததர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### வீட்டைக் குருசேத்திரம் ஆக்குகிறவர்கள்!

சில குடும்ப உறுப்பினர்கள் ஒன்றும் இல்லாத விடயத்தையெல்லாம் பெரிதாக்கி வீட்டையே போர்க்களமாக்கி விடுகிறார்கள். இவர்களால் எப்போதும் தொல்லைதான்.

செலவு வைத்துவிட்டாயே என்று கத்துகிறார்கள். என்னைத் தேடி இன்னார் வந்து சென்றார்கள் என்று ஏன் என்னிடம் சொல்லவில்லை என்று சத்தம் போடுகிறவர்கள்; சாப்பாடு சரியில்லை என்று கூப்பாடு போடுகிறவர்கள், வைத்த இடத்தில் ஒரு பொருளைக் காணோம் என்று குதிப்பவர்கள்.

இப்படி அன்றாடம் நடக்கும் சாதாரண விடயங்களை எல்லாம் பூதாகரப்படுத்துகிறவர்கள் ஒன்றை அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் நம் கண்ணோட்டத்திலேயே சிந்திக்க மாட்டார்கள். நம் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நடந்து கொள்ளமாட்டார்கள் என்பதே அது.

எவரையும் அடியோடு திருத்துவது என்பது மிகக் கடினம். நமக்காக மற்றவர்கள் ஓரளவு தான் தங்களை மாற்றிக் கொள்வார்கள். இதுவே பெரிய விடயம். அதிலும் சரியான அணுகுமுறை இருந்தால்தான் மாறுவார்கள். காச்மூச் என்று கத்துவதும் மிரட்டுவதும் மற்ற குடும்ப உறுப்பினர்களை ஒருபோதும் மாற்றிவிடாது. மாறாக எரிச்சலை உண்டு பண்ணி மேலும் பிரச்சினையைப் பெரிதாக்கும்.

எனவே எந்த விடயம் நம்மை உண்மையில் கவலைக்கு உள்ளாக்குகிறது என்பதை மற்ற குடும்ப உறுப்பினர்களிடம் தெளிவுபடுத்த வேண்டும். இதையும் ஆற அமரப் பேசும்போது சொல்லி வைக்க வேண்டுமே தவிர, அவசரமாக வெளியில் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது படபடவென்று இயந்திரத் துப்பாக்கி ரவைகளை உதிர்ப்பது போல் வார்த்தைகளை உதிர்த்து விட்டுப் போகக் கூடாது.

மற்ற மனிதர்களை விட, ஒரு பொருளைவிட, பணத்தைவிட, நம் குடும்ப உறுப்பினர்களே நமக்கு முக்கியம்! மாறாக, மற்ற மனிதர்களும் உடைந்து போன ஒரு பொருளும் செலவாகப் போகும் பணமும் முக்கியம் என எண்ணிக் கொண்டு குடும்ப உறுப்பினர்களைப் பகைத்துக் கொள்ளவோ அவர்களது வருத்தத்தைச் சம்பாதித்துக் கொள்ளவோ கூடாது.

குடும்ப உறுப்பினர்களால் நமக்குப் பாதிப்பு ஏற்பட்டால் கோபித்துக் கொள்வதைத் தவிர வேறு மாற்று யோசனையே இல்லையா அது ஒன்று தான் வழியா, என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

குடும்பம் என்றால் நான்கும் இருக்கும்; சண்டை சச்சரவு சகஜம் என்று நம்மை நாமே சமாதானப்படுத்திக் கொண்டு, அவ்வப்போது அடித்துக் கொள்ளக்கூடாது. காரணம் ஒவ்வொரு சண்டையி லும் பலவிதமான மனவருத்தங்கள் வடிகட்டப்பட்டு ஆழமான மனத்தில் தங்கி விடுகின்றன.

காலங்காலமாக ஒன்றாக வாழ வேண்டியவர்களுடன் எப்போதும் சண்டை பிடித்துக் கொண்டிருந்தால் மனநிம்மதி என்பது மருந்திற்கும் இல்லாமல் போய்விடும்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## எதிர்ப்பு



Bigg Boss நிகழ்ச்சியில் இருந்து ஓவியா வெளியேறியது ரசிகர்களுக்கு வருத்தம். ஆனாலும் நிகழ்ச்சியில் உள்ளவர்கள் மற்றவர்களின் சுயரூபத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்று பலரும் எதிர்பார்த்தனர்.

இந்த நிலையில் புதிதாக வந்த புரொமோவில் Bigg Boss ரைசாவை புதிய தலைவராக நியமிக்கிறார். ஆனால் அதை ஏற்றுக் கொள்ள முடியாத ஷக்தி, ஆரவ் நீயே தலைவராக இரு என்கிறார். பின் சினேகன், வையாபுரி, ஷக்தி, காயத்ரியின் உண்மை முகங்களை பற்றி பேசுகின்றனர்.

## நடிப்பு




தமிழகத்தில் தற்போது எங்கு திரும்பினாலும் பிக்போஸ் பேச்சு தான். இந்நிலையில் இதுகுறித்து பல நடிகர்கள், நடிகைகள் தங்கள் கருத்துக்களை கூறி வருகின்றனர்.

தற்போது பேஸ்புக் பக்கத்தில் சமுத்திரக்கனி பெயரில் ஒரு ஐடி உலா வருகின்றது. பலரும் அது சமுத்திரக்கனி பக்கம் தான் என நம்புகின்றனர்.

ஆனால், அது போலி ஐடி என சமுத்திரக்கனியே தெரிவித்துள்ளார், ஏனெனில் அந்த பக்கத்தில் 'பிக்போஸ் ஒரு போலி நிகழ்ச்சி.

அதெல்லாம் முன்பே பேசி வைத்துவிட்டு தான் விளையாடுகிறார்கள்' என கூறப்பட்டுள்ளது. இதற்காக சமுத்திரக்கனி 'எனக்கும் அந்த பக்கத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை, அதை கண்டுக்கொள்ளாதீர்கள்' என கூறியுள்ளார்.

## விஸ்வரூபம்



பிக்போஸ் நிகழ்ச்சியை அனைவரும் கவனிக்க முதல் காரணம் உலகநாயகன் கமல்ஹாசன் தான். ஆனால் அவர் காயத்ரிக்கு ஆதரவாக செயற்படுகிறார் என்று குற்றச்சாட்டு தொடர்ந்து எழுந்துவருகிறது.

இதனால் கமல் தன்மீதும், இந்நிகழ்ச்சி மீதும் வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை வார முடிவில் பேசி தீர்த்து வைக்கிறார். அந்த வகையில், இந்த வாரமும் காயத்ரி தொடர்ந்து கெட்ட வார்த்தை பயன்படுத்துகிறார் என்பதை கண்டித்தார். அவர் என்ன என்று கேட்டபோது தலைமுடியை தொட்டு ஹேர் மாதிரினு காயத்ரி கூறியதை சுட்டிக்காட்டினார்.

அதே போல் காயத்ரி உரையாடல் என்றால் என்ன என்று கேட்க உங்களுக்கு சீராகவே என்பதற்கு அர்த்தம் தெரியவில்லை என்று கிண்டல் செய்தார்.

பேசும் போது, உங்களுக்கு மட்டுமல்ல பிக்பாஸ்க்கும் இதை நான் கூறிக்கொள்கிறேன். ஹிந்தியில் 10 சீசன் தாண்டியிருக்கலாம். ஆனால் தமிழனுக்கு சுயமரியாதை அதிகம் இங்கு வரும்போது சில கண்ணியம் இருக்க வேண்டும் என்று கையசைத்து எச்சரிக்கை செய்தார். போட்டியாளர்களை மனநிலை சரியில்லாதவர்களாக வைத்து நடத்தியதையும் கண்டித்தார்.

ஆரவ்விடம் ஓவியாவிற்கு முத்தம் கொடுத்ததை மற்றவர்களிடம் ஒப்புக்கொள்ளச் சொல்லி புரிய வைத்தார்.

ஷக்தி ஓவியாவிடம் மன்னிப்பு கேட்காததை மீண்டும் சுட்டிக்காட்டினார். காயத்ரி, ஷக்தி நாட்டாமைத்தனம் செய்கிறார்கள் என்பதையும் மற்றவர்கள் வாயால் சொல்ல வைத்தார்.

தன் மீது வழக்கு போடுவதைக் கண்டு தனக்கு அச்சமில்லை என்றும் கூறினார். இன்னும் வரும் வாரங்களிலும் உலகநாயகனின் விஸ்வரூபத்தை காணலாம்.



சினேகனின் தோற்றங்கள்

## உரிமை இல்லை




BiggBoss நிகழ்ச்சியில் அதிரடியாக பல திருப்பங்கள் நடந்து வருகிறது. கடந்த வாரங்களில் ஓவியா சில காரணங்களால் நிகழ்ச்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். அதோடு ஜூலி இந்த வாரம் BiggBoss வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார். இந்த நிலையில் கமல்ஹாசன் அவர்கள் காயத்ரி அதிகம் தவறான வார்த்தைகள் பயன்படுத்துவதாக அவரிடம் கூறியிருந்தார். தற்போது வந்த புரொமோவில், கமல்ஹாசன் அவர்கள் கேட்கும் வார்த்தைகள் எனக்கு கஷ்டமாக இருக்கிறது. என்னை சரி செய்ய என் அம்மாவிற்கு மட்டும் தான் உரிமை இருக்கிறது என்று கோபமாக பேசுகிறார்.

## திருமணமாம் திருமணம்



BiggBoss நிகழ்ச்சியை அடுத்து ஓவியாவிற்கு நிறைய ரசிகர்கள் வந்துவிட்டனர். நிகழ்ச்சியில் இருந்து வெளியேறிய அவர் பிரபல மாலுக்கு சென்றுள்ளார். அங்கு ரசிகர்களுடன் நிறைய புகைப்படங்களும் எடுத்திருக்கிறார். அந்த படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

இந்த நிலையில் BiggBoss நிகழ்ச்சியில் ஓவியாவிற்கு ஆதரவாக பல டுவிட்டுக்கள் செய்தார் சிம்பு.

அதோடு சிம்பு, ஓவியாயை திருமணம் செய்ய தயார் என்று டுவிட் செய்ததாக கூறப்பட்டது. ஆனால் சிம்பு போட்டதாக கூறப்பட்ட அந்த டுவிட்டர் பக்கம் போலி என்பது உறுதியாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக இசையரங்கின் பன்னிரண்டாம் நாள் நிகழ்வு

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப் பழை துர்க்காதேவி தேவஸ் தானத்தின் அனுசரணையு டன் நடத்தும் தெய்வீக இசை யரங்கின் பன்னிரண்டாம் நாள் நிகழ்வு இன்று செவ் வாய்க்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணி வரை நல்லூர்துர்க்காதேவிமணிமண் டபத்தில்இடம்பெறும். வயலின்- அ.ஜெயராமன், மிருதங் கம்- க.நந்த குமார், தபேலா- சதாவேல் மாறன் , முகர்சிங் -ஜெ.சாரங்கன் ஆகியோர் இவ் வயலின் சோலோ நிகழ் வில் கலந்து கொள்வர்.(இ-3)

# தெய்வீகச் சிறப்பு நிகழ்வின் பன்னிரண்டாம் நாள் இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலயமஹோற்சவத்தைமுன் னிட்டு உலக சைவத் திருச் சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வின் பன்னிரண் டாம் நாள் நிகழ்வு இன்று செவ் வாய்க்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 7.45 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறு முக நாவலர் மணி மண்ட பத்தில் சிவஸ்ரீ கதிர் குமார சாமி சுமுகலிங்க சிவாச்சாரி யார் தலைமையில் இடம் பெறும். இந் நிகழ்வில் "உதித் தனன் உலகம் உய்ய" எனும் தலைப்பில் சைவப் புலவர் எஸ்.ரி.குமரன் சொற் பொழி வாற்றுவார். (இ-3)




# மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா 12 ஆம் நாள் நிகழ்வு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்வச காலத்தை முன்னிட்டு நடத்தும் யாழ்.மாவட்ட அற நெறிப் பாடசாலை மாண வர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழாவின் பன்னிரண்டாம் நாள் நிகழ்வு இன்று செவ் வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண் டபத்தில் இந்து சமய கலா சார அலுவல்கள் திணைக் கள உதவிப் பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி கும ரன்தலைமையில்இடம்பெறும். இந் நிகழ்வில் விருந் தினராக உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அதிபர் க.திரு நாவுக்கரசு கலந்துகொள் வார்.

இந் நிகழ்வில் காரைநகர் பிரதேச செயலர் பிரிவிற்குட் பட்ட கிழவன்காடு கலாமன்ற அறநெறிப் பாடசாலை மாண வர்களின்நடனம், பண்ணிசை, மிருதங்கம், பேச்சு என்பன இடம்பெறவுள்ளதுடன் உடு வில் பிரதேச செயலாளர் பிரி விற்குட்பட்ட இளந் தொண் டர் சபை அறநெறிப் பாட சாலை மாணவர்களின் நாட கம், கதாபிரசங்கம் என்பன வும் இடம்பெறும். (இ-3)

# கந்தபுராண எழுச்சி விழா பன்னிரண்டாம் நாள் நிகழ்வு

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ் வியல் தொடர்பான விழிப் புணர்வை மேம்படுத்தும் நிகழ்வு அரங்கேறும் கந்த புராண எழுச்சி விழாவின் பன்னிரண்டாம் நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம் பெறும். நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல் வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள், யாழ்ப் பாணம் ஸ்ரீ பரமேஸ்வரர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இ. பிரணவ ஹர்த்திகர குருக்கள் ஆகியோர் முன்னிலையில் இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி. ஹேம லோஜினி குமரன் தலைமை யில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் மகாலிங்கம் ஞானசம்பந் தன் கலந்து கொள்வார். இந் நிகழ்வில் அறநெறிப் பாட சாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளதுடன், கந்த புராணம் தொடர்பான ஆன் மீகச் சொற்பொழிவினை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் வரணியூர் சைவப் புலவர் கமலநாதன் வழங்குவார். (இ-3)



# தேரடியில் காட்சி தரும் சண்முகா

நல்லையிலே வீற்றிருக்கும் முருகா - எமக்கு
நல்ல செய்தி தந்தருள்வாய் முருகா
நால் நிலம் போற்றி நிற்கும் முருகா - உனை
நாடி வந்தோம் காத்தருள்வாய் முருகா
தேவர் சிறை மீட்டெடுத்த முருகா - எம்மை
தேடி வந்து காத்தருவாய் முருகா
தேரேறி வந்தருளும் சண்முகா - நல்லூர்
தேரடியில் காட்சி தருவாய் சண்முகா

கு.சிவசேந்தன்
யா/ இந்துக் கல்லூரி





நல்லூர்ச் ஆலயச் சூழலில் கந்தபுராண எழுச்சி இடம்பெறும் சூழலில் கந்தபுராணத்தை இலகு தமிழில் எளிய கவிநடையில் எழுதி வெளியிட்டுள்ளார் நீர்வேலி தியாக மயூரகிரிக் குருக்கள். கந்தபுராணத்தில் உள்ள ஆறு காண்டங்களிலும் உள்ள முக்கிய சம்பவங்களைத் தொட்டுக் காட்டுவதாக நூல் அமைந்துள்ளது. நல்லூர் முருப்பெருமானுக்கு அர்ப்பணமாக நல்லூர் மஞ்சத்திருநாளான நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட இந்நூலின் சிறப்புப் பிரதிகள் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைத்தன்யா, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டன.

# ஓடி வருவாய்



ஆடி வருவாய் நீ
ஆடி வருவாய்
அன்பர் துயர் போக்கிட
நீ ஆடி வருவாய்
ஓடி வருவாய் நீ
ஓடி வருவாய்
வடி வேலுடனே
நீ ஓடி வருவாய்
கள்ளமற்ற உள்ளம் என்றும்
கோயில் கொண்ட நீ
ஆடி வருவாய்
மலைக் குற வள்ளி மணாளனே
நீ ஓடி வருவாய்
வேலும் மயிலும் கையிலிருக்க
சேவற் கொடி மேலிருக்கு
ஓடி வருவாய்

சி.நிலாஜினி
சுழிபுரம்

# தியான நிலையங்களே ஆலயங்கள் ஆன்மீக அருளுரைகள் இன்று

நல்லூர்உற்சவகாலத்தை முன்னிட்டு யாழ்.சின்மயா மிஷன் நடத்தும் 'ஆன்மீக அருளுரைகள் (ஞான யக் ஞம்) இன்று செவ்வாய்க் கிழமை இரவு 7.15 மணி முதல் இரவு 8 மணி வரை இல. 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந் துள்ள சின்மயாமிஷனில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைத்த ன்யா ''தியான நிலையங் களே ஆலயங்கள்'' எனும் தலைப்பில் அருளுரை வழங் குவார். (இ-3)

# ஐ.தே.கவில் போட்டியிட கஞ்சாக்காரர்களுக்கு இடமில்லை- பியதாஸ

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சியினர் குற்றச் செயல்களில் ஈடு படாதவர்களாக இருக்க வேண்டும் என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினரும் அம்பகமுவ பிர தேச ஐக்கிய தேசிய கட்சி யின் பிரதான அமைப்பாள ருமான கே.கே.பியதாஸ தெரிவித்துள்ளார்.

அதனை உறுதிப்படுத்த பொலிஸ் சான்றிதழ்கள் பெறப்பட வேண்டும் என வும் அவர் வலியுறுத்தியுள் ளார்.

பிரதமர் ரணில் விக்கிர மசிங்கவின் 40 ஆண்டு கால அரசியல் வாழ்க்கை பூர்த்தியை முன்னிட்டு ஹற்றனில் ஏற்பாடு செய் யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றிய போதே கே.கே. பியதாஸ இதனைத் தெரி வித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் ஐ.தே.கட்சியில் போட்டியிட கஞ்சாக்காரர்களுக்கோ,திரு டர்களுக்கோ, சமூக விரோ திகளுக்கோ இடமில்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் அம்பகமுவ பிரதேச உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிட நூற் றுக்கு 25 சதவீதம் பெண்க ளுக்கும் வாய்ப்பளிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (இ-7)

# சிந்தா குலம் தீர்க்க வா முருகா



மெய்யது விதிர் விதித்தேன் முருகா
செய்ய பொற்பாத குஞ்சரி மணாளா
மையவே வந்தென் மேனிதொடு
கைவேலொடு கருணை காட்டு பாவியர்க்கும்!
மெய்யே என் நோய்க்கு மருந்தாத
மால்கிறேன் நினை காணா வேதனையில்
தேன் செவ்விதழ் சிரிப்புக்காண விளைகிறேன்
என் சிந்தா குலம் தீர்க்க வாராயோ வேலவா!

மண்டை தீவு
கை.பேரின்பநாயகம்

# இசைப் பேருரையில் 'கல் பெண்ணானது'

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தப் பெரு மானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபை 30 வருடங்க ளுக்கு மேலாக நடத்தி வரும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரை (சங்கீத கதாப் பிர சங்கம்) இன்று செவ்வாய்க் கிழமை மாலை 6.30 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் இடம் பெறும். கம்பராமாயணம் பற்றிய இசைப் பேருரையில் இன்று "கல் பெண்ணானது" எனும் தலைப்பில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி கலாபூஷ ணம் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார். (இ-3)

# நல்லைக்கந்த சந்தப் "பா"



பாட்டி ஔவையின் பாட்டுக் கேட்கவே
பாலன் போலொரு வேடம் போட்டனை
வாட்டி யேபல கேள்வி கேட்டனை
வாடு மம்மைக்குன் வனப்பைக் காட்டினை
கூட்டித் தத்துவம் மேவி யிட்டனை
குவலயத்திலே தூவி விட்டனை
நாட்டி லேதுய ரோட்டுங் காவலா
நம்பி வேண்டினேன் நல்லைக் கந்தப்பா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துன்னாலையில் சுற்றிவளைப்பு தொடர்கிறது

(கரணவாய்)

இருபத்து நான்கு மணித்தியாலத்திற்குள் மூன்றாவது முறையாகவும் வடமராட்சி துன்னாலைப்பகுதி நேற்று முன்தினம் அதிகாலை சுற்றிவளைக்கப்பட்டு பெரும் எடுப்பில் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டதில் பத்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டதுடன் ஆவணமின்றி காணப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டது.

கடந்த09.07.2017 அன்று வடமராட்சி கிழக்கு குடத்தனைப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனம் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் துன்னாலை கிழக்கைச் சேர்ந்த யோகராசா தினேஸ் (வயது-25) என்ற இளைஞர் பலியானார்.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பருத்தித்துறைப் பொலிஸாரின் ஜீப் வண்டி சேதமாக்கப்பட்டதுடன் மந்திகை -கொடிகாம வீதியில் இருந்த பொலிஸ் காவலரண் ஒன்று அடித்து உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது.

மறுநாள் (10.07.2017) அன்று வீதிகளில் ரயர் போட்டு எரிக்கப்பட்டு கலிகை துன்னாலை வீதியூடான போக்குவரத்து தடுக்கப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதிக்கு சென்ற விசேட அதிரடிப்படையினரின் பவள் கவச வாகனம் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டதில் பவள் கவச வாகனம் சேதமடைந்தது.

இந்நிலையில் கடற்படையினர் மீது வல்லிபுரம் மாவடிச் சந்தியில் வைத்து சட்டவிரோத மணல் ஏற்றி வந்தவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.

இதனையடுத்து பாதுகாப்பு தொடர்பில் ஆராய்வதற்காக கடற்படைத் தளபதி அப்பகுதிக்கு வந்து நிலைமைகள் குறித்து ஆராய்ந்திருந்தார்.

இதேவேளை கொடிகாமம் பொலிஸில் உப பரிசோதகராக கடமையாற்றி வந்த பொலிஸ் உத்தியோகத்தர் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது வரணி தில்லையம்பலம் வீதியில் வைத்து தாக்கப்பட்டார்.

தொடர்ந்து கொழும்பில் இருந்து விசேட அதிரடிப் படையினர் வரவழைக்கப்பட்டிருந்தனர். இதன் இடம்பெற்ற கடற்படையினர் மீதான தாக்குதல் வன் செயல்களில் ஈடுபட்டவர்களை கைது செய்வதற்காக கடந்த சனிக்கிழமை (05.08.2017) காலையும் மாலையும் இரண்டு தடவைகள் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து துன்னாலை குடவத்தை வேம்படி பகுதிகளைச் சுற்றி வளைத்தனர்.

காலையில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில்மூன்றுஇளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதுடன் ஐந்து ஹன்ரர் வாகனங்களும் ஒன்பது மோட்டார் சைக்கிள்களும் பறிமுதல் செய்யப்பட்டன. மாலையில் நடத்தப்பட்ட சுற்றி வளைப்பு ஒரு ஹன்ரர் வாகனமும் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பறி முதல் செய்யப்பட்டது.

மீண்டும் மூன்றாவது தடவையாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணியளவில் துன்னாலை குடவத்தை வேம்படி பகுதிகளை உள்ளடக்கிய கலிகை தாமரைக்குளத்தடி வெள்ளை றோட் வெலிக்கம் தோட்டத்தினை அண்டிய பகுதிகளூடாக சுற்றிவளைத்த விஷேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் வீடு வீடாகச் சென்று சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது அப் பகுதியில் இருந்த பத்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டனர். ஒரு மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டது. (இ-60)

# ஐ.நாவின் இரண்டு நிபுணர்கள் விரைவில் இலங்கை வருகை

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து மதிப்பிடுவதற்காக உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஐக்கிய நாடுகளின் இரண்டு விசேட நிபுணர்கள் இலங்கை வரவுள்ளனர். அத்துடன் பலவந்தமாக தடுத்துவைத்தல் தொடர்பான செயற்குழுவும் இவ்வருடம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

சுதந்திரமாக கருத்துக்களை வெளிப்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான விசேட அறிக்கையாளர் மற்றும் உண்மை, நீதி நட்டஈடு, மீள்நிகழாமை தொடர்பான விசேட நிபுணர் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதுடன் மனித உரிமை நிலைமைகளை மதிப்பீடு செய்யவுள்ளனர்.

இவ்வருடத்தின் இறுதி பகுதியில் இந்த விஜயங்கள் இடம்பெறவுள்ளன. இதே வேளை, பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளின் போது மனித உரிமையை பாதுகாத்தல் தொடர்பான நிபுணர் பென் எமர்ஷன் கடந்த ஜூலை மாதம் இலங்கைக்கு வந்திருந்தார். அவர் ஐந்து நாட்கள் இலங்கையில் தங்கியிருந்ததுடன் மனித உரிமைகள் குறித்து ஆராய்ந்திருந்தார்.

அதன்படி மேலும் ஐக்கிய நாடுகளின் இரண்டு விசேட நிபுணர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர். இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே இந்த விஜயங்கள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 35 ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொண்ட இலங்கையின்· ஜெனிவாவுக்கான தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க குறிப்பிடுகையில்,

இலங்கையின் முக்கியமான தேவைகள், நல்லிணக்க செயற்பாடுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் பல்வேறு ஐ.நா. விசேட நிபுணர்களை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருக்கின்றோம்.

சுதந்திரமாக கருத்துக்களை வெளிப்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான விசேட அறிக்கையாளர் மற்றும் உண்மை, நீதி நட்டஈடு, மீள்நிகழாமை தொடர்பான விசேட நிபுணர் ஆகியோர் இலங்கை வரவுள்ளனர்.

அத்துடன் பலவந்தமாக தடுத்து வைத்தல் தொடர்பான செயற்குழுவும் இவ்வருடம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது என்று கூறியிருந்தார். (இ-7)

# முறி மோசடி; அடுத்த சாட்சி பர்பேசுவல் ட்ரசரீஸ் கம்பனி நிறைவேற்று அதிகாரி

(கொழும்பு)

பர்பேசுவல் ட்ரசரீஸ் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன இன்று மத்திய வங்கி முறி மோசடி தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகவுள்ளார்.

கசுன் பலிசேனவிடம் சாட்சி விசாரணைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், மத்திய வங்கியில் பணித்தடை செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் சமன் குமார ஆணைக்குழுவுக்கு அழைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)

# (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1156

facebook. Search for people, places and things Nagendram Home

### யமேலா




### தேவன்




### வைஸ்ணவி




### கணேஸ்




### கேசவன்




### வினோத்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## (27.07.2017 முதல் 13.02.2019 வரை)

## ஜென்ம கேது விலகியது! நன்மைகள் நாடி வரும்!








(பெயரின் முதல் எழுத்துக்கள்: கு,கூ, கோ,ஸி,ஸீ,ஸே,ஸோ,தா உள்ளவர்களுக்கும்)

மற்றவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான கும்ப இராசி அன்பர்களே!

இதுவரை உங்கள் இராசியில் இருந்து வந்த கேது பகவான், இப்போது அங்கிருந்து விலகி ஜூலை 27ஆம் திகதி 12ஆம் இடத்திற்கு வருகிறார். அதே நேரத்தில் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த இராகு பகவான், 6ஆம் இடத்தில் உலாவரப் போகிறார். எனவே சர்ப்ப தோசம் உங்களை விட்டு விலகுகிறது. இனி அற்புதப் பலன்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

பற்பல வழிகளிலும் செய்த முயற்சிகளில் தடைகள் ஏற்பட்டு விட்டதே, எப்பொழுது தான் விடிவுகாலம் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த உங்களுக்கு, முதல்படியாக இராகு-கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. இந்த பெயர்ச்சிக்குப் பிறகு ஒருமாதம் கழித்து செப்டெம்பர் 2 ஆம் திகதி வரும் குருப்பெயர்ச்சிக்குப் பின்னர் உங்களுக்கு முழுமையான நற்பலன் கிடைக்கப் போகிறது.

ஏனெனில் கன்னி இராசியில் சஞ்சரிக்கும் குருபகவான், துலாம் இராசிக்கு செல்லப் போகிறார். துலாம் இராசியில் அடியெடுத்து வைத்த குரு தனது பார்வை பலத்தை உங்கள் இராசியில் பதிக்கிறார். அதுமட்டுமல்லாமல் உங்கள் இராசிக்கு 3,5 ஆகிய இடங்களையும் பார்க்கிறார். எனவே அந்த மூன்று விதமான பார்வைகளின் மூலம் வாழ்வில் முன்னேற்றத்தை வரவழைத்துக் கொள்ளப் போகிறீர்கள். பற்றாக்குறை இனி அகலும். பண வரவு திருப்தி தரும். வெற்றிக்கு வழி காட்ட நண்பர்கள் முன்வருவர்.

விருச்சிகத்தில் உள்ள சனிபகவான் டிசெம்பர் 19ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கிறார். இதனால் மேலும் நன்மைகள் கிடைக்கும். இராசிநாதன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் நேரமிது. இராசிக்கு அதிபதியே இலாப ஸ்தானத்திற்கு வரும் பொழுது, திட்டமிடாமல் செய்த காரியங்கள் கூட வெற்றியாகும். இந்த மூன்று கிரகப் பெயர்ச்சிகளும் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடும் விதம் அமைய வேண்டுமானால், முறையாக பரிகாரங்களை மேற்கொள்ள வேண்டும்.

முதலில் இராகு-கேது பெயர்ச்சிக்கு, நாகசாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில், உங்களுக்கு அனுகூலம் தரும் ஸ்தலங்களில் செய்து வந்தால் முன்னேற்றத்தை வரவழைத்துக் கொள்ள இயலும். அடுத்து குருப் பெயர்ச்சி காலத்தில் குரு தட்சிணாமூர்த்தி வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது. குறிப்பாக திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபட்டால் வாய்ப்புகள் வாசல் தேடி வந்து சேரும். அதன்பிறகு சனிப் பெயர்ச்சி காலத்தில் திருநள்ளாறு, திருக்கொள்ளிக்காடு, குச்சானூர், பெரிச்சிக் கோவில் போன்ற ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டு வந்தால் வளர்ச்சியில் வந்த தளர்ச்சி அகலும்.

### ஆறாமிடத்து இராகு தரும் அற்புதப் பலன்கள்!

கடந்த 1 1/2 ஆண்டு காலமாக உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த இராகுபகவான், ஜூலை 27ஆம் திகதி முதல் 6ஆம் இடத்திற்கு வருகின்றார். 6ஆம் இடத்தில் இராகு சஞ்சரிக்கும்பொழுது, அற்புதமான பலன்களை வழங்கும். இராகு தனது பார்வை பலத்தால் 3,7,11 ஆகிய இடங்களைப் புனிதப்படுத்தி அதன் மூலம் உங்கள் எண்ணங்களை நிறைவேற்றப் போகிறார். பணத் தேவைகளைப் பூர்த்தி செய்வார். இனத்தார் பகை மாறும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

கருநாகம் ஆறில் வந்தால்
கடும்பகை நோயும் தீரும்!
வருமானம் திருப்தி யாகும்!
வசந்தமும் வாழ்வில் சேரும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, இந்த இராகு பெயர்ச்சி இனிய பலன்களை வழங்கும் என்றே சொல்லலாம். கேது உங்கள் இராசியை விட்டு நகர்வதே யோகம் தான். அதேபோல இராகுவும் சப்தம ஸ்தானத்தில் சூரியன் வீட்டில் இருந்து பின்னோக்கிச் செல்வதன் மூலமும் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். ஒற்றுமை பலப்படும். உயர்ந்த மனிதர்களின் சந்திப்பால் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வீர்கள். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

கேதுவின் பார்வை 2ஆம் இடத்தில் பதிவதால் ஆன்மீகப் பெரியோர்களும், அருளாளர்களும் வழங்கும் ஆலோசனை கைகொடுக்கும். குடும்பத்தில் கொடிகட்டிப் பறந்த பிரச்சினைகள் படிப்படியாக மாறும். வியாபாரத்தில் புதிய கூட்டாளிகளை இணைத்துக்கொண்டு தொழில் வளத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். குடும்பத்தில் கணவன்-மனைவி உறவில் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும்.

பாகப்பிரிவினைக்கு பேச்சுவார்த்தை நடத்தினால் சுமுகமாக முடிவிற்கு வரும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். பொருளாதாரப் பற்றாக்குறை அகல குடும்ப உறுப்பினர்களின் சம்பாத்தியம் கைகொடுக்கும். பொதுவாக உங்களுக்குரிய சுயஜாதகத்தில் இராகுவிற்குரிய சாரபலமறிந்து அதன் அடிப்படையில் பரிகாரங்களை மேற்கொண்டால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவற்றில் இருந்த தடைகள் அகலும்.

### பன்னிரெண்டாம் இடத்து கேது தரும் பலன்கள்!

பன்னிரெண்டாம் இடத்தில் கேது சஞ்சரிக்கப் போவதால், விரயங்கள் அதிகரிக்குமோ என்று கவலைப்பட வேண்டாம். குருவினுடைய பார்வை உங்கள் இராசியில் பதிவதால் சுபவிரயங்கள் அதிகரிக்கும். பயணங்கள் கூடும். பிரச்சினைகளில் இருந்து விடுபட குருபார்வை கைகொடுக்கும். வியாபாரம், வர்த்தகம் சம்பந்தமாக புது ஒப்பந்தம் வந்து சேரும்.

குடும்பத்தில் சுபகாரிய நிகழ்வுகள் நடைபெற வழிபிறக்கும். சாமர்த்தியமான செயற்பாடுகளால் சேமிப்பை உயர்த்திக் கொள்வீர்கள். விரய ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கும்பொழுது அரைகுறையாக நின்ற வீட்டுப் பணிகளை தொடரலாம். அத்தியாவசியப் பொருட்களை வாங்கலாம். தங்கம், வெள்ளியில் முதலீடு செய்யலாம்.

### பெண்களுக்கான சிறப்பு பலன்கள்!

இந்த இராகு-கேது பெயர்ச்சி உங்களுக்கு மிகுந்த நன்மைகளை வழங்கப் போகிறது. தீட்டும் திட்டங்கள் வெற்றி பெறும். திறமை பளிச்சிடும். கூட்டு முயற்சிகளில் இலாபம் கிடைக்கும். குடும்ப முன்னேற்றம் கூடும். குருப்பெயர்ச்சிக்கு பிறகு கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

தடைபட்ட திருமணங்கள் நடைபெறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும்.

பெற்றோரின் உடல் நலம் சீராகும். அரைகுறையாக நின்ற பணிகள் தொடரும். அடகுவைத்த நகைகளை மீட்பீர்கள். இராகு-கேதுக்களுக்கு முறையான சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை செய்து கொள்வதன் மூலம் முறையான பலன்களை வரவழைத்துக் கொள்ள இயலும். பௌர்ணமியன்று நிலவு வழிபாடு நிம்மதியை வழங்கும்.

### வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!

ஆறாமிடத்து இராகு அதிர்ஷ்டத்தை அள்ளி வழங்கவும், 12ஆம் இடத்து கேது பண விரயத்தை சீராக்கவும், இராகு-கேது பிரீதி செய்வதோடு சனிக்கிழமையன்று பெருமாள், லட்சுமி, ஆஞ்சநேயர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பிரதோஷ வழிபாடும் பெருமை சேர்க்கும்.

### பாதசாரப்படி இராகு தரும் பலன்கள்!

புதன் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் போது (27.7.2017 முதல் 3.4.2018 வரை)

பஞ்சம அஷ்டமாதிபதியாக விளங்கும் புதனின் சாரத்தில் இராகு சஞ்சரிப்பதால் தொழில் வளர்ச்சி கூடும். இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு உருவாகும். புத்திரப் பேறு இல்லாத தம்பதியர்களுக்கு மகப்பேறு கிடைப்பதற்கான அறிகுறி தென்படும். பூர்வீகச் சொத்து பிரச்சினைகள் அகலும். வருமானத்தால் குடும்ப முன்னேற்றம் காண்பீர்கள்.

சனி சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (4.4.2018 முதல் 11.12.2018 வரை)

இக்காலம் ஒரு இனிய காலமாகும். இராசிநாதன் சனியின் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, சந்தோசங்களை நாளும் சந்திக்க இயலும். ஆதாயம் தரும் தகவல் அதிகம் வந்துசேரும். வீட்டுப் பராமரிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவார்கள்.

குரு சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (12.12.2018 முதல் 12.02.2019 வரை)

எண்ணிய காரியங்கள் எளிதில் நடைபெறும். குடும்பத்தில் குதூகலம் கூடும். பொருளாதார நிலை உயரும். புதிய திருப்பங்கள் ஏற்படும். எதிர்பாராத தன இலாபம் ஏற்படும். தொழில் விருத்தி உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு தானாகவே வந்து சேரும்.

### பாதசாரப்படி கேது தரும் பலன்கள்!

செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (27.7.2017 முதல் 29.11.2017 வரை)

துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். மனக்குழப்பங்கள் அகல மாற்று இனத்தவர்கள் வழிகாட்டுவர். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். வீடுகட்டுவது அல்லது கட்டிய மனையை வாங்கிப் பழுது பார்ப்பது போன்ற நல்ல காரியங்கள் நடைபெறும். உறவினர்கள் வலிய வந்து சேருவார்கள்.

சந்திரன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (30.11.2017 முதல் 07.08.2018 வரை)

இந்த காலத்தில் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. விழிப்புணர்ச்சி இல்லை என்றால் விரயங்கள் ஏற்படும். பெற்றோரால் மன அமைதி குறையலாம். கடன்கள் தொல்லையளிக்கலாம். பௌர்ணமி வழிபாடும், மலைவலம் வருவதும் நன்மை தரும். எதிர்மறை சிந்தனைகளை தவிர்க்கவும், திங்கட்கிழமை தோறும் சிவன் வழிபாட்டையும், பிரதோஷ நாளில் நந்தி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (08.08.2018 முதல் 12.02.2019 வரை)

வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். தந்தை வழி உறவினர்களின் பிரச்சினை தலைதூக்கும். அக்கம், பக்கத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். என்ன மருத்துவம் பார்த்தாலும் ஆரோக்கியம் சீராகவில்லையே என்று கவலைப்படுவீர்கள். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு வீண் பழி ஏற்படும். பதவிகளில் திடீர் மாற்றங்கள் உருவாகலாம். பகைவர்களுக்கு பலம் கூடும் நேரமிது. அரசு வழிச் சலுகைகள் வருவதில் தாமதம் ஏற்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊர்காவற்றுறை சின்னமடு யாத்திரைத் தல திருவிழா கடந்த சனிக்கிழமை யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி யோசவ்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

# சைட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்கு இரண்டு மருந்துவ நிறுவனங்கள் பின்னணி

## அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்துள்ளதாம்

மாலபேயில் அமைந்துள்ள தனியார் மருத்துவக் கல்லூரிக்கு (சைட்டம்) எதிரான செயற்பாடுகளுக்கு, இரண்டு மருந்து நிறுவனங்கள் [illegible]தி வசதிகளை வழுங்கி வருவதாக, அரசாங்கத்துக்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது என, அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் செயற்பாடுகள் அனைத்தும், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்பிரகாரம், சைட்டத்திற்கு எதிரான பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தின் போது, மாணவர்களின் போக்குவரத்துக்கென்று, பாரிய நிதியை, இந்த இரண்டு நிறுவனங்களும் செலவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும், இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்காக, சில தொழிற்சங்கங்களுக்கும், குறிப்பிட்ட இரண்டுநிறுவனங்களும்பணம் வழங்கியுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக, தான் அறிந்து வைத்துள்ளதாக, அமைச்சர் ராஜித சேனாரட்ன கூறியதோடு, தன்னுடைய பதவியில் இருந்து, தன்னை விலக்கி வைப்பதற்காகவே, இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதர்கவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# கைது அச்சத்தில் ஷிராந்தி ராஜபக்ஷ

## மந்திர மாயத்தில் கவனம்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ, தான் கைது செய்யப்படலாம் என்ற அச்ச உணர்வில் உள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாக அதிலிருந்து தப்பும் வகையில், மந்திர மாயம் செய்யும் நடவடிக்கையில் அவர் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வசீம் தாஜுதீன் கொலை தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்காக, குற்ற விசாரணை திணைக்களத்திற்கு வருகை தருமாறு ஷிராந்தி ராஜபக்ஷ அழைக்கப்பட்டார்.

கடந்த ஜுலை மாதம் 27 ஆம் திகதி வருகை தருமாறு அழைக்கப்பட்ட போதிலும் வர முடியாதென சட்டத்தரணிகள் ஊடாக அறிவித்திருந்தார்.

ஜுலை மாதம் 28ஆம் திகதி யோஷித ராஜபக்ஷவை குற்ற விசாரணை திணைக்களத்தில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் காலில் சத்திரசிகிச்சை மேற்கொண்டுள்ள காரணத்தினால் ஓய்வு பெற வேண்டும் என வைத்தியர்கள் பரிந்துரை செய்துள்ளதாக குறிப்பிட்டு வேறு திகதி ஒன்றை கோரியுள்ளார்.

எனினும் கடந்த 28ஆம் திகதி யோஷித வைத்தியரின் பரிந்துரையை மீறி, அம்பாறைக்கு சுற்றுலா பயணம் சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன் காரணமாக ஷிராந்தி மற்றும் யோஷித கைது செய்யப்படும் அச்சத்திலேயே உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஷிராந்தி மற்றும் யோஷித ஆகிய இருவருக்கும் எதிர்வரும் 14ஆம் திகதி குற்ற விசாரணை திணைக்களத்தில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்த நாட்களில் ஷிராந்தி ராஜபக்ஷ களனி விகாரையில் தஞ்சமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இந்தியாவில் இருந்து மந்திரவாதி ஒருவரை அழைத்து வந்து தாஜுதீன் கொலை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் அதிகாரிகளின் குடும்பத்தினருக்கு எதிராக சூனியம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக குறித்த ஊடகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# கடவுளே தண்டிக்க ஆரம்பித்துவிட்டார்

## மகிந்த சுட்டிக்காட்டு

ராஜபக்ஷ குடும்பத்திற்கு அவமதிப்பை ஏற்படுத்தியவர்களை கடவுள் தண்டிக்க ஆரம்பித்து விட்டார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு நேற்று முன்தினம் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நம்மை பலர் அவமதித்தனர். நாம் அந்த அவமதிப்பு குறித்து யாரிடமும் கூறுவதற்கு முற்படவில்லை. கடவுளிடமே கூறினோம். தற்போது கடவுள் தண்டிக்க ஆரம்பித்துள்ளார்.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் சம்பவத்தை அடிப்படையாக கொண்டு ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பலர் விலகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நான் இப்போது கூறும் விடயங்களை நாட்டு மக்களினால் இலகுவாக புரிந்து கொள்ள முடியும் என மகிந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்தவின் குடியுரிமையை பறிக்க சூழ்ச்சித் திட்டம்

## சாலிந்த திஸாநாயக்க தகவல்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடியுரிமையை பறிப்பதற்கு சூழ்ச்சித் திட்டம் தீட்டப்படுவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாலிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மகிந்தவை கொலைசெய்ய, சிறையில் அடைக்க அல்லது குடியுரிமையை பறிக்க சூழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தான், துருக்கி, சிரியா போன்ற நாடுகளுக்கு செய்ததை அமெரிக்கா இலங்கையிலும் செய்கின்றது.

இதன் ஓர் கட்டமாகவே மகிந்த ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். அமெரிக்கா திருகோணமலையை கைப்பற்றிக் கொள்ளவே முயற்சிக்கின்றது.

இந்த அரசாங்கம் சிறுபான்மை மக்களுக்கு நல்ல சலுகை வழங்குகின்றது. சமஷ்டி ஆட்சி முன்னெடுக்கப்பட்டால் நாட்டில் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடக் கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# நுவரெலியாவில் அடைமழை! இருவேறு பகுதிகளில் மண்சரிவு



நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழையினால் இருவேறு பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதுடன், இரண்டு வீடுகள் சேதமாகியுள்ளன.

ஹற்றனில் குடாகம மற்றும் சமனலகம பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை வேளையில் இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

குடாகம பகுதியிலுள்ள வீடு ஒன்றிற்கு அருகிலுள்ள மண்மேடு சரிந்து விழுந்ததில் சமையலறை பகுதி முற்றாக சேதமாகியதுடன் சமையல் உபகரணங்களும் சேதமாகியுள்ளன.

குறித்த வீட்டில் யாரும் இல்லாத காரணத்தினால் உயிர் ஆபத்துக்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சமனலகம பகுதியிலுள்ள வீட்டின் அருகிலிருந்த மண்மேடு சரிந்து விழுந்ததில் வீட்டின் ஒரு பகுதி முற்றாக சேதமடைந்துள்ளதாக [illegible] தெரிவித்துள்ளனர். (இ-7)

# அரசாங்கம் நல்லாட்சி பற்றி பேசுவது நகைப்பிற்குரியது

## இசுர தொடங்கொட விசனம்

மக்களின் வாக்குரிமையை பறித்துக் கொண்ட இந்த அரசாங்கம் நல்லாட்சி பற்றி பேசுவது நகைப்பிற்குரியது என தென் மாகாண சபை உறுப்பினர் இசுர தொடங்கொட தெரிவித்துள்ளார்.

பெத்தேகம தேர்தல் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த அரசாங்கம் ஆட்சி அமைத்து இரண்டு ஆண்டுகளில் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன.

நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இந்த அரசாங்கத்தினால் முடியவில்லை. அனைத்து சக்திகளையும் அடக்குமுறைக்கு உட்படுத்தவே இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இந்த அரசாங்கத்திற்கு வேறு எதனையும் செய்யத் தெரியவில்லை. பல்வேறு எதிர்பார்ப்புக்களுடன் அன்று வாக்களித்த மக்கள் இந்த அரசாங்கம் தொடர்பில் எதிர்பார்ப்பு இழந்திருக்கின்றார்கள்.

ஜனநாயக ரீதியில் மக்களின் உரிமைகளை இந்த அரசாங்கம் பறித்து வருகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நொண்டிக் குதிரை

பரமார்த்த குருவுக்கு ஒரு பணக்காரன் இலவச்மாக ஒரு குதிரையைக் கொடுத்தான்.

அந்தக் குதிரையோ கிழடு தட்டிப்போயிருந்தது. ஒருகண்நொள்ளை! ஒரு காது மூளி! முன் கால்களில் ஒன்று நொண்டி! பின் கால்கள் வீங்கிப் போயிருந்தன.

உடம்பு பூராவும் சொறிபிடித்து, பார்ப்பதற்கு அசிங்கமாக இருந்தது. இருந்தாலும் பரமார்த்தருக்கும் சீடர்களுக்கும் பரம சந்தோசம். "பணம் செலவு செய்யாமல் இலவசமாகக் கிடைத்ததே!" என்று நினைத்தனர். "குருவே! கடிவாளம் கட்டுவதற்கு வார் இல்லை. அதனால் வைக்கோல் பிரியைச் சுற்றி விடலாம்!" என்று அப்படியே செய்தான் மட்டி.

குரு உட்காருவதற்காக, கிழிந்து போன பழைய கந்தல் கோணி ஒன்றைக் குதிரைமேல் போட்டான் மண்டு. எருக்கம் பூவைப் பறித்து மாலையாக்கி குதிரையின் கழுத்தில் அணிவித்தான் முட்டாள்.

இவர்கள் செய்வதைப் பார்ப்பதற்கு ஊரே கூடி விட்டது. குதிரைக்கு எல்லா அலங்காரமும் முடிந்தது. தொந்தியும் தொப்பையுமாய் இருக்கும் பரமார்த்தர் குதிரையின் மேல் பெருமையோடு ஏறி உட்கார்ந்தார். அவ்வளவுதான்!

கனம் தாங்காமல் வலியால் குதிரை அலற ஆரம்பித்தது. கொஞ்சம் கொஞ்சமாய் அப்படியே படுத்து விட்டது.

"சே.சே! இதென்ன சண்டித்தனம் பண்ணுகிறது?" என்று சலித்துக் கொண்டே கீழே இறங்கினார் குரு. முட்டாளுக்கு ஒரு யோசனை தோன்றியது. கையில் வைத்திருந்த கொள்ளிக் கட்டையைக் கொண்டு போய் குதிரையின் காலில் வைத்தான். உடனே அது விலுக்கென்று உதைத்துக் கொண்டு எழுந்தது. இப்படியும் அப்படியுமாக கொஞ்ச தூரம் ஓடி நின்றது.

மறுபடியும் குரு அதன் மேல் உட்கார்ந்தார். இப்போது மட்டி, அதன் வாலைப் பிடித்து முறுக்கினான். கோபம் கொண்ட குதிரை எட்டி ஓர் உதை விட்டது.

அது உதைத்த உதையில் கீழே விழுந்து புரண்ட மட்டிக்கு நாலு பற்கள் உடைந்து விட்டன! வாயெல்லாம் இரத்தம். இதை எல்லாம் பார்த்த குருவுக்கு உதறல் எடுத்தது.

"சீடர்களே! எனக்குப் பயமாக இருக்கிறது. நான் கீழே இறங்கி விடுகிறேன்!" என்றார். "குருவே! நீங்கள் கவலையே பட வேணடாம். அப்படியே உட்கார்ந்திருங்கள். நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்!" என்று பதில் சொனனான் முட்டாள்.

மண்டுவுக்கும் மடையனுக்கும் வேறு ஒரு யோசனை உதித்தது.

குதிரைக்கு முன்னால் நின்று கொண்டு, முகத்தைக் கோணலாக்கி கண்களை உருட்டி, உதட்டைப் பிதுக்கி, "ஆ... ஊ... ஊ..." என்று ஊளையிட்டுப் பயம் காட்டினார்கள்.

இதனால் குதிரை ஒரேயடியாக மிரண்டு மெல்ல மெல்லப் பின் பக்கமாக நடக்க ஆரம்பித்தது! குருவுக்கும் சீடர்களுக்கும் அதிசயமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. சுற்றியிருந்தவர்கள் கைதட்டிச் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

தொடர்ந்து பின்பக்கமாகவே குதிரை ஓடவும் தொடங்கியது. "நொண்டிக் குதிரை! நொள்ளைக் குதிரை! குருவுக்கேற்ற குதிரை! கழுதைபோல எட்டி உதைக்கும்! நாயைப் போல் ஆளைக் கடிக்கும்! ஓரம் போங்கோ! வழியை விடுங்கோ!" என்று பாடியபடி சீடர்கள் போய்க் கொண்டிருந்தனர்.

பின்பக்கமாகவே ஓடுவது குதிரைக்குப் பழகி விட்டது. அப்போது அடுத்த ஊரின் எல்லை வந்தது. அங்கிருந்த மணியக்காரன் இவர்களை நிறுத்தினான். "வெளியூர்க் குதிரைக்கு வரி கட்ட வேண்டும். பத்துப் பணம் எடுங்கள்" என்றான்.

"வரியா? நான் ஏறி வருகிற குதிரைக்கு வரி வாங்கலாமா? அதுவும் இது இனாமாகவே வந்த குதிரை. இதற்கு வரி கட்ட மாட்டோம்!" என்று கூறினார் குரு.

"எதுவானாலும் சரி. வரி கொடுக்காவிட்டால் விடமாட்டேன்" என்று சொல்லி அவர்களை மடக்கினான் மணியக்காரன்.

"நாம் கொடாக்கண்டன் என்றால் இவன் விடாக்கண்டனாய் இருக்கிறானே!" என்று நினைத்து ஐந்து பணம் கொடுத்தனர்.

"இன்னும் ஐந்து பணம் கொடுங்கள்". "ஒரு குதிரைக்கு ஐந்து பணம்தானே வரி?" "ஒரு பக்கம் மட்டும் போகும் குதிரைக்குத்தான் ஐந்து பணம். உங்கள் குதிரை பின்னாலும் போகிறதே!"

"இதென்ன அநியாயம்?" என்று வருத்தப்பட்டு மேலும் ஐந்து பணம் தந்தனர். "இந்தக் குதிரையால் நமக்கு எவ்வளவு பணம் நட்டமாகிறது?" என்று சொன்னபடி பயணத்தைத் தொடர்ந்தனர்.

ஒரு வழியாக ஊருக்குள் நுழைந்து, ஒரு மடத்துக்குப் போனார்கள். அப்போது இரவு நேரம். எல்லோருக்கும் களைப்பாக இருந்ததால், குதிரையைக் கட்டிப்போட மறந்து தூங்கி விட்டனர்.

காலையில் எழுந்து ஆளுக்கொரு பக்கமாகத் தேடிக் கொண்டு போனார்கள். கடைசியில் ஒரு வயலுக்குப் பக்கத்தில் அந்தக் குதிரை கட்டப்பட்டிருந்தது!

"இது இரவு முழுவதும் என் வயலில் இறங்கி பயிர்களை எல்லாம் நாசம் செய்து விட்டது. அதற்குப் பதிலாகப் பத்துப் பணம் கொடுத்தால்தான் குதிரையை விடுவேன்" என்று சொன்னான், அதைக் கட்டி வைத்திருந்த உழவன்.

அவனிடம் பேரம் பேசி நான்கு பணம் கொடுத்து விட்டுக் குதிரையை ஓட்டி வந்தனர்.

"சீ..சீ!" இந்தக் குதிரையால் நமக்குப் பெரும் தொல்லை. என் மானமே போகிறது.! பேசாமல் இதை விட்டு விடலாம்! என்று வருத்தப்பட்டார் குரு. அப்போது அங்கிருந்த ஒருவன், குதிரைக்குப் பீடை பிடித்துள்ளது. அதனால்தான் இப்படி ஆகிறது. அந்தப் பீடையைக் கழித்து விட்டால் எல்லாம் சரியாகி விடும். செலவோடு செலவாக எனக்கும் ஐந்து பணம் கொடுங்கள் என்று யோசனை சொன்னான். குருவும், சீடர்களும் மூக்கால் அழுது கொண்டே அவனிடம் பணம் கொடுத்தனர்.

பிறகு, குதிரையின் ஒரு காதைப் பிடித்துக் கொண்டு "ஆ! பீடையெல்லாம் இந்தக் காதிலேதான் இருக்கிறது. இதனால்தான் ஏற்கனவே ஒரு காதை அறுத்திருக்கிறார்கள். இப்போது இந்தக் காதையும் அறுத்து விட்டால் சரியாகி விடும்!" என்றான் ஏமாற்றுக்காரன்.

உடனே மட்டி, மண்ணில் விழுந்து புரண்டு, "சீக்கிரம் காதை அறுங்கள்!" என்று குதித்தான். மூடனோ ஓர் அரிவாளைத் தீட்டிக் கொண்டு வந்து கொடுத்தான்.

எல்லோரும் பிடித்துக் கொள்ள, ஏமாற்றுக்காரன், குதிரையின் காதை அறுத்து எடுத்தான்! குதிரையோ வலி தாங்காமல் கீழே விழுந்து கதறியது. பிறகு உயிரை விட்டது! எல்லோரும் அறுத்த காதைக் கொண்டு போய் ஆழக் குழி தோண்டிப் புதைத்தனர்.

"ஒழிந்தது பீடை! இனி மேல் கவலையில்லை!" என்றான் ஏமாற்றுக்காரன். பரமார்த்த குருவும் சீடர்களும் மகிழ்ச்சியோடு அடுத்த ஊருக்குப் புறப்பட்டார்கள்.




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1509 - கிருஷ்ணதேவராயன் விஜயநகரப் பேரரசின் மன்னனாக முடிசூடினான். இவனது ஆட்சிக் காலமே பேரரசின் மிக உயர்ந்த நிலை ஆகக் கருதப்படுகிறது.
- 1848 - மாத்தளை கிளர்ச்சி: இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக கிளர்ச்சி செய்த வீரபுரன் அப்பு தூக்கிலிடப்பட்டான்.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: டென்னசியின் இராணுவ ஆளுநர் அண்ட்ரூ ஜோன்சன் தனது தனிப்பட்ட அடிமைகளை விடுவித்தான். இந்நாள் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் டென்னசியின் ஆபிரிக்க அமெரிக்கர்களினால் விடுமுறையாகக் கொண்டாடப்பட்டது.
- 1942 - இந்திய காங்கிரஸ் மும்பையில் கூட்டிய மாநாட்டில் வெள்ளையனே வெளியேறு என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 1945 - ஐ.நா. சாசனம் ஐக்கிய அமெரிக்காவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஐ.நாவில் இணைந்த மூன்றாவது நாடு இதுவாகும்.
- 1992 - யாழ்ப்பாணம், அராலியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இலங்கை இராணுவ வட பிராந்தியத் தளபதி கொப்பேக்கடுவ கொல்லப்பட்டார்.
- 2006 - திருகோணமலைக்கு வடக்கே வெல்வெறிப் பகுதியில் கிளைமோர் தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.
- 2007 - நாசா விண்வெளி ஆய்வு மையம் என்டெவர் விண்ணோடத்தை கிறிஸ்டினா மெக்காலீப் என்ற ஆசிரியர் உட்பட ஏழு விண்வெளி வீரர்களுடன் அனைத்துலக விண்வெளி நிலையத்திற்கு கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து வெற்றிகரமாகச் செலுத்தியது.

பிறப்புகள்

- 1705 - கூசுத்தாவ் விலெம் வொன் இமோவ், இலங்கையின் ஒல்லாந்த ஆளுநர் (இ. 1750)
- 1921 - உலிமிரி இராமலிங்கவாமி, இந்திய (நோயியல்/ நோயியலாளர் (இ. 2001)
- 1924-அ. ந. கந்தசாமி, ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் (இ. 1968)
- 1927 - எஸ். வரலட்சுமி, நடிகை, பாடகி (இ. 2009)
- 1927 - வி.எஸ்.துரைராஜா, இலங்கைக் கட்டடக் கலைஞர், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் (இ. 2011)
- 1941-டிரோன் பர்னாண்டோ, இலங்கை அரசியல் வாதி (இ. 2008)
- 1941 - கோயம்புத்தூர் கிருஷ்ணாராவ் பிரகலாத், இந்திய வணிகத்துறைப் பேராசிரியர் (இ. 2010)
- 1952 - சோ.தர்மன், தமிழக எழுத்தாளர்

இறப்புகள்

- 1848 - வீர புரன் அப்பு, இலங்கையின் விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1812)
- 1946 - உமையாள்புரம் சுவாமிநாத ஐயர், கர்நாடக இசைக் கலைஞர் (பி. 1867)
- 2000 - எஸ்.நிஜலிங்கப்பா, கர்நாடக அரசியல்வாதி (பி. 1902)
- 2000 - கா.கைலாசநாதக் குருக்கள், ஈழத்து இந்துப் பேராசிரியர் (பி. 1921)

சிறப்பு நாள்

- போர்நிறுத்த நாள் (ஈராக்கிய குர்திஸ்தான்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | மருதனார் மடம் | கிளிநொச்சி | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 100 | 80 | 120 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 250 | 350 | 300 | 400 | 350 |
| தக்காளி | 150 | 200 | 120 | 160 | 160 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 60 | 80 | 70 | 80 | 100 |
| கோவா | 120 | 160 | 70 | 150 | 120 | 120 | 160 |
| கரட் | 100 | 200 | 200 | 240 | 200 | 240 | 200 |
| பூசணி | 70 | 100 | 50 | 60 | 100 | 80 | 100 |
| புடோல் | 80 | 100 | 50 | 80 | 100 | 100 | 100 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 100 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 150 | 150 | 160 | 140 | 140 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 90 | 120 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 250 | 200 | 170 | 200 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 70 | 100 | 80 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 50 | 130 | 120 | 140 | 120 |
| பயற்றங்காய் | 100 | 120 | 120 | 160 | 120 | 120 | 140 |
| லீக்ஸ் | 90 | 100 | 70 | 120 | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 40 | 60 | 35 | 60 | 80 | 60 | 50 |
| கறிமிளகாய் | 150 | 200 | 150 | 200 | 200 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 50 | 50 | 120 | 100 | 60 | 100 |
| போஞ்சி | 160 | 200 | 100 | 80 | 120 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 50 | 80 | 100 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 60 | 30 | 50 | 80 | 25 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 70 | 75 | 60 | 50 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | — | 300 | — | 300 | 400 |
| வெங்காயப்பூ | 220 | 200 | 150 | 240 | 150 | 160 | 150 |
| முள்ளங்கி | 50 | 100 | 30 | 80 | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 25 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 100 | 80 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்திவிடும்.
- மெர்ரி கிளாட்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்

தமிழரசுக் கட்சி தொடர்பில் நாம் இங்கு குறிப்பிடும் விடயங்கள் தமிழரசுக் கட்சிக்கு எதிரானதல்ல.

நாம் கூறுகின்ற உண்மைக் கருத்துக்கள் சிலவேளைகளில் தமிழரசுக் கட்சியின் தீவிர விசுவாசிகளை மனவருத்தத்துக்கு உட்படுத்தலாம்.

உண்மையில் தமிழரசுக் கட்சியின் விசுவாசிகள் என்போர் அப்பளுக்கற்றவர்கள். அவர்கள் காலாகாலமாக தமிழரசுக் கட்சியை ஆதரிக்கின்றனர். தமிழரசுக் கட்சியை நம்புகின்றனர்.

அதனாலேயே தமிழரசுக் கட்சியை குறை காண அவர்கள் விரும்புவதில்லை. ஆனால் உண்மையைக் கண்டறிவது அவசியமானது.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்பார் வள்ளுவர்.

எனது தந்தை, எனது பெரிய தந்தை, என் பாட்டன் தமிழரசுக் கட்சியை ஆதரித்ததால் நானும் அந்தக் கட்சியை ஆதரிக்கிறேன் என்பது பாராட்டப்பட வேண்டியது.

ஆனால் அன்றைய தமிழரசுக் கட்சியும் இன்றைய தமிழரசுக் கட்சியும் ஒன்றல்ல.

தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம் போன்றோர் தமிழ் மக்களின் உரிமை; நலன் இவற்றை மையமாக வைத்தே தங்களின் அரசியல் பணியை முன்னெடுத்தனர்.

ஆனால் இன்று அது தலைகீழாயிற்று. அநீதியாக எதனையும் கேட்காது பெறவேண்டியதைப் பெறுவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கூறியுள்ளார்.

அவர் கூறியதன் பொருள் என்ன? தமிழ் மக்கள் அநீதியாகக் கேட்கிறார்கள் என்பதைத்தான் அவரின் கருத்துக்கள் குறிப்பிடுகிறது.

தமிழர்களின் உரிமையெல்லாம் பறிக்கப்பட்டு தமிழன் என்பதற்காக யுத்தத்தில் கொல்லப்பட்டு இன்று ஒவ்வொரு தமிழ்க் குடும்பங்களும் யுத்தத்தால் ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்டுள்ளன என்றிருக்கும் நிலையில்,

அநீதியாகக் கேட்காமல் பெறவேண்டியதைப் பெறுவோம் என்று சம்பந்தர் கூறுகிறார் எனில் இவர்களை இனியும் நம்பலாமா என்பதை தமிழ் மக்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

தவிர, தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கிறார் என்ற ஒரே காரணத்துக்காக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை அவரின் பதவியில் இருந்து நீக்குவதற்கு மீண்டும் தமிழரசுக் கட்சி சதி செய்யத் தலைப்பட்டுள்ளது.

அமைச்சர் ஒருவர் மீது ஊழல் குற்றச்சாட்டு உள்ளது, ஊழல் செய்ததற்கான ஆதாரம் என்னிடம் உண்டு என முதலமைச்சர் கூறும் போது விசாரணை நடத்துங்கள் என்று கூறுவதுதான் அழகு.

இதைவிடுத்து தமிழரசுக் கட்சிக்கு எதிராக முதலமைச்சர் செயற்படுகிறார் என வீம்புக்கு குற்றம் சாட்டுவது அபத்தமானது.

அவர் நினைத்திருந்தால் புதிய அரசியல் கட்சி மக்களின் பேராதரவுடன் உருவாகியிருக்கும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை.

ஆக, அன்பார்ந்த தமிழ் மக்களே! தமிழரசுக் கட்சியின் பாதை மாறிவிட்டது என்பது நிரூபணமாகிறது.

பாதை மாறிய தமிழரசுக் கட்சியை சரியான பாதைக்குக் கொண்டு வாருங்கள். தமிழ் மக்களின் பழமை வாய்ந்த அந்தக் கட்சியை காப்பாற்றுங்கள். இதுவே நம் தாழ்மையான கோரிக்கை.

## மருத்துவ பரிசோதனைக்கு அதிக கட்டணம்

# தனியார் ஆய்வு கூடங்கள் குறித்து விசாரணை நடத்த ராஜித உத்தரவு

மருத்துவப் பரிசோதனைகளுக்காக, சுகாதார அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தை விட அதிகமான கட்டணங்களை அறவிடும் தனியார் வைத்தியசாலைகள், ஆய்வுகூடங்கள் மற்றும் தாதியர்கள் இல்லம் போன்றவற்றில் விசாரணை களை முன்னெடுக்குமாறு, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, தனியார் சுகாதார சேவைகள் அபிவிருத்திகளுக்கான பணிப்பாளர் காந்தி ஆரியரட்ணவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜூன் மாதம் 19ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்த சாதாரண இரத்தப் பரிசோதனையொன்றுக்கு, 250 ரூபாயும் டெங்கு நோய்த் தாக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் நோயாளிக்கு மேற்கொள்ளப்படும் இரத்தப் பரிசோதனைக்கு, ஆயிரம் ரூபாயும் அறவிடப்படவேண்டும்என்று, சுகாதார அமைச்சு அண்மையில் உத்தரவிட்டது.

நாடளாவிய ரீதியில், டெங்கு நோய்த்தாக்கம் அதிகரித்தமையினாலேயே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

"பல்வேறு தனியார் வைத்தியசாலைகளிலும் ஆய்வு கூடங்களிலும் இரத்தப் பரிசோதனைகளுக்கு அதிகளவான கட்டணங்கள் அறவிடப்படுவதாக, எமக்குத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. சில நேரங்களில், அமைச்சின் உத்தரவுகளை மீறும் வகையில், இந்தத் தொகை, 3 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமான அளவுக்கு அறவிடப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது" என்று, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுள்ள டெங்கு ஒழிப்புத் திட்டம் மற்றும் டெங்குவை கட்டுப்படுத்துதல்போன்றவற்றுக்கு உதவுவதற்காக உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகள், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர். இவர்கள், டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டு, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கு, அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளனர்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில், கடந்த 7 மாத காலப்பகுதியில் மாத்திரம், அரசாங்க தொற்றுநோய் பிரிவில் ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 819 டெங்கு நோயாளர்கள் தொடர்பான விபரங்கள் பதிவாகியுள்ளன.

சுமார் 44.34 சதவீதமான டெங்கு நோயார்கள், மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர். 2017 ஆம் ஆண்டில், ஆரம்ப 27 வாரத்திலேயே இந்தளவு உயர்ந்தளவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை பதிவாகியுள்ளது. (இ-7)

# மகிந்த அரசால் ஏற்பட்ட நட்டத்தை கணக்குப்போட்டு காட்டிய பிரதமர்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தால் 46 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாகவும் அந்தப் பணம் கையிருப்பில்இருந்தால் அனைவருக்கும் வீடுகளை நிர்மாணித்து கொடுத்திருக்கலாம் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று முனதினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில்உரையாற்றும்போதே பிரதமர் இதனை கூறியுள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அம்பாந்தோட்டை துறைமுகத்தினால் ஏற்பட்ட 46 பில்லியன் ரூபா நட்டம் குறித்து விசாரிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்படும். அந்த பணம் எப்படி நாட்டுக்கு இல்லாமல்போனது என்பதை நாங்கள் தேடி கண்டுபிடிப்போம்.

அதேபோல் ஸ்ரீலங்கன் விமான சேவையில் ஏற்பட்ட நட்டம் குறித்து அமைச்சர் கபீர் ஹசீமுடன் கலந்துரையாடினேன்.

விமான நிறுவனம் பாரியளவில் நட்டத்தில் இயங்கி வருகிறது. ராஜபக்ஷ அரசாங்கம் ஆடம்பர விமானங்களை கொள்வனவு செய்ததன்மூலம் 135 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது.

46 மற்றும் 135 பில்லியன் ரூபா ஆகியவற்றை கூட்டினால் மொத்தம் 181 பில்லியன் நட்டம் ஏற்பட் டுள்ளது.

தற்போது ஊழல், மோசடிகள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஊழல் செய்தவர்கள் தப்பிக்க முடியாது.

கடந்த அரசாங்கத்தின் ஊழல்களை தேடி வருகிறோம். சிலவற்றுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளன. சில விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் உள்ளன.

மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர விவகாரம் ஏற்பட்டது. நான் குழு ஒன்றை நியமித்தேன். பின்னர் கோப் குழு விசாரணை நடத்தி யது. நாங்கள் தேர்தலில் வென்றாலும் கோப் குழுவின் தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட்டது.

இதன் பின்னர் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக் கப்பட்டது. அதனை எவரும் எதிர்க்கவில்லை. தற்போது சுதந்திரம் எப்படி இருக்கின்றது என்றால், அமைச்சர்களும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டு, சட்டமா அதிபர், அவர்களிடம்விசாரணை நடத்தும் அளவுக்கு தற்போது சுதந்திரம் உள்ளது.

கடந்த காலத்தில் இப்படி நடந்திருந்தால், சட்டமா அதிபர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டிருப்பார் என பிரதமர் ரணில் விக்கிர மசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# சுகாதாரத்துறையை தனியார்மயப்படுத்த எத்தணிக்கவில்லை

## ராஜித சேனாரட்ன தெரிவிப்பு

சுகாதாரத்துறையை தனியார்மயப்படுத்த நாம் எத்தணிக்கவில்லை. திறந்த பொருளாதாரக் கொள்கைகளுக்கேற்ப ஏனைய உலக நாடுகளுடன் போட்டியிடவே தயார்படுத்துகின்றோம் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் எதிர்க்க வேண்டும் என நினைப்பவர்களுக்கு நாம் செய்யும் நன்மைகளும் தீமைகளாகவே தெரிகின்றன. சுகாதாரத்துறையை அபி விருத்தி செய்யவேண்டிய அவசியம் எமக்குள்ளது எனவும் ராஜித தெரிவித்தார். (இ-7)

# சுதந்திரக்கட்சியின் அதிகாரத்தை விரைவில் பெற்றுக்கொள்வோம்

## முன்னாள் முதல்வர் ஷசிந்திர சூளுரை

(கொழும்பு)

விரைவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தை பெற்றுக்கொள்ளவுள்ளதாக ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சர் ஷசிந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிபில பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு சூளுரைத்தார்.

கைவிட்டுப் போன அதிகாரங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்காக பரவலான அதிகார பலத்தை கட்டியெழுப்பி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

கண்களில் இரசாயனப் பொருட்கள், சுண்ணாம்பு போன்ற பொருட்கள் வீழ்ந்துவிட்டால் சுத்தமான ஓடும் நீரினால் 15-20 நிமிடங்கள் வரை கழுவுங்கள்.

கண்களைக் கசக்கக்கூடாது.

விரைவாக கண் வைத்தியரின் ஆலோசனை பெறவும்.

விசேட நாட்களில் பட்டாசு கொளுத்தி வீசும் போது கவனம் தேவை

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ சமூக அமைப்பும் அரசியலையும் பற்றிய கருத்துக்களை இந்தியாவில் பெருக விடுவதற்கு முன் முதலில் அறிவுக் கருத்துக்களை இந்நாட்டில் ஊழி வெள்ளமெனப் பெருக்குங்கள். நமது கவனத்திற்குரி முதல் வேலையாவது நமது மதங்களிலும் சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் சிறைப்பட்டுக் கிடக்கும். மிகமிக ஆச்சரியமான உண்மைகளைப் புத்தகங்களிலிருந்து வெளியேற்ற வேண்டும். மடங்களிலிருந்து வெளியில் கொண்டு வரவேண்டும். காடுகளிலிருந்து வெளிப்படுத்த வேண்டும். பொறுக்கி எடுக்கப்பட்ட கூட்டத்தினரது திக்கத்திலிருந்து அவை விடுவிக்கப்படவேண்டும்.விடுவித்தபின் நாடெங்கும் அவற்றைப் பரப்பவேண்டும். எதற்காக எனில் இந்த உண்மைகள் நாடு முழுவதும் வடக்கிலிருந்து தெற்கு வரையும் மேற்கேயிருந்து கிழக்கு வரையும் இமயமலை முதல் குமரிமுனை வரையிலும் சிந்து நதிமுதல் பிரம்மபுத்திரா நதிவரையிலும் தீயெனப் பாய்ந்து பரவுவதற்காகவே.

❖ இந்தியா இறக்குமா? பின் உலகத்தினின்றும் ஞானம் அனைத்தும் இல்லாது போய்விடும். ஒழுக்க நிறைவெல்லாம் ஒழியும். சமயத்தின் மீது கொள்ளும் இனிய அனுதாபமெல்லாம் ஒழியும். இலட்சிய உணர்ச்சியெல்லாம் ஒழியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை பிறிமியர் லீக்-2017 கிரிக்கெட் போட்டியில் வெற்றியை தமதாக்கி கொண்ட 'ARIYALAI RANGERS'






அரியாலை பிறிமியர் லீக் - 2017 கிரிக்கெட் போட்டி கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பாக நடைபெற்றது. இப் போட்டி 8 அணிகள், 8 உரிமையாளர்கள் மற்றும் 96 வீரர்களைக் கொண்டு நடைபெற்றது. இப் போட்டியின் வெற்றியை உரிமையாளர்- சு.விஜயகாந் "Ariyalai_Rangers" அணி மிகவும் சிறப்பான ஆட்டத்தினால் வெற்றி பெற்று சம்பியனானது. இரண்டாம் இடத்தினை FIREBALL அணி பெற்றுக்கொண்டது. தமிழின் 24 Ariyalai_ThunDer அணி "FAIR PLAY TEAM AWARD "ஐ தம் வசப்படுத்திக்கொண்டது. (க)

# திருக்குமரன்-லஜிதன் ஞாபகார்த்த யாழ்.மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டம்

## கிண்ணம் வென்றது புத்தூர் கலைமதி




திருகுமரன்-லஜிதன் ஞாபகார்த்தமாக யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய கரப்பந்தாட்ட சுற்று போட்டியின் இறுதிப்போட்டி கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை கோலாகலமாக நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் புத்தூர் கலைமதி வி.க. எதிர்த்து ஆவரங்கால் மத்தி வி.க. மோதியது.

புத்தூர் கலைமதி வி.க. நட்சத்திர வீரர் வாகீசனின் மிரட்டல் ஆட்டத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறிய ஆவரங்கால் மத்தி வி.க. 3:0 என்ற செற் கணக்கில் படுதோல்வியடைய புத்தூர் கலைமதி வி.க. திருக்குமரன்-லஜிதன் வெற்றிக் கிண்ணம் கைப்பற்றியது.

நாயன்மார்கட்டு பாரதி வி.க. வீழ்த்தி 3ஆம் இடத்தை பெற்றது புத்தூர் வளர்மதி வி.க.தொடரின் சிறந்த வீரர் -வாகீசன் சிறந்த வீரர் -வாகீசன். மக்கள் மனம் கவர்ந்த வீரர் -சிந்துஜன்.

(மக்கள் மனம் கவர்ந்த வீரருக்கான போட்டியில் வாகீசன் 201 வாக்குகளையும் சிந்துஜன் 234 வாக்குகளையும் பெற்று வெற்றி பெற்றனர்). (க)

## கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்

### பலாலி விண்மீன் சம்பியன்



அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்தமாக கற்கோவளம் உதயதாரகை வி.கழகம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுபோட்டியின் இறுதிப்போட்டி(06. 08. 2017) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுள்ளது.

முதலாவது நிமிடத்திலே விண்மீன் முன்கள வீரர் காண்டீபன் மூலையுதையினை தலையால் முட்டி கோலாக்க ஆட்டம் விறுவிறுப்பானது. ஆட்டத்தின் 8 ஆவது நிமிடத்தில் திக்கம் அணியினருக்கு கிடைக்கப்பெற்ற தண்ட உதையினை கோலாக்கஆட்டம்சமநிலையானது

பின்பு விண்மீன் வீரர் நிஷாந்தன் இரண்டாவது கோல் போட மூன்றாவது கோல் காண்டீபனால் போடப்பட 3:1 என்ற கோல்கணக்கில் முதல்பாதியாட்டம் முடிவிற்கு வந்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் நிஷாந்தனால் 4ஆவது கோல் போடப்பட 04:01 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்தது பலாலி விண்மீன்.

ஆட்ட நாயகனாக விண்மீன் வீரர் காண்டீபனும் தொடர் ஆட்ட நாயகனாக ஆயன்குட்டியும் தெரிவு செய்யப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர். இவ்வெற்றி விண்மீன் அணியினர் இறுதிப் போட்டிகளில் தொடர்ந்து மூன்றாவது கிண்ணத்தை சுவீகரித்து ஹெற்றிக் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# மகாலிங்கம் பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுத் தொடர்





வி.ரி. மகாலிங்கம் பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாண கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் ரி.சி.சி. அணி விங்ஸ் அணியை 4 இலக்குகளால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய விங்ஸ் அணி 20 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களை பெற்றது. ஜெரி -57 ,யூட்-12 மைக்கல் -14 ஓட்டங்களை பெற்றனர். சைலேஸ்-1, பிரபு-1 ,சுரேந்திரன்-3, அனுராஸ்-1 இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ரி.சி.சி, அணி 18.1 ஓவர்களில் 4 இலக்குளை இழந்து 110 ஓட்டங்களை பெற்றனர். அசோக்-12, தர்சிகன்-27, லவகார்-21, சைலேஸ் ஆட்டமிழக்காது 26, பிரபுவன் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களை பெற்றனர். வின்சன், ஜெபர்சன், மைக்கல் தலா-1 இலக்கினை கைப்பற்றினர். இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரசை (RATING) பட்டியலுக்கு ரி.சி.சி.அணி 4.10 புள்ளிகளையும் விங்ஸ். 1.49 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலமைச்சருக்கு...

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தமிழரசுக் கட்சிக்கு எதிராகச் செயற்படுகிறார் எனக் குற்றம் சாட்டி வடக்கு மாகாண சபையில் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் அமைச்சுப் பதவியை ஏற்பதில்லை என அந்தக் கட்சி தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் நேற்றையதினம் சுகாதார அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கம் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

இது தொடர்பில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், யாழ்ப்பாண பல்கலைக்கழக புத்திஜீவிகள் மற்றும் அரசியல் விமர்சகர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டது. அவர்கள் கூறிய கருத்துக்களின் தொகுப்பு இங்கு தரப்பட்டுள்ளது.

ஏலவே அமைச்சர்கள் மீது விசாரணை நடத்தலாம் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் எழுத்துமூலம் கொடுத்த வாக்குறுதியை அடுத்தே வடக்கு மாகாண சபையில ஏற்பட்டிருந்த குழப்பம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததையடுத்து தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்ததுடன் வடக்கு மாகாண சபையில் உள்ள தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் வெளியில் தலை காட்ட முடியாத அளவில் அவர்களுக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்நிலையில் மதத் தலைவர்கள் மூலமாக முதலமைச்சருடன் பேசி நிலைமையை க[illegible]ப்பாட்டிற்குள் கொண்டு வந்த தமிழரசுக் கட்சியின் தலைமை இப்போது மதத் தலைவர்களின் சமரச முயற்சிக்கு மாசு கற்பிக்கும் வகையிலும் முதலமைச்சருக்கு எழுத்து மூலம் வழங்கிய வாக்குறுதியை மீறும் வகையிலும் செயற்பட்டுள்ளது. இது தமிழ் மக்களின் மன உணர்வை மதிக்காத செயற்பாடாகும். ஊழல் குற்றச்சாட்டுக்கள் அதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாக முதலமைச்சர் கூறும் போது உரிய விசாரணை நடத்துமாறு கூறுவதே அரசியல் தலைமைக்கு அழகு.

ஆனால் விசாரணை நடத்தலாம் என்று கூறிவிட்டு, விசாரணை நடத்தினால் ஊழல் குற்றச்சாட்டு காரணமாக அமைச்சுப் பதவியை இழக்க வேண்டி வரும் என்ற ஒரே காரணத்தை வைத்துக் கொண்டு வடக்கு மாகாண சபையில் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் அமைச்சுப் பதவியை ஏற்பதில்லை [illegible]று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் இத்தகைய முடிவு மீண்டும் முதலமைச்சருக்கு தொந்தரவு கொடுப்பதற்கானது என்பது வெளிப்படையானது எனக் கருத்து வெளியிட்ட அரசியல் அவதானிகள்,

அமைச்சுப் பதவியில் இருந்து யார் விலகினாலும் அவர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறிந்து அதனை பொது மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் எனவும் பொது மக்களும் ஊடகங்களும் ஊழலுக்கு எதிராக குரல் கொடுப்பது அவசியம் எனவும் குறிப்பிட்ட அரசியல் விமர்சகர்கள் வடக்கின் முதலமைச்சருக்கு எதிராக யார் எந்தச் சதி செய்ய முற்பட்டாலும் அதனை முறியடிக்க தமிழ் மக்கள் எந்நேரமும் களத்தில் இறங்க தயாராக இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

முதலமைச்சருக்கு பக்க பலமாக தமிழ் மக்கள் நிற்பது எங்களுக்கான அரசியல் தீர்வை பலப்படுத்தும் என்றும் இதைச் செய்யத் தவறின் எல்லாம் அந்தோ என்றாகி விடும் எனவும் குறிப்பிட்ட புத்திஜீவிகள் தற்போது தமிழரசுக் கட்சி எடுத்த தீர்மானம் தொடர்பில் சமரச முயற்சியில் ஈடுபட்ட மதத் தலைவர்கள் தங்களின் கருத்துக்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை முதலமைச்சருக்கு எதிராக யார் எந்தச சதித் திட்டம் தீட்டினாலும் அதனை முறியடிப்பது தொடர்பில் தமிழ் இளைஞர் அணி, சிவில் சமூக அமைப்புகள் தயாராக இருப்பதாகவும் சம்பந்தப்பட்ட தரப்புகள் தெரிவித்துள்ளன. (செ)

## போதைப்பொருளுடன்...

பொருட்களுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். எனினும் அவரை விடுவிக்குமாறு அதிகாரப் பிரயோகம் மேற்கொள்ளப்ப

# தமிழரசுக் கட்சியின் முடிவுக்கு கட்டுப்பட்டு

# சுகாதார அமைச்சர் பதவியை இராஜினாமா செய்கின்றேன்

## பதவி விலகல் குறித்து சத்தியலிங்கம் விளக்கம்

தமிழரசுக் கட்சியின் வட மாகாண சபை உறுப்பினர்கள் எடுத்த தீர்மானத்துக்கு கட்டுப்பட்டும் தமிழ் மக்களுக்கு அமைச்சர் வாரியம் தொடர்பான பிரச்சினையை முக்கியத்துவம் வாய்ந்ததாக காண்பிப்பதை தவிர்ப்பதற்காகவும் தனது வட மாகாண சுகாதார அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வதாக நேற்று வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

30 வருட ஆயுதப்போராட்ட காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களோடு மக்களாக வாழ்ந்தவன் என்பதன் அடிப்படையிலும், மக்களின் துன்ப துயரங்களில் நேரடியாக பங்குகொண்டவன் என்பதன் அடிப்படையிலும் தங்களால் எனக்கு பொறுப்பளிக்கப்பட்ட அமைச்சர் பதவியினூடாக சக்திக்கு அப்பாற்பட்ட வகையில் போரால் சின்னாபின்னமாக்கப்பட்ட எமது தேசத்தையும், அதன்பால் துன்பங்களை அனுபவித்த மக்களின் தேவைகளை இனங்கண்டு இருக்கும் வளங்களை பயன்படுத்தி மனச்சாட்சிக்கு விரோதமில்லாது எனது கடமையை திறம்பட செய்து வருகின்றேன்.

நாட்டின் ஏனைய மாகாணங்களைப் போலல்லாது வேறுபட்ட தேவைகளை கொண்ட மாகாணமாக உள்ள எமது மாகாணத்தில் வாழுகின்ற மக்களுக்காக அவர்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றினை நிவர்த்தி செய்ய விசேடமான பல செயற்றிட்டங்களை வடிவமைத்துள்ளதுடன் அவற்றினை முதலமைச்சரினதும், மாகாண அமைச்சர் வாரியத்தினதும் பூரண ஆதரவுடன் ஏனைய மாகாணங்களுக்கு முன்னுதாரணமாக நடைமுறைப்படுத்துவதற்கு என்னாலான பணியை செய்து வருகின்றேன்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக அமைச்சர்களுக்கெதிராக முறைகேடுகளை விசாரிக்கும் வகையிலான விசாரணைக்குழுவொன்று அமைக்கப்பட்டு அதில் நானும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தேன்.

இந்த நிலையில் விசாரணைக்குழுவின் இறுதி தீர்ப்பில் நான் குற்றமற்றவன் என்றும் என்னால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நல்ல செயற்றிட்டங்களுக்கு மாகாண நிர்வாகம் பூரண ஒத்துழைப்பை நல்கவேண்டுமென்றும் விசாரணைக்குழு பரிந்துரைகளை செய்திருந்த நிலையில் மீண்டும் எனக்கு எதிராக மீள்விசாரணை நடத்தப்படல் வேண்டுமென்றும் அதற்காக கட்டாய விடுமுறையில் என்னை அனுப்புவதாகவும் முதலமைச்சர் தெரிவித்திருந்தார். அதனால் ஏற்பட்ட குழப்பங்கள் யாவரும் அறிந்ததே.

அதன் பின் முதலமைச்சர், தான் ஒரு விசாரணைக் குழுவை அமைத்துள்ளதாகவும், அந்த விசாரணைக் குழு முன் தோன்றி விசாரணைக்கு ஒத்துழைக்க மாட்டேன் என ஊடகங்கள் வாயிலாக தான் அறிந்ததாகவும், ஊடகங்கள் வாயிலாக தான் அறிந்த செய்தி உண்மையா? பொய்யா? என எழுத்து மூலம் அறிவிக்குமாறு இந்த மாதம் 2ஆம் திகதி எழுதப்பட்ட கடிதம் எனக்கு மின்னஞ்சல் மூலம் கிடைத்திருந்தது. அதற்கு நான் எனது பதிலை எழுதியிருந்தேன். அதில் நீங்களும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் ஒரு நடுநிலையான, சட்டபூர்வமான விசாரணைக் குழு ஒன்றினை அமைத்தால் அதன் முன் தோன்றி விசாரணையில் பங்கெடுப்பதற்கு மிகவும் ஆர்வமாக இருக்கின்றேன் என்ற செய்தியை தெரிவித்திருந்தேன்.

அதனைத் தொடர்ந்து கடந்த 5ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் அவர்களுடைய இல்லத்தில் அவரும், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்மந்தன், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி தலைவர்களும் ஒரு கூட்டத்தை நடத்தியிருந்தனர். அந்தக் கூட்டத்தில் முதலமைச்சர் என்னை அமைச்சர் வாரியத்தில் இருந்து நீக்க வேண்டும் என்று மிகவும் பிடிவாதமாக செயற்பட்டிருக்கிறார். முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு என்னை நிரபராதி எனக் கூறிய பின்னரும் அவர் ஒரு அரசியல் நோக்கத்திற்காக என்னை அமைச்சர் வாரியத்தில் இருந்து நீக்க எடுக்கின்ற தீராத முயற்சியை அந்தக் கூட்டத்தின் ஊடாகவும் என்னால் அறிய முடிந்தது.

அதன் தொடர்ச்சியாக 6ஆம் திகதி நாங்கள் தமிழரசுக் கட்சியினுடைய மாகாண சபை உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி இந்த நிலைமை தொடர்பாக ஆராய்ந்தோம். அந்தக் கூட்டத்தில் நாங்கள் சில முடிவுகளை எடுத்தோம். தற்போது தமிழ் மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு ள்ளனர். வட மாகாண சபையில் யார் அமைச்சர் என்பது தமிழ் மக்களுடைய பிரச்சினையல்ல. மிகவும் முக்கியமான பல பிரச்சினைகள் எம் கண்முன்னே இருக்கின்றன. எங்களுடைய நீண்டகாலப் போராட்டத்தில் நாங்கள் எங்களை ஆளக்கூடிய, தமிழ் மக்களுடைய உரிமைகளை அங்கீகரிக்கக் கூடிய ஒரு பூரணமான சுயாட்சியை உள்ளடக்கிய ஒரு தீர்வை நோக்கி நகரவேண்டியுள்ளது. அதற்கான இறுதி சந்தர்ப்பமாக தற்போதைய சூழலை கருதவேண்டியுள்ளது.

தற்போது எமது மாகாணத்தில் காணி அபகரிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, சிங்கள குடியேற்றங்கள் என பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதைவிடுத்து வடக்கு மாகாண சபையில் யார் அமைச்சராக இருக்கிறார், எந்தக் கட்சியை சேர்ந்தவர் அமைச்சராக இருக்கிறார் என்பது இரண்டாம் பிரச்சினைகளே. அதனால் நாம் மக்களது பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில் முதலமைச்சர் ஒரு அரசியல் நோக்கத்திற்காக என்னை அமைச்சர் வாரியத்தில் இருந்து நீக்க தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் நாம் எங்களுடைய மக்களது பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சில முடிவுகளை எடுத்துள்ளோம். தற்போது தமிழ் மக்களது பிரச்சினைகளாக வடக்கில் ஏற்படும் வாள் வெட்டுக்களும், வடக்கு மாகாண சபையில் ஏற்படும் பிரச்சினைகள் என்பவற்றை மக்களது பிரச்சினைகளாக காட்டும் சதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் நாம் அவற்றை புறந்தள்ளி எமது மக்களது பிரச்சினைகளை முன்னிறுத்தி இந்த முதலாவது மாகாண சபையில் முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்படும் அமைச்சர் வாரியத்தில் தமிழரசுக் கட்சி ஆகிய நாம் அமைச்சு பதவிகளை பெறுவதில்லை என முடிவெடுத்துள்ளோம். இந்த தீர்மானத்தை எமது கட்சி தலைமைப் பீடத்திற்கு அறிவித்துள்ளோம்.

இந்த நிலையில், என்னைத் தொடர்ச்சியாக அமைச்சரவையில் இருந்து அகற்ற வேண்டும் என்று முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைக்காகவும், எமது மக்களது பிரச்சினை அமைச்சர் யார் என்பது அல்ல என்பதாலும், எமது கட்சியைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்கள் ஏகமனதாக முதலமைச்சரின் அமைச்சரவையில் பதவி பெறுவதில்லை என்ற தீர்மானத்திற்கு அமைவாகவும் நான் எனது சுகாதார அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்கின்றேன். இந்த இராஜினாமா கடிதத்தை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களுக்கும், தமிழரசுக் கட்சி தலைவருக்கும், முதலமைச்சருக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மின்னஞ்சல் மூலம் தெரியப்படுத்தியுள்ளேன். அந்த வகையில் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சுகாதார அபிவிருத்தி திட்டங்களை முதலமைச்சரின் புதிய அமைச்சர் வாரியம் தொடர்ந்து முன்கொண்டு செல்ல வேண்டும் எனவும் கோரிக்கை விடுகின்றேன் என ப.சத்தியலிங்கம் தனது கருத்தை வெளியிட்டுள்ளார். (செ-250)

டுவதாகவும் தெரியவந்துள்ளது. அமைச்சர் ஒருவரின் அமைச்சு வாகனத்தில் மேற்படி போதைப்பொருள் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த போதைப்பொருட்களில் பாரதூரமான கொக்கையின், அசிஸ், பில், வெளிநாட்டு குடிவகைகளும் இருந்துள்ளன. கைது செய்யப்பட்ட செயலாளர் அடிக்கடி அமைச்சருடன் வெளிநாடுகளுக்கு பிரயாணம் செய்துள்ளார். அதேபோல் அவர் கைது செய்யப்பட்ட போது அவரிடம் அமைச்சின் உத்தியோகபூர்வ அடையாள அட்டையும் இருந்துள்ளது. இந்த நிலையில் கல்கிசை பொலிஸ் பாதுகாப்பில் உள்ள சந்தேக நபரை விடுவிக்குமாறு அதிகாரப் பிரயோகம் இடம்பெறுவதாகவும் தகவல் குறிப்பிடுகின்றன. (செ-11)

## நீதிமன்றத்தை...

பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி இதனை தெரிவித்துள்ளார்.

அனைத்து மாகாண சபைகளினது தேர்தலையும் ஒன்றாக நடத்துவதற்கு தீர் மானிக்கப்பட்டுள்ள நிலையில் பதவிக்காலம் நிறைவடைகின்ற மாகாண சபைகளின் தேர்தலை நடத்த முடியாமல் போகும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மாகாண சபை தேர்தல்கள் பிற்போடப்படுவதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கான [illegible] ளபபடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# பாடசாலைகளில் கண்காணிப்பு சேவை

(கொழும்பு)

அடுத்த வருடம் தொடக்கம் பாடசாலை கண்காணிப்பாளர்களை நியமித்து பாடசாலை கண்காணிப்பு சேவையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் தற்போது 98 ஆக உள்ள வலயக் கல்விப் பணிமனைகளின் எண்ணிக்கையை 200 வரை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாடசாலை கண்காணிப்பு நடவடிக்கைகளை நன்கு முன்னெடுத்து பாடசாலைகளின் பௌதிக மற்றும் மனித வளங்களை உயர்ந்த மட்டத்தில் பேணுவது இதன் நோக்கமாகும் என்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதா கிருஷ்ணன் மேலும் தெரிவித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை நூலகம்



# ஆவா குழு முக்கியஸ்தர்...

குழுவினரால் இரு பொலிஸார் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்த சம்பவத்தை தொடர்ந்து குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தில் பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

குறித்த வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் இதுவரை 6 இளைஞர்கள் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் கொழும்பு வெள்ளவத்தை பகுதியில்வைத்து ஆவா வாள்வெட்டு குழுவின் முக்கிய சந்தேக நபரான விக்டர் என்ற நபர் உட்பட 4 பேர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் தீவிர தேடுதலின் பின் கைது செய்யப்பட்டு. அவர்களிடம் இருந்து பெற்ற மேலதிக தகவலின் அடிப்படையில் மேலும் இருவர் யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் வைத்து நேற்றையதினமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதையடுத்து கொழும்பில் கைது செய்யப்பட்டவர்களை யாழ் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவிடம் பாரப்படுத்துவதற்காக இன்றையதினம் சந்தேக நபர்களை யாழிற்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி கைது செய்யப்பட்டவர்கள் கொக்குவில், இணுவில் பகுதிகளை சேர்ந்த இளைஞர்கள் என்றும், இவர்களிடம் இருந்து தகவல்களை பெற்று மேலும் பலர் கைது செய்யப்படவுள்ளதாகவும் யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் கைதான நபர்கள் மீது இருபதுக்கும் மேற்பட்ட பாரிய குற்றச்செயல்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் காணப்படுவதாகவும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்திருந்தன. (செ-4,9)


## தேவை

திருநெல்வேலியில் உள்ள எமது நிறுவனத்தின் சிறிய விடுதியினை பராமரிப்பதற்கு இரவு மற்றும் பகல் நேர Room Boy (35 வயதிற்கு குறைந்த ஆண்கள்) தேவை.

**தொடர்பு :- 077 953 0496** (062)

## தவறிவிட்டது

திருமண மோதிரம் ஒன்று தாவடி, மானிப்பாய், சண்டிலிப்பாய், சித்தன்கேணி, சுழிபுரம் வீதிப் பகுதிகளில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்து ஒப்படைப்பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**T.P : 076 616 4934** (063)

## இயந்திரங்கள், பக்கோ விற்பனைக்கு

இத்தாலி அரிவு பட்டறை, ஜெனரெட்டர் (இங்கிலாந்து), மர பட்டறை உபகரணங்கள், 200 பக்கோ பிரேக்கருடன் வெல்டிங் பொருட்கள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு :- 077 600 1701** (054)

## ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு : 0767070069**
**M.Suren** (057)

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி - 24.07.2014 முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : அன்னை என்ட் சன்ஸ் (பிறைவட்) லிமிடட்
கம்பனியின் பதிவு இல : PV 99901
பதிவு முகவரி : கடற்கரை வீதி, நாவாந்துறை வடக்கு, யாழ்ப்பாணம்.
கம்பனி செயலாளர் எம்.இராஜநாயகம் (062)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
● ஏனைய சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9206)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

**V2 TRAVELS-0768226240**

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## அரியதோர் வேலைவாய்ப்பு

எமது Dynamic நிறுவனமானது இலங்கையில் இறக்குமதி மற்றும் மொத்த வியாபாரங்களை மேற்கொண்டு வருகின்றது. இந்த நிறுவனமானது **இலங்கையின் வட பகுதியில் 10 புதிய கிளைகள்** ஆரம்பிக்கப்பட விருப்பதனால் அலுவலக ரீதியான வேலையாட்கள் தேவைப்படுகின்றனர். (054)



**தொடர்புகளுக்கு : 077 556 6226 / 076 844 2821**


# திருடர்கள்...

திருடர்கள் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மன்னார், சிலாவத்துறை பிரதேச வைத்தியசாலையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

அமைச்சர் ரவி கருணாநாயக்க மீது குற்றம் சுமத்தும் கூட்டு எதிர்க் கட்சியின் தலைவர்களுக்கு எதிராக தொகையாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நிதி மோசடி, ஊழல், கொலை என்பவையும் அவற்றில் அடங்கும். அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பான சம்பவம் சிறுதுளி அளவிலானது. கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்களுக்கு டுபாய் வங்கிகளில் இருக்கும் பணத்தை பற்றியும் மக்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

ஒரு வங்கிக் கணக்கில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் இருக்கின்றது. செயலாளர் ஒருவரின் வங்கிக் கணக்கில் ஆயிரத்து 800 மில்லியன் டொலர்கள் இருக்கின்றது.

மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரின் வங்கிக் கணக்கில் 500 மில்லியன் அமெரிக்க டொலர் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மிகப் பெரிய திருடர்களே அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பான சம்பவம் குறித்து பேசுகின்றனர். இது வெட்கமான விடயம். நியாயமான தீர்வு எதிர்காலத்தில் கிடைக்கும் எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# முறை...

தொடர்பில் ஏதாவது முறைகேடுகள் இடம்பெற்றால் உடனடியாக அறிவிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முறைகேடுகள் தொடர்பில் 1911 / 011 2784208 அல்லது 0112784537 ஆகிய இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, பரீட்சைகள் நிறைவடையும் வரை பாடசாலைகளில் நிகழ்ச்சிகளை நடத்துதல், நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல், மேலதிக வகுப்புகளை நடத்துதல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் அனுமதியின்றி வேறு நபர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் நுழைவதற்கும் அதே பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்கள் வருகை தருவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பில் விசேடமாக ஆராயப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (செ-11)

# மாகாண சபை...

சட்டமூலங்களைத் திருத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

உரிய காலத்தில் தேர்தல்களை நடத்தி மக்களின் ஆணைக்கு மதிப்பளிக்க வேண்டிய தலையாய பொறுப்பு நாடாளுமன்றத்துக்குள்ளது.

தனது இஷ்டத்துக்கு தேர்தல்களைத் தள்ளிப் போடுவதன் மூலம் அரசு ஜனநாயகத்தை மட்டுமன்றி பொது மக்களின் அடிப்படை உரிமைகளையும் மீறி வருகிறது.

தேர்தலொன்றின் மூலம் தங்களுக்குத் தேவையான அரசொன்றைத் தெரிவு செய்யும் உரிமை மக்களுக்குள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பல்வேறு காரணங்களைக் காட்டி நீண்டகாலமாக இழுத்தடித்து வரும் அரசு இப்போது மாகாண சபைத் தேர்தலிலும் கைவைக்கப் பார்க்கின்றது.

இது பொது மக்களின் உரிமைகளை மட்டுமன்றி தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சிகளினது உரிமைகளையும் பாதிக்கின்றது என தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (செ-11)

# இந்த ஆண்டின் இறுதிக்குள்...

ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், அரசாங்கத்தின் ஆயுள் முடிந்து விட்டது. நல்லாட்சி அரசாங்கத்தின் சவப்பெட்டிக்கு இறுதி ஆணியை அமைச்சர் ரவி கருணாநாயக்க அடித்துள்ளார்.

இனி புதைப்பது மாத்திரமே எஞ்சியிருக்கின்றது. இந்த ஆண்டின் இறுதிக்குள் நாங்கள் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை உருவாக்குவோம்.

அதற்கு ஜனாதிபதியின் ஆசி தேவையில்லை. எப்படியாவது 113 உறுப்பினர்களை சேர்த்துக் கொண்டு நாடாளுமன்றத்தில் நாங்கள் பெரும்பான்மையை நிரூபிப்போம்.

அவ்வாறு நிரூபித்து நாங்கள் பிரதமரை தெரிவு செய்வோம். அதற்கு எவரது ஆசீர்வாதமும் தேவையில்லை.

நாங்கள் பலத்தை காட்டிய பின்னர் அதனை ஏற்க முடியாது என்று கூற காலதேவனுக்கும் முடியாது.

மகிந்த என்னை பதுளைக்கு அனுப்பினார். நான் பதுளையை விட்டு செல்ல மாட்டேன். பதுளையுடன் எனக்கு பெரிய தொடர்புள்ளது என குமார வெல்கம தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# சுகாதார அமைச்சர்...

கள் சந்திப்பின் போதே அமைச்சர் குறித்த விடயத்தை தெரிவித்திருந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடையே நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கூட்டத்தில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் மாற்றியமைக்கப்படும் அமைச்சரவையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்கேற்பதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது.

இந்த முடிவு கட்சியின் மத்திய செயற்குழுவுக்கும் உடனடியாகவே அனுப்பி வைக்கப்பட்டது. கட்சியின் மத்திய செயற்குழு, அமைச்சரவையில் பங்கேற்பதில்லை என்ற முடிவை அங்கீகரித்து உறுப்பினர்களுக்கு அறிவித்ததும், அமைச்சர் ப.சத்தியலிங்கம் தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(பதவி இராஜினாமா தொடர்பாக ப.சத்தியலிங்கத்தின் விளக்கம் உள்ளே...) (செ-4)

# யாழில்...

திட்டமிடப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்கள் என்பனவற்றை கட்டுப்படுத்துவதற்கான விசேட வேலைத் திட்டங்களை அவசியப்படும் நேரத்தில் இராணுவத்தைக் கொண்டு முன்னெடுக்கப்படும் என்றும் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

யாழ். குடா நாட்டில் இடம்பெற்ற தொடர்ச்சியான வன்முறை மற்றும் வாள்வெட்டுச் சம்பவங்களை அடுத்து பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்றைய தினமும் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டிருக்கும் நிலையில் போர்க் காலத்தில் காணப்பட்ட இராணுவப் பிரசன்னம் போன்று ஆயுதம் தரித்த அரச படையினர் 2 வாரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர நேற்றைய தினம் கண்டிக்கு விஜயம் செய்து, மல்வத்துப்பீட மகாநாயகரை சந்தித்து ஆசிபெற்றுக்கொண்டார்.

வரலாற்று சிறப்புமிக்க கண்டி ஸ்ரீ தலதா மாளிகை ரந்தோலி வீதி பெரஹரா நிகழ்வின் இறுதி நாளான நேற்றைய தினத்திற்கான பாதுகாப்பு நடவடிக்கை குறித்து மல்வத்துப்பீட மகாநாயகரிடம் இந்த சந்திப்பின்போது பொலிஸ்மா அதிபர் தெளிவுபடுத்தினார்.

இதன் பின்னர் ஊடகங்களி[illegible] கருத்து வெளியிட்ட பொலிஸ்மா அதிபரிடம் யாழ். குடாநாட்டு பதற்றநிலை குறித்து ஊடகவியலாளர்களால் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, கடந்த சம்பவங்கள் தொடர்பாக நான் வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன். விசேட அதிரடிப் படையினர் அத்தியாவசிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வேறு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்நிலையில் அவர்களுடன் சேர்ந்து எமது அதிகாரிகளும் இணைந்து கடமையாற்றிவருகின்றனர். அதை விடவும் விசேட வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவும் எதிர்பார்க்கின்றே[illegible] திட்டமிடப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் தொடர்பில் விசேட அதிரடிப் படையினரின் பொறுப்புக்களையும் ஏற்று, விசேட திட்டமொன்றை உருவாக்கிவருகின்றேன். அந்த திட்டம் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கிறது. புதிய அதிகாரங்களுடன்புதிய பிரிவொன்றை உருவாக்குகிறேன்.

இதுகுறித்த முழுமையான தகவல்களை விரைவில் வெளியிடுவேன். திட்டமிடப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்கான கைது நடவடிக்கைகளை பலமானதாகவும், திடமான நடவடிக்கையாகவும் தொடர்ச்சியான முன்னெடுப்போமென பொலிஸ்மா அதிபர் பூஜித குறிப்பிட்டிருந்தார். (செ-11)

# கவனயீர்ப்பு...

யாழ்ப்பாணப் பேருந்து நிலையம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ள கவனயீர்ப்பு போராட்டங்களிற்கு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்புத் தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஊடக அறிக்கை ஒன்றினை நேற்று வெளியிட்டுள்ளது. குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தடுப்புக்காவலில் படுகொலை செய்யப்பட்ட அரசியல் கைதிகளான டில்ருக்ஷன், நிமலரூபன் ஆகியோரின் ஐந்தாவது நினைவு தினமான இன்றைய தினம் யாழ்ப்பாணப் பேருந்து நிலையம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெறவுள்ளது.

அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையற்ற வகையில் உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தியும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விலக்கிக் கொள்ளக் கோரியும் தொடர்ச்சியாக நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

இன்று இடம்பெறுகின்ற கவனயீர்ப்புப் போராட்டங்களில் அனைத்து மக்களையும் கலந்து கொண்டு சமூக அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்க அணிதிரளுமாறு அழைத்து நிற்கின்றோம் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)


## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org